கல்கி

5.1.97 KALKI ரூ. 3.00




ஜெ. வழக்குகள் :
தடுமாறுகிறதா
தமிழக அரசு?



அம்ருதாவின்
ஆசை
சானல்!

ஜெ. வழக்குகள்: தடுமாறுகிறதா தமிழக அரசு!



உயர்நீதி மன்றத்தில் ஜெயலலிதாவின் ஜாமீன் மனுக்கள் விசாரணைக்கு வந்த போது, 'ஒவ்வொரு வழக்குக்காகவும் தனித்தனியாகக் கைது செய்து விசாரணை நடத்தி முடிக்க நீண்ட காலம் ஆகும்; ஆகவே புலனாய்வு அதிகாரிகளின் விசாரணைக்கு ஒரு கால எல்லை வைக்க வேண்டும்' என்றனர் அவரது வக்கீல்கள்.

அரசாங்க வழக்கறிஞர் என். நடராஜன், "குற்றம்சாட்டப்பட்டவருக்கு இது போன்ற கோரிக்கை வைக்க எந்த உரிமையும் கிடையாது" என்று எடுத்துரைத்தார். உயர்நீதி மன்றத்தில் அரசு சார்பில் இப்படிச் சொல்லப்பட்டாலும், ஜெயிலுக்குச் சென்று விசாரிக்கும் வேகத்தைப் பார்க்கும் போது, அடுத்த முறை காவலை நீட்டிப்பதற்குள், எல்லா வழக்குகளிலும், ஜெயலலிதாவிடம் விசாரணை முடிந்து விடும் என்றே தெரிகிறது.

இதுவரை, டான்சி ஊழல், மீரா விளம்பர நிறுவனத்துக்குச் சலுகை வழங்கியது, நிலக்கரி ஊழல், சொத்து சேர்த்த வழக்கு ஆகியவற்றில் விசாரணை நடந்து இருக்கிறது. கலர் டெலிவிஷன் பெட்டி வாங்கிய வழக்கில் ஜாமீனும் கிடைத்து விட்டது. இதுவரை விசாரிக்கப்பட்ட எல்லா வழக்குகளிலும் பெரும்பாலும் ஜெயலலிதா சொன்னது 'எனக்குத் தெரியாது' என்ற பதில்தான். 'அமைச்சர்கள் பரிந்துரை செய்தார்கள்; மந்திரி சபை முடிவு' என்றெல்லாம் சில வழக்குகளைப் பொறுத்தமட்டில் சொல்லியிருக்கிறார். "பின்னால் கோர்ட் விசாரணையின் போது பார்த்துக் கொள்ள

எறும்பார் கடிக்கிறார்!

"காங்கிரஸ் கட்சி பொறுமைக்கும் நாகரிகத்துக்கும் பெயர் போனது... நரசிம்மராவை தலைமைப் பதவியிலிருந்து இப்படி திடுதிப்பென்று நீக்கியது, அந்த காங்கிரஸ் கலாசாரத்துக்கும் பாரம்பரியத்துக்கும் விரோதமான செயல்!"

– ஜகன்னாத் மிஷ்ரா



லாம். இப்போது அப்படிச் சொல்லுங்கள்" என்று அவரது வழக்கறிஞர் குழு சொல்லிக் கொடுத்ததாகப் பேச்சு.

"ஜெயலலிதா 'Z' பிரிவு பாதுகாப்பில் இருப்பதால் அவரைக் கைது செய்தாலும் வீட்டில் வைத்தே விசாரிக்க வேண்டும். ஜெயிலில் பாதுகாப்பு கிடையாது; கைது செய்துதான் விசாரிக்க வேண்டுமா?" என்றெல்லாம் கேள்விகள்.

"முன்னாள் அமைச்சர்கள் கைதானபோது அவர்களையெல்லாம் கைது செய்துதான் விசாரிக்க வேண்டுமா?" என்று கேட்காத சிலர் இப்போது ஏன் கேட்கிறார்கள்? Z பிரிவில் இருந்தால் கைது செய்து விசாரணை நடத்தவே கூடாதா? உலகத்திலேயே பாதுகாப்பான இடம் ஜெயில்தான். இப்ப மட்டும் என்ன? ஏதோ போயஸ் தோட்டத்தில் இருப்பது போன்று தானே அங்கும் பந்தா செய்து கொண்டு இருக்கிறார்" என்று எரிச்சலுடன் சொன்னார் ஒரு புலனாய்வு அதிகாரி. "பாதுகாப்பு" என்ற தாரக மந்திரத்தைக் கொண்டே சகல சௌபாக்கியங்களையும் பெற்று விடலாம் என்று கருதுகிறார் போலும் ஜெயலலிதா" என்றும் தொடர்ந்து கூறினார் அவர்.

'பாதுகாப்பை' முன்வைத்து கேள்விகள் எழுப்பப்படுவதால், தமிழக அரசுக்கு பொறுப்பு கூடுதலாகி இருக்கிறது. அவரைக் கோர்ட்டுக்கு அழைத்து வரும் போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஆனால் சில வழக்குகளில் சரண்டர் ஆக செஷன்ஸ் கோர்ட்டுக்கு ஜெ. வந்த போது, போலீசின் மெத்தனத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தது!

நூற்றுக்கும் மேற்பட்ட அ.தி.மு.க. தொண்டர்களை உள்ளே அனுமதித்த போலீஸ், பத்திரிகை நிருபர்களையும், காமிராகாரர்களையும் படாதபாடு படுத்தியது. இதன் விளைவாக என்ன நடந்ததென்றால், ஜெ. கோர்ட்டுக்குள் வரும்போது மக்கள் மத்தியில் நீந்தி வரும் நிலை. ஏன் அந்த நிலை ஏற்பட்டது? போலீஸ் நினைத்திருந்தால் சுமார் அரை கி.மீ. சுற்றளவுக்கு அந்த ஏரியாவையே கிளியர் பண்ணியிருக்க முடியாதா? இதே போலீஸ்தானே ஜெயலலிதா ஆட்சியில் அவர் வெளியில் வரும்போதும், போகும் போதும் ஊரையே அடக்கி வைத்தது? பத்திரிகை புகைப்படக்காரர்களை ஓர் ஒதுக்குப்புறமாக நிறுத்தி வைத்து, வழக்கறிஞர்களைத் தனியாகப் பிரித்து வைத்திருந்தால், எந்தவித நெருக்கடியையும் தவிர்த்திருக்கலாமே!

ஆக, போலீஸிடம் சரியான பிளான் இல்லை; முன்ஜாக்கிரதை இல்லை. அதனால் 'பாதுகாப்பு' என்ற பெயரில் சலுகைகளைப் பெறப் பார்க்கும் ஜெயலலிதாவுக்குச் சாதகமான நிலை உருவாகி இருக்கிறது.

'கோர்ட்டில் மக்கள் கூட்டம் அதிகமாகச் சூழ்ந்து கொள்கிறது. அவர்களில் யாராவது தீவிரவாதி இருக்கலாம். ஆகவே என் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. எனவே போயஸ் தோட்டத்திலேயே கோர்ட் விசாரணையை வைத்துக் கொள்ள வேண்டும்' என்று கூட இனி ஒரு மனுதாக்கல் செய்யப்படலாம்.

"மிகவும் வெளிப்படையாகச் சொல்வது என்றால் ஐந்தாண்டு காலம் நன்றாகச் சம்பாதித்து சுகமாக இருந்தார்கள் போலீஸ்காரர்கள். இப்போது சம்பாதிப்பது கொஞ்சம் கஷ்டமாகி இருக்கிறது. அதனால் ஏற்பட்ட எரிச்சல், பணியில் ஓர் அலட்சியத்தை உருவாக்கி இருக்கிறது. நான் எல்லோரையும் சொல்லவில்லை. திறமையான, நேர்மையான அதிகாரிகள் இன்னும் பொறுப்பில் இருக்கிறார்கள். மிடில் லெவல் (middle level) கொஞ்சம் சரியில்லை" என்று நம்மிடம் சொன்னார் உள்துறை அதிகாரி ஒருவர்.

இந்தப் பிரச்னைகள் ஒரு பக்கம் இருக்க, ஊழல் விசாரணைகள் கொஞ்சம் தடுமாறிக் கொண்டு இருப்பதாக நடுநிலையாளர்கள் கருதுகிறார்கள். உதாரணமாக கலர் டெலிவிஷன் பெட்டி வாங்கிய ஊழலை எடுத்துக் கொள்ளலாம். இதில் மிக முக்கியமான விஷயம், 'ஜெயலலிதா வீட்டில் நடந்த ஒரு மீட்டிங்கில்தான் கலர் டெலிவிஷன் பெட்டிகள் வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது' என்பது. ஆனால் அந்த மீட்டிங் நடந்தது சென்ற வருடம் டிசம்பர் ஐந்தாம் தேதியா அல்லது நவம்பர் முப்பதாம் தேதியா? இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஐ.ஏ.எஸ்.

அதிகாரி, பாண்டேயின் ஜாமீன் மனு விசாரணையின் போது 'மீட்டிங் நடந்தது டிசம்பர் ஐந்தாம் தேதி' என்று அரசு சொன்னது. ஆனால் இதே வழக்கில் ஜெவை கைது செய்த போது ரிமாண்ட் ரிப்போர்ட்டில் 'மீட்டிங் நடந்தது நவம்பர் முப்பது' என்று சொல்லியிருக்கிறது அரசு!

ஏன் இந்த முரண்பாடு? யாரையோ தப்பிக்க வைக்க சில அதிகாரிகள் முயன்றால், இதுபோன்ற விஷயங்களால் மொத்த வழக்குகளும் தூளாகி விடும். ஏற்கெனவே 'கிராம வளர்ச்சித் துறை செயலாளர் நாராயணன் என்பவரை ஏன் கைது செய்யவில்லை? அவர் தானே முடிவாக டெலிவிஷன் பெட்டிகள் வாங்க ஆர்டர் போட்டது?'



• ஜெ. நீதிமன்றத்துக்கு வந்தபோது— (படம்: சாய்வர்ஷா)

என்ற கேள்வி சுற்றி வந்து கொண்டு இருக்கிறது.

அதே போல நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கு. கொஞ்சம் நுட்பமான விஷயம் இது. "புலனாய்வுத் துறை அதிகாரிகள், அதிபுத்திசாலித்தனத்துடன் இயங்க வேண்டிய வழக்கு. கொஞ்சம் இடம் கிடைத்தால், குற்றம்சாட்டப்பட்டிருப்பவர்கள் 'வெளியே' வந்துவிட முடியும்" என்று சொல்கிறார்கள் விஷயம் தெரிந்தவர்கள்.

கண்ணப்பனை மிகத் தாமதமாக கைது செய்தது இந்த வழக்கில் ஒரு பலவீனம் என்றால், 'எல்லா ஏற்பாடுகளையும்' செய்ததாகச் சொல்லப்படுகிற முன்னாள் தலைமைச் செயலாளர் ஹரிபாஸ்கரை அதை விடவும் தாமதமாக கைது செய்தது ஏன்? என்ற கேள்வி கோர்ட் வட்டாரத்தில் வளைய வந்து கொண்டிருக்கிறது. முன்பு ஹரிபாஸ்கரையும், டி.வி. வெங்கட்ராமனையும் விசாரித்த அதிகாரிகள் 'அவர்கள் வாக்குமூலம் கொடுப்பார்கள்' என்று சொன்னார்கள். நீண்ட நாட்கள் வெளியே விட்டு வைத்து விசாரித்ததில் அவர்கள் சாட்சிகளைக் கலைத்திருக்க மாட்டார்களா? இதுவரை கைது செய்யப்பட்ட அனைத்து நபர்களின் ஜாமீன் விசாரணைகளின் போதும் அவர்களுக்கு எதிராக அரசு சொல்லும் ஒரே வாதம் 'அவர்கள் வெளியில் இருந்தால் சாட்சிகளைக் கலைத்து விடுவார்கள்' என்பதுதான். இந்த வாதம் நிலக்கரி ஊழல் வழக்கில் சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படும் அதிகாரிகளுக்குப் பொருந்தாதா?

புலனாய்வு அதிகாரிகளை மட்டும், இது போன்ற நிலைக்காக நாம் குற்றம் சுமத்த முடியாது. டி.வி.ஏ.ஸி. என்று சொல்லப்படும், லஞ்ச ஒழிப்பு போலீஸில் மிகவும் நாணயமான அதி



''தலைவர் மேலே ஒரு டஜன் வழக்குகள் பதிவாகியிருக்குதாமே!''

''ஆமாம், அதான், ஏதாவது சிறப்புத் தள்ளுபடி கிடைக்குமான்னு வக்கீல் கிட்டே கேட்டிருக்கிறார்!''

— வி. ரெங்கநாதன்

காரிகள்தான் பொறுப்பில் இருக்கிறார்கள். ஒரு நாளில் கிட்டத்தட்ட பதினெட்டு மணி நேரம் உழைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு முழு அளவிலான வசதி இன்னமும் கிடையாது. நினைத்த இடத்திற்குச் சென்று வர வாகன வசதி, இன்னமும் கூடுதலான புலனாய்வு அதிகாரிகள், குமாஸ்தா வேலை செய்யப் பணியாளர்கள் எல்லாம் தேவை. இந்தச் சூழ்நிலையில் வேலை பார்க்கும் அதிகாரிகளுக்கு ஆளும் அரசியல்வாதிகளிடமிருந்து வரும் 'வழிகாட்டுதல்கள்' வேறு!

ஜெயலலிதா வீட்டில் இருந்த தங்கம் வெள்ளி உட்பட எல்லாவற்றையும் பகிரங்கப்படுத்திய விஷயத்திலும் புலனாய்வு அதிகாரிகளிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. 'கண்ணப்பன் வீட்டில் சோதனை நடத்தினார்களே, அவர் வீட்டில் கைப்பற்றிய பொருட்களைக் காண்பித்தார்களா?' என்று அ.தி.மு.க.வினர் கேட்கிறார்கள்.

ஆனால் டி.வி.ஏ.ஸி. போலீஸார், 'நிலக்கரி ஊழல் தொடர்பாகத்தான் அவரது வீடு சோதனையிடப்பட்டது. வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கு ஜெயலலிதா மேல்தான் இருக்கிறது. கண்ணப்பன் மீது இல்லை. எனவே இந்தக் கேள்வி சரியல்ல!' என்று சொல்கிறார்கள். இது தவிர, ஜெயலலிதாவின் செயலாளர், சோதனை நடந்த போது போலீஸாரின் செய்திகளை மறுத்து அறிக்கை விட்டதால்தான் போலீஸாருக்கு எல்லாவற்றையும் வெளியே சொல்ல வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதாம்.

ஆனால், அ.தி.மு.க.வினரோ, தங்கள் கட்சியைப் பினக்க வேண்டும்; கட்சியைச் சின்னாபின்னப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில்தான் வழக்குகள் பதிவுசெய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். ''பத்து பர்சண்ட் அமைச்சர்' என்று கண்ணப்பனுக்குப் பட்டப் பெயரே இருந்தது. அமைச்சராவதற்கு முன் அவரது சொத்து என்ன? இப்போது அவரது சொத்து என்ன? அவர் மீது ஏன் சொத்துச் சேர்த்ததாக வழக்குப் பதிவு செய்து விசாரிக்கவில்லை? ஜெயலலிதாவை எதிர்த்துக் கட்சியை பலவீனப்படுத்துகிறார் என்பதால் தானே!'' என்று கேட்கிறார் ஜெ.வின் வழக்கறிஞர் ஒருவர். ''எப்போதோ வாங்கிய சொத்துக்களின் இப்போதைய மதிப்பைப் போட்டு பெரிது படுத்துகிறார்கள்!'' என்றும் சொல்கிறார் அவர்.

ஆனால் லஞ்ச ஊழல் போலீஸார் இதை மறுக்கிறார்கள். ''1969-ல் போயஸ் தோட்டத்து வீடு கட்டப்பட்டது என்பது சரிதான். ஆனால் உள்ளே பளிங்கு மாளிகையாக மாறி, சகல வசதிகளும் செய்யப்பட்டிருக்கிறதே! இதெல்லாம் அப்போதே செய்யப்பட்டதா? கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து 1991-க்குப் பிறகே இவற்றைச் செய்திருக்கிறார்கள். அது போலவே கைப்பற்றப்பட்ட பெரும்பாலான நகைகள் 1991-க்குப் பிறகு செய்யப்பட்டவை என கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது'' என்கிறார்கள் அவர்கள்.

இப்படியாக வழக்குகளுக்கான, சாதக, பாதகமான நிலைகள் விவாதங்களுக்கு உட்பட்டதாகி இருக்க, ஜெ. கைது, தொடர்பான விஷயங்கள்'' எந்த அளவுக்கு அரசியல்ரீதியாக ஜெ.வுக்கு அனுதாபத்தையும், ஆதரவையும் தேடித் தரும் என்ற கேள்வி தி.மு.க. வட்டாரங்களிலும் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. 'விசாரணைக் கமிஷன் போடுவார்கள். அப்படியே காலத்தைக் கடத்தி விடலாம்' என்று கருதிக் கொண்டிருந்த ஜெ.வுக்கு, எடுத்தவுடன், குற்றவியல் சட்டங்கள்படி வழக்குப் பதிவு செய்து, விசாரணை, கைது என்று நடவடிக்கைகளைத் தொடர்ந்தது ஒரு பயங்கர ஷாக்தான்!

என்றாலும் ஜெ. சம்பந்தப்பட்டவர்கள் மேலும் ஜெ.வை எதிர்ப்பவர்கள் மேலும் அரசு தனித்தனியான பார்வைகளைக் கொண்டிருப்பது போல்தான் நடைமுறை இருக்கிறது என்பதையும் பலரும் அறிந்துதான் இருக்கிறார்கள். ஊழல் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட்டாக வேண்டும். அரசின் குளறுபடிகளால் அவர்கள் தப்பித்து விட்டால் அதற்கான விலையைத் தி.மு.க.வும் மக்களுக்குத் தர வேண்டியிருக்கும்! இதைக் கலைஞரும் முழுமையாக உணர்ந்திருப்பார் என்றே நம்புகிறோம்.

— ப்ரியன்

'தாகம் தாகம்' நிகழ்ச்சியை ராஜ் டீவியில் பார்ப்பவர்களுக்கு அம்ருதா ராமைத் தெரியாமல் இருக்க முடியாது. அதன் நாயகி அவர்தான். அதாவது நிகழ்ச்சித் தொகுப்பாளர். நிகழ்ச்சியில் படபடவென்று பொரிந்து தள்ளும் அவர் நேரில் எப்படி? (டீ.வி.நிகழ்ச்சித் தொகுப்பாளர்களால்தான் அறுக்க முடியுமா என்ன...)

அம்ருதாவின் ஆசை சானல்!

"வாங்க, வாங்க..." என்று வரவேற்கிறபோதும் நிகழ்ச்சியில் தெரியும் அதே படபடப்புத்தான்!

"ஆமாம், இது மாதிரி படபடப்பாகப் பேசுவதென்பதை நிகழ்ச்சிக்காகவென்று ஒத்திகை பார்த்துப் பழகிக் கொண்டீர்களா, என்ன?"

"நோ, நோ... என் இயல்பே அப்படித்தான்! ஒரு விஷயம் சொன்னால் நீங்கள் அதிர்ச்சியடைய மாட்டீர்களே?"

"இல்லை. தைரியமாகச் சொல்லுங்கள்."

"நான் படித்தது ஆங்கில மீடியம். செகண்ட் லாங்வேஜாகப் படித்தது ஹிந்தி. அதனால் தமிழில் பேசவும் படிக்கவும்தான் வருமே தவிர எழுத வராது."

"நீங்கள் தமிழச்சிதானே?"

"சுத்தமான தமிழச்சிதான். பள்ளி, கல்லூரியில்தான் தமிழ் படிக்கவில்லை என்றால் சுற்றியிருந்தவர்களாவது தமிழ் பேசினார்களா என்றால் அதுவும் இல்லை. அனைவரும் ஹிந்திக்காரர்கள். அதனால்தான் இந்த நிலை!"

"அதிர்ச்சி எங்களுக்கு ஏற்படவில்லையென்றாலும் இதைத் தமிழ்க் குடிமகன் படித்தால் கண்டிப்பாக அதிர்ச்சியடையத்தான் செய்வார். அது சரி, உங்கள் அப்பா ராம் என்ன செய்கிறார்?"

"ராமா... என் அப்பாவா! ஐயோ, அவர் என் கணவர். சினிமாவில் நடிக்கிறார்."

"உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா என்ன?"

"நான்கு வயதில் நிதின். சிஷ்யாவில் படிக்கிறான்."

"உங்களைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே!"

"என் அம்மாவுக்கு அறுபத்து மூன்று வயது. பார்த்தால் நாற்பதுதான் சொல்வீர்கள்..."

"................................."

"என் அம்மாவின் வயதை வைத்து என் வயதைக் கணக்குப் போட வேண்டாம். நான் ரொம்பவும் லேட்டாகத்தான் பிறந்தேன். என் தங்கை +1 தான் படிக்கிறாள்!"

"நீங்கள் என்ன படித்தீர்கள்?"

"ஸ்டெல்லாவில் பி.எஸ்ஸி., மைக்ரோ பயாலஜி. எம்.எஸ்ஸி படித்துவிட்டு ஸ்டேட்ஸ் போகலாமென்று நினைத்திருந்தேன்."

"அப்புறம் ஏன் படிக்கவில்லை?"

"நான் பி.எஸ்ஸி., இரண்டாம் ஆண்டு படிக்கும்போது..."

படபடப்பெல்லாம் குறைந்து கொஞ்சம் வெட்கம் படருகிறது அவர் முகத்தில்.

"என்ன ஆயிற்று?"

"காதல்."

"உற்சாகமான விஷயம்தானே! அதற்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்?"

"கல்ச்சுரல் புரோகிராமில் அவரை(ராம்) சந்தித்தேன். உடனே காதல் வந்து விட்டது."

"கண்டதும் காதல் என்பது சாத்தியம்தானா?"

"சாத்தியம்தான் என்பதற்கு நானே சாட்சி."

"அப்படியொரு காதல் ஏற்படுவதற்கு அவரிடம் உள்ள எது உங்களை ஈர்த்தது? அழகா, குணமா, படிப்பா..."

"எல்லாமே. எதுவென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது."

"அவருக்கும் அப்படித்தானா?"

"ஆமாம்."

"'ஐ லவ் யூ' என்கிற விஷயத்தை யார் முதலில் சொன்னீர்கள்?"

"நான்தான்!" – ரொம்ப ரொம்ப வெட்கத்துடன் சொல்கிறார்.

"காதல் வந்த பிறகு...."

"கல்யாணம்தான் எங்கள் இருவரின் லட்சியமாகவும் இருந்தது. அதனால் வெறும் டிகிரியோடு படிப்பை முடித்துக் கொண்டேன்."

"காதல் என்றால் எதிர்ப்பு இருக்க வேண்டும் என்பார்களே?"



"இல்லை. இருதரப்புப் பெற்றோருமே பச்சைக் கொடி காட்டி விட்டார்கள்."

"அப்புறம் எப்படி நிகழ்ச்சித் தொகுப்பாளரானீர்கள்?"

"முதலில் மேடைகளில் நடக்கும் நிகழ்ச்சிகளின் தொகுப்பாளராகத்தான் இருந்தேன். பிறகு சன் டீவி, ஜெஜெ.டீவி, இப்போது ராஜ் டீவி."

"நீங்கள் படபடவென்று பொரிந்து தள்ளுவதைக் குறிப்பிடும் ரசிகர்கள், நீங்கள் ஒல்லியாக இருப்பது பற்றியும் குறிப்பிடுவார்களே..."

"நிறையப் பேர் சொல்கிறார்கள். இன்னும் கொஞ்சம் சதை போடலாமென்று!"

"அதில் என்ன தயக்கம்?"

"நானா மாட்டேனென்கிறேன். என் உடல்வாகே அப்படித்தான். என்ன சாப்பிட்டாலும் சதை போட மாட்டேனென்கிறதே! சிலர் சொன்னார்கள், குழந்தை பிறந்தால் சதை போடுமென்று. அப்படியும் போடவில்லை."

"இரண்டாவது குழந்தையில் போடலாமோ என்னமோ..."

"நோ. நோ. ஒரு குழந்தையே போதும்."

"'தாகம் தாகம்' நிகழ்ச்சியில் நேயர்கள் கூறிய மறக்க முடியாத 'தாகம்' எது?"

"என்னைப் பொறுத்தவரை, ஒரு பெண் நானூறு பவுன் நகைகளை அணிந்து கொண்டு உஸ்மான் ரோட்டில் நடக்க வேண்டும் என்றதுதான். அப்புறம், ஒரு மாணவி, தான் ஆசிரியையாக இருந்து, ஆசிரியைகளை மாணவிகளாக உட்கார வைத்துப் பாடம் எடுக்க வேண்டும் என்று சொன்னது!"

"ஆசிரியைகளெல்லாம் மனமுவந்து ஒப்புக் கொண்டார்களா?"

"பெசன்ட் நகரிலுள்ள வித்ய விநயா விநோதா பள்ளியில்தான் அதை எடுத்தோம். ஆசிரியைகளெல்லாம் அசல் மாணவிகளைப் போலவே நடந்து கொண்டு பரிபூரண ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். அதையும் என்னால் மறக்கவே முடியாது."

"புத்தாண்டில் உங்களுடைய திட்டம் என்ன?"

"நான் அப்படியெல்லாம் திட்டம் போடுபவள் அல்ல. அன்றன்றைய விஷயம் அன்றன்றைக்கு. எனக்குக் கடவுள் நம்பிக்கை நிறைய என்பதால் எல்லாம் நடக்கிறபடிதான் நடக்கும். எல்லாம் நல்லபடியாகவே நடக்கும் என்பதால் நாளை பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை."

"ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. நீங்கள் இப்படிச் சொல்வது. சரி, இன்றைய பெண்களிடம் தங்களைப் பற்றிய விழிப்புணர்வு அதிகம் வந்து கொண்டிருக்கிறதே. அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"நான் பெண் என்பதில் எப்போதும் நான் விழிப்புடன்தான் இருக்கிறேன்."

"ஆணாதிக்கம், பெண் விடுதலை, யாரும் யாருக்கும் இளைத்தவர்கள் இல்லை..."

"ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால் அதில் ஆணும் பெண்ணும் பிஃப்டி பிஃப்டி என்று இருக்கவே முடியாது. கூடக் குறையத்தான் இருக்கும். அதிலெல்லாம் தராசு வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது."

"உங்கள் வீட்டில் எப்படி?"

"நாற்பது அறுபது என்கிற விகிதம்தான்."

"யார் நாற்பது? யார் அறுபது?"

"நான் நாற்பது. அவர் அறுபது."

"சரி. 'தாகம் தாகம்' என்கிற நேயர்களின் தாகத்தைத் தீர்த்து வைக்கிற நிகழ்ச்சியின் தொகுப்பாளராக இருக்கிற உங்களுக்கு ஏதும் தாகம் இருக்கிறதா?"

"இல்லை."

"நிஜமாகவா?"

"நிஜமாகவே இல்லை."

"தாகம் என்பது பெரிய விஷயமாக இருக்கலாம். ஆசை என்று கூடவா ஏதும் இல்லை?"

"ஆசை உண்டு. அதுதான் V சானலில் நிகழ்ச்சித் தொகுப்பாளராக வேண்டும் என்பது."

"வாழ்த்துக்கள்!"

"நன்றி."

- பிரின்ஸ்

அட்டை வண்ணப்படமும் படமும் : **யோகா**

டெல்லியில் ஓர் அதிசயம்!

நடமாடும் இஸ்திரி வண்டி, நடமாடும் உணவகம், நடமாடும் நூலகம் என பலவற்றைப் பார்த்திருக்கிறோம். புது டெல்லி கிஷன் கன்ஞ் பகுதியில் ஒரு நடமாடும் கழிப்பறை மற்றும் குளியறை செயல்படுகிறது! தில்லி மாநகராட்சியின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது! மிக சொற்பமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. எட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் தான் அனுமதிக்கப்படுவர். குளியலறையை உபயோகிப்பவர்களுக்கு இலவசமாக சோப் வழங்கப்படுகிறது. ஷவர் வசதி உண்டு. பராமரிப்பு அருமை! ஏழை எளியவருக்காகவே குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை!

தகவல்: அஜந்தா மஹேந்திரநாத் ராவ்



ஒருவர் என்னிடம் நாயை விற்க வந்தார். "என்ன விலை?" என்று கேட்டேன். "பத்தாயிரம் ரூபாய்" என்றார். "அப்படியென்ன அதிசயமான நாய்?" என்று கேட்டேன். "மற்ற நாய்களைவிட அதிகமாக நன்றி உணர்ச்சி உள்ளது" என்றார் அவர்.

"அதை எப்படித் தெரிந்து கொள்வது?" என்று நான் கேட்டேன்.

"ஏன் சந்தேகப்படுகிறீர்கள்? இந்த நாயை இதுவரை பத்துப் பேரிடம் விற்றிருக்கிறேன். ஆனாலும் ஒவ்வொரு தடவையும் என்னிடமே திரும்பி வந்து விட்டது என்றால் இதன் நன்றி உணர்ச்சியை நீங்கள் புரிந்து கொள்ளலாம்" என்றார்.

– "நகைச்சுவை நந்தவனம்" என்ற நூலிலிருந்து: எஸ்.எஸ். பூங்கதிர்

புகழ்பெற்ற கவிஞர் இக்பால் சிறுவனாக இருந்த போது, ஒரு நாள் பள்ளிக்குத் தாமதமாக வந்தார். ஆசிரியர் அவரிடம் "இக்பால் தாமதமாக வரலாமா?" எனக் கேட்டார். இக்பால், "ஐயா, இக்பால் தாமதமாகத் தானே வரும்?" எனப் பணிவுடன் சொன்னார்.

ஆசிரியர் அதன் பொருளைப் புரிந்து கொண்டு, இக்பாலை புன்முறுவலுடன் அனுமதித்தார்.

இக்பால் என்ற உருதுச் சொல்லுக்குப் புகழ் என்று பொருள்.

– பா. குணா.

புதிதாக வடித்த சாதத்தின் வாசனை சில பூக்களிலும் விநோதமாக புலிகளிடமும் உள்ளன. வாலைத் தூக்கி பின்புறமுள்ள சுரப்பியிலிருந்து வெள்ளை திரவத்தை புலி மரத்தில் பீய்ச்சுகிறது. இனிப்புக் கலந்த அரிசி வாசனைக்கும் இதற்கும் தொடர்பு உண்டு. இரண்டும் ஒரே வேதிமூலக்கூறுகள் தான். புலிகள் ஒன்றுக்கொன்று தகவல் பரிமாறிக் கொள்ள இந்த வாசனை திரவத்தைப் பரப்புகின்றன!

நன்றி: கலைக்கதிர்

உங்கள் வளமான எதிர்காலத்திற்கு எங்கள் விசேஷ சேமிப்புத் திட்டம்

சில்வர் டெபாசிட் திட்டம்



இன்றே எங்களிடம் ஒரு டெபாஸிட்டைத் துவக்கி,
வளமான மகிழ்ச்சியான வருங்காலத்தை எதிர்நோக்குவீர்

EXPRESS
FINANCIAL EXCHANGE LIMITED

பாங்க் ஆப் அமெரிக்காவின் சார்பு நிறுவனம்

- வாகனங்களுக்கான கடன்கள்
- பங்குகள் மீதான கடன்கள்

அங்கீகரிக்கப்பட்ட டீலர் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிராவலர்ஸ் செக்குகள்

பதிவு அலுவலகம்: நெ. 9, அட்லேப் டவர், தெற்கு போக் சாலை, சென்னை-600 017.
போன்: 4340325, 4340329, 4341403, ஃபாக்ஸ்: 4341518.

• சென்னை • ஹைதராபாத் • விஜயவாடா • விசாகப்பட்டினம் • பெங்களூர் • திருச்சி
• கும்பகோணம் • கோயம்புத்தூர் • பாண்டிச்சேரி

1996 மார்ச் 4ந் தேதி எகனாமிக் டைம்ஸில் வெளியான எமது சட்ட பூர்வ விளம்பரத்தைத் தொடர்ந்து இந்த விளம்பரம் வெளியாகிறது.




• சேஷபட்டாசார்யார்

வழக்கமாக அந்த நேரத்துக்கெல்லாம் சாயங்கால பூஜைக்காக, திருவரேஸ்வரரின் சன்னதியில் ஆஜராகி இருப்பார் சாமி முதலியார். அன்று முடியவில்லை.

டச்சுக்காரர்களுக்கு துபாஷியாக வேலை பார்த்து வந்தார் முதலியார். காஞ்சிபுரத்து கைத்தறி நெசவாளர் ஒருவர், டச்சுத் தளபதிக்கு கைத்தறி மற்றும் பட்டு நெசவைப் பற்றி எடுத்துச் சொல்ல ஏகப்பட்ட நேரம் எடுத்துக் கொள்ளவே, அதனால் ஏற்பட்ட தாமதத்தால் எங்கே அன்றைய பூஜையில் கலந்து கொள்ள முடியாமல் போய்விடுமோ என்று ரொம்பவும் படபடப்பாகிவிட்டார். ஒருவழியாக அது முடிந்ததும் ஓட்டமும், நடையுமாக மணல் பரந்த சதுரங்கப்பட்டி னத்து வீதிகளில் விரைந்து கொண்டிருந்தார் அவர். அப்படியொரு பக்தி.

விஜய நகர சாம்ராஜ்யம் தெற்கே வியாபித் திருந்த போது, பட்டி தொட்டிகளெல்லாம், ஈஸ்வரனுக்கும், பெருமாளுக்கும் பல கோயில் கள் கட்டப்பட்டன. பக்தி செழித்திருந்தது. அப்போது கட்டப்பட்ட கோயில்களில் ஒன்று தான் சதுரங்கப்பட்டினத்திலுள்ள திருவரேஸ் வரர் கோயில். விஜய நகரப் பேரரசு வீழ்ந்த பின் இடைப்பட்ட காலத்தில் கோயிலைக் கவனிக்க அரசனும் இல்லை; [illegible]



• வெங்கடேச குருக்கள்

இல்லை. மூலஸ்தானத்தை ஒட்டி மிகச் சிறிய மண்டபம்; குட முழுக்குக்காகக் காத்திருந்த கோபுரம். இதுதான் சாமி முதலியார் காலத்திய நிலை! சன்னதியில் மனம் ஒன்றி வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சாமி முதலியாருக்கு "கோயில் திருப்பணிக்கு டச்சுக்காரர்களிடம் உதவி கேட் டால் என்ன!" என்ற கேள்வி பொறி தட்டியது.

மறுநாள் காலை முதல் வேலையாக கோட் டைக்குச் சென்று, தளபதியைச் சந்தித்து, கோயிலின் நிலைமையை விளக்கி உதவி கேட் டார் முதலியார். அவர் மேல் மிகுந்த அபி மானம் வைத்திருந்த அந்த டச்சுத் தளபதி பொன்னையும், பொருளையும் அள்ளித் தந்தான். குடமுழுக்கு பிரமாதமாக நடந்தது.

இது நடந்தது 16ம் நூற்றாண்டில். அப் போது சாமி முதலியாரால் கட்டப்பட்ட வெளி மண்டபம் இன்னமும் உறுதியாக இருக் கிறது. ஒரு தூணில் முதலியார் உருவத்தையே செதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சன்னதி களின் சுற்றுச் சுவர்கள் ஆங்காங்கே விரிசல் களோடு காட்சியளிக்கின்றன. ஈசன் மற்றும் அம்பிகை சன்னதிகளின் மேலுள்ள விமானங் கள் எப்போது விழுந்து விடுமோ என்ற நிலை யில் பார்ப்பவர்களை பயமுறுத்தியபடி நிற்கின் றன. பிராகாரத்தை ஒட்டிய சுற்றுச் சுவர்கள் ஆங்காங்கே இடிந்து போயிருக்கின்றன. எப்போதோ அடித்த காற்றில் விழ்ந்து விட்ட துவஜஸ்தம்பத்தை மீண்டும் நிறுத்தி வைக்கக் கூட முடியாத நிலை!

• கோட்டை



"இது தான் சார் யாகசாலை, மடப்பள்ளி!" என்று குட்டிச் சுவர்களோடு நிற்கும் அறை களைக் காட்டுகிறார்கள். யார் திருப்பணியா



• சிவன்கோயில்


கவோ செய்யப்பட்ட வாகனங்கள். ஒரு மூலையில் உப யோகிக்கவே முடியாத நிலையில் உளுத்துப் போய்க் கொண்டிருக்கின்றன. கொடி மரம் (துவஜஸ்தம்பம்) இல்லாததால் கோயிலை விட்டு உற்சவர் வீதிகளில் வர முடியாத நிலை. இதனால் விசேஷ நாட்களில் உற்சவர் பிராகாரத்தை வலம் வந்து விட்டுக் கோயிலுக்குள் போய் விடுகிறார்.

"இந்தக் கோயிலுக்கு பூஜை செய்வதற்காகவே சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வந்து குடி அமர்த்தப்பட்டவர்கள் எங்கள் முன்னோர்கள். ஊரில் ஒற்றுமை இல்லை. இருந்தால் கோயிலை பிரமாதமாக வைத்துக் கொள்ளலாம்" என்று சொல்கிறார் வெங்கடேச குருக்கள்.

கோயில் பணியாளரான சிவாவின் தனிப்பட்ட அக்கறை காரணமாக, சுற்றுச் சுவர் கட்டப்பட்டு வருகிறது. "டச



• பெருமாள் கோயில



ஸ்தலம் நாயன்மார்களால் பாடல் பெற்ற ஸ்தலம் அல்ல; அபிமான ஸ்தலம் தான். கோயிலின் வரலாற்றைப் பற்றிய ரொகார்ட் ஸும் கிடையாது. எல்லாமே செவிவழிச் செய்திகள்தான். டச்சுக்காரர்களின் பரந்த மனம் காரணமாக கோயில் பயன் பெற்றிருக்கிறது என்று சொல்லலாம். 1974ம் ஆண்டிலேயே அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் வந்து விட்டது இந்தக் கோயில். இப்போது

டச்சுக்காரர்களின் அக்கறை; நம்மவர்களின் அலட்சியம்!

ஜாலி போட்டி – 19
முடிவு

பொருத்தமான பட்டங்கள்:

1. சு.சுவாமி – ரப்சர் மன்னன்
2. ராமதாஸ் – பால்வார்க்கும் வள்ளல்
3. ஜெயலலிதா – அறிக்கை அணங்கு
4. தேவே கௌடா - நித்திரை நாயகர்
5. வாழப்பாடி - தாவல் திலகம்
6. குமரி அனந்தன் – சோக சுந்தரர்.

சரியான விடை எழுதியவர்களுள் குலுக்கல் முறையில் தேர்வாகி ரூ.5000 பரிசு பெறும் வாசகர்:

வி. மாயகிருஷ்ணன்,
உத்திரக்குடி,
கழவந்தோண்டி (அஞ்சல்)
திருவள்ளூவர் மாவட்டம் - 621 802

யாராவது திருப்பணி செய்ய விருப்பப்பட்டாலும் கூட, அதற்கென்று சில வழிமுறைகள் இருக்கின்றன. இந்த சிக்கலான வழிமுறைகள் காரணமாகவே பலரும் எடுத்துச் செய்யத் தயங்குகிறார்கள்!" என்கிறார் சிவா.

நான்கு தெருக்கள் தள்ளி இருக்கும் மலை மண்டல பெருமாள் உடனுறை பெருந்தேவி தாயாரின் கோயிலின் நிலையும் கிட்டத்தட்ட இதுதான். இங்கே சற்று மேடான இடத்தில் மூலவர் இருப்பதால் பெருமாளை கிரிவரதர் என்றும் சொல்கிறார்கள்.

திருவரேஸ்வரர் கோயில் கட்டப்பட்ட அதே கால கட்டத்தில்தான் இந்தக் கோயிலும் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கட்டுமான அமைப்புகள் தெளிவு படுத்துகின்றன. 1950களில் சிலகாலம் விளக்குக் கூட ஏற்ற ஆட்களின்றி மூடிக்கிடந்த கோயிலை, தமது சொந்த முயற்சியால் 1959ல் மீண்டும் திறந்தவர் சேஷ பட்டாசார்யார்.

"12 ரூபாய் சம்பளம் கொடுக்கணும், பரம்பரைத் தர்மகர்த்தா. ஆனால் பல மாதங்கள் கொடுத்ததே கிடையாது. பெருமாள் பேரைச் சொல்லியே அவர் 'சாப்பிட்டுக்' கொண்டிருந்தார். இப்படிப்பட்ட நிலையில் திருப்பணிகள் எப்படி நடக்கும்?" என்று கேட்கிறார் அவர்.

"இங்கு பெருமாள், ஈஸ்வரன் கோயில்கள் தவிர, காமாட்சி அம்மன் கோயிலும் உண்டு. அம்மன் கோயிலுக்கு மட்டும் எந்தக் குறைபாடும் கிடையாது. காரணம், ஊரை ஒட்டி கல்பாக்கம் அணுமின் நிலையப் பணியாளர்களின் பெரிய குடியிருப்பு வளாகம் இருக்கிறது. அதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்த போது, காமாட்சி அம்மன் கோயில் அந்த வளாகத்துக்குள் இடம் பெற்று விட்டது. அணுமின்நிலைய ஊழியர்கள் அந்தக் கோயிலை பிரமாதமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்கிறார் சிவா.

மண்வளம் காரணமாக, தென்னையும் வாழையுமாக ஊரே பசுமையாகக் காட்சியளிக்கிறது. கடற்கரையை ஒட்டிய டச்சுக் கோட்டையில் குட்டிச் சுவர்களும் இடிந்து கொண்டிருக்கின்ற குதிரை லாயங்களும் தான் மிச்சமிருக்கின்றன. பிரிட்டிஷ் மற்றும் டச்சுக்காரர்களுக்கு இடையே நடந்த சண்டையில் உயிர்விட்ட பதினான்கு வீரர்களின் சலவைக் கல் சமாதிகள், சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு, தொல்பொருள் துறையினரால் கவனமாக பாதுகாக்கப்படுகின்றன. கோட்டையின் வாசல் பூட்டப்பட்டிருந்தாலும், உள்ளே போக, சுற்றிலும் குறைந்தபட்சம் பத்து வழிகளாவது இருக்கின்றன. அதனால் கோட்டை பாழடைந்த வண்ணமே இருக்கிறது. பிரிட்டீஷ்காரர்களுக்கு சென்னப்பட்டினம் மெட்ராஸ் ஆனபோது, டச்சுக்காரர்களுக்கு சதுரங்கப்பட்டினம் சத்ராஸ் (Sadras) ஆனது.

இப்படி பழம்பெருமை வாசனையோடு இருக்கும் சதுரங்கப்பட்டினத்தில் வேறு பிரச்னைகளும் இல்லாமலில்லை. "முக்கியமாக மேல்நிலை வகுப்புகள் கொண்ட பள்ளி இங்கு வேண்டும். அதற்காக மாணவ, மாணவிகள் 15கி.மீ.க்கு மேல் பஸ்ஸில் போக வேண்டியிருக்கிறது. சாலை மறியல் போன்ற போராட்டங்களுக்குப் பிறகு இப்போது சென்னை செல்லும் பேருந்துகள் பஸ் ஸ்டாண்டை தொட்டு விட்டுச் செல்கின்றன. ஆனால் கல்பாக்கத்திலேயே பஸ் நிறைந்து விடுவதால் இங்கே ஏறுபவர்கள் சென்னை வரை நின்று கொண்டேதான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இன்னும் கூடுதல் பஸ்களை இங்கிருந்தே விட வேண்டும். பஞ்சாயத்திலும் நிதிப் பற்றாக்குறை. அடிப்படை தேவைகளுக்கே நிதி தேட வேண்டிய நிலை" என்று சொல்கிறார் பஞ்சாயத்துத் தலைவரும் தமிழக முதல்வரின் உடன் பிறப்புமான சண்முகம்!

ஊரை விட்டுத் திரும்பும் போது பலரும் நம்மிடம் சொன்னது இதுதான்: "கோயில் திருப்பணியில் டச்சுக்காரர்களுக்கு இருந்த அக்கறையில் சிறிதளவாவது நமக்கு இல்லையே!"

- ஸ்ரீநிவாசன்

படங்கள் **ஸ்ரீஹரி**

ஆபத்தை வெளியேற்றும் மருத்துவமனைகள்!

ஆந்திரப் பிரதேச மாகக் கட்டுப்பாட்டு வாரியம், ஹைதராபாத்திலுள்ள நான்கு பெரிய மருத்துவமனைகள் மீது, மாகக் கட்டுப்பாட்டை மீறியதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இங்கே, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், குறிப்பாகச் சென்னை நகரில், மாகக் கட்டுப்பாட்டு விஷயத்தில் மருத்துவமனைகள் எப்படிச் செயல்படுகின்றன?

"இங்கேயும் நிலைமை படுமோசம்தான். புகழ்பெற்ற பெரிய மருத்துவமனைகளும் கூட இதற்கு விலக்கல்ல!" என்கிறார் வி.என். சுப்பிரமணியன். மத்திய – மாநில மாகக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளர் வி.என்.எஸ்.

"பொதுவாகக் கழிவுப் பொருட்களை முனிசிபல் வேஸ்ட் என்று சொல்லுகிறோம். வீடுகளிலிருந்தும் கல்யாண மண்டபங்களிலிருந்தும் கொட்டப்படும் அழுகும் பொருட்கள், காகிதக் குப்பைகள், பிளாஸ்டிக் பைகள் எங்கெங்கு குவிக்கப்படுகிறதோ, அவற்றை நகராட்சி ஊழியர்கள் எடுத்துச் சென்று அப்புறப்படுத்துகிறார்கள். இதில் கலக்கக்கூடாத மருத்துவமனைக் கழிவுகளையும், மருத்துமவனை நிர்வாகங்கள் சர்வசாதாரணமாகக் கலந்து கொட்டி வருகின்றன. இவற்றை பயோ-மெடிகல் வேஸ்ட் என்று பொதுவாகச் சொல்லுவார்கள். இவற்றால் தொற்றுநோய்கள் பரவ அதிக வாய்ப்பு இருக்கிறது!" என்று காட்டமாகச் சொல்லுகிறார் வி.என்.எஸ்.

கூரான பிளேடுகள், ஊசிகள், ரத்தம் தோய்ந்த பஞ்சுக் கற்றைகள், பிளசன்ட்டா, அறுவைச் சிகிச்சைக்குப் பின் உடலிலிருந்து வெளியேற்றப்படும் பாகங்கள், சதைத் துண்டங்கள், லேபரடரி கழிவுகள், ரசாயனக் கழிவுகள், காலரா போன்ற அபாய நோய் தாக்குண்ட நபர்களின் கழிவுகள், உபயோகித்தது போக மீதமாக வீசப்படும் மருந்துகள், திட–திரவக் கழிவுப் பொருட்கள் என்று ஏராளமாகக் கொண்டு வந்து மருத்துவமனை வாயிலில் இருக்கும் மாநகராட்சிக் குப்பைத் தொட்டியில் கொட்டி விட்டுப் போகிறார்கள்.

"இப்படிக் கொட்டக்கூடாது என்று பட்டியல் இடப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை, 13ஐத் தாண்டி விட்டது. மத்திய மாகக் கட்டுப்பாட்டு வாரியம் தவிர, உச்சநீதி மன்றமும் அங்கீகரித்த பட்டியல் இது!" என்கிறார் வி.என்.எஸ்.

மருத்துவமனைக் கழிவுகளைத் தனியே எடுத்துச் சென்று குறிப்பிட்ட உச்சமான உஷ்ணநிலையில் எரித்துவிட வேண்டும். இதற்கு 'இன்ஸினரேடர்' வைத்திருப்பார்கள். அதில் புகைபோக்கி மாதிரியான அமைப்பு இருக்கும். மாகக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு இவை செயல்படுவதால் பாதிப்பு அதிகம் இருக்காது. ஆனால் மேற்கத்திய நாடுகளில், இந்த இன்சினரேடர் முறையைக் கூட ஏற்பதில்லை. அதிலும் சில பாதகங்கள் வரும் என்பதால், 'ஆட்டோக்ளேவிங்' முறையைப் பின்பற்றுகிறார்கள். பெரிய தொட்டியைக் கட்டி கழிவுகளை அந்தத் தொட்டியில் போட்டு, உயர் அழுத்த நீராவி மூலம் சுத்திகரித்து விடுகிறார்கள். இதில் அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படும் கத்திகள், பிளேடுகள் முதலியன கூட, அப்பழுக்கின்றி டிஸ்இன்ஃபெக்ட் ஆகி

விடுகின்றன. அப்படியும் அவை மறுபடி உபயோகிக்கப்படுவதில்லை. நகருக்கு வெளியே அதற்கென ஒதுக்கப்பட்டு இருக்கும் பகுதியில் எரிக்கப்படுகின்றன. அல்லது புதைக்கப்படுகின்றன!"

இங்கே நிலைமையே வேறு.

"அப்படியானால் ரேடியோ ஆக்டிவ் கழிவுகளும் இருக்குமே? அவற்றை என்ன செய்வார்கள்? அவை இன்னும் ஆபத்தானவை அல்லவா?" என்று (பயந்தபடியே) கேட்டோம்.

"நல்லவேளையாக, பம்பாய் பாபா அடாமிக் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் குறிப்பிட்ட இடைவேளைகளில் வந்து பரிசோதிக்கிறார்கள். அதனால் அந்த விஷயத்தில் மட்டும் ஜாக்கிரதையாக இருப்பார்கள்!" என்கிறார் வி.என்.எஸ்.

பல மருத்துவமனைகளில் சம்பளம் இல்லாத ஊழியர்கள் இருப்பார்களாம்! அவர்கள், வெளியேற்றப்படும் இந்த ஊசிகள், இரத்தம் அடைக்கப்பட்ட பி.வி.சி. உறைகள், போன்றவற்றை எடுத்துப் போய்ச் சுத்தம் பண்ணி, மறுபடி விற்று விடுவார்களாம்! இது இன்னும் பெரிய ஆபத்து.

மருத்துவமனைகளில் பல துறைகள் இருக்கின்றன. ஆனால் வேஸ்ட் மானேஜ்மெண்ட் என்று ஒரு துறை இருக்க வேண்டாமோ?

இன்சினரேட்டர் முறை மெல்ல மெல்ல மேற்கத்திய



• வி.என். சுப்பிரமணியன்


“

மருத்துவமனையைப் பிரமாதமாகத் துடைத்துப் பளபளவென்று வைத்திருப்பார்கள். அறைகள் சுத்தமாக, வாசனையுடன், டீவியும் டெலிபோனுமாகக் கவர்ச்சியாக இருக்கும். உயர்ந்த மருந்துகள் நோயாளிக்குக் கொடுக்கப்படும். ஆனால் தொற்றுநோய் உண்டாக்கவல்ல இந்த மருத்துவக் கழிவுகளை அகற்றுவதில் மட்டும் அலட்சியமாய் இருப்பார்கள்!

”



• மற்ற கழிவுகளுடன் கலந்து கிடக்கும் மருத்துவமனைக் கழிவுகள்...



“'ஜெ'வுடைய நகைகளையெல்லாம் டீ.வியில காட்டறதை நிறுத்தினது தப்பாப் போச்சு!”

“ஏன்? அதுதான் பழைய நியூஸ் ஆயிடுச்சே.”

“அதுசரி, ஆனா என் மனைவி தினம் ஏதாவது பெரிய நகைக் கடைக்குப் போய் அரைமணி நேரமாவது பிரமை பிடிச்சமாதிரி வெறிச்சுப் பார்த்துட்டு வாராளே!


— ஆர்.பி. ஜெயச்சந்திரன்



“டேய் பிக்பாக்கெட்! “ஏதுடா உனக்கு இந்த புது பர்ஸ்? யார்கிட்டே அடிச்சே?”

“இது எங்க தாத்தாவுக்கு மைசூர் மகாராஜா கொடுத்ததுங்க. அவரு ஞாபகார்த்தமா வச்சிருக்கேன்!”

— வி. ஆர்ஜுன் குமார்



“தலைவருக்கு 'லெக் பிரேக்'னா ரொம்ப பிடிக்கும்.”

“பெரிய கிரிக்கெட் ரசிகர் போலிருக்கு!”

“நீங்க வேற, அவரை எதிர்க்கத் துணிகிறவங்க காலை உடைப்பது 'ரொம்பப் பிடிக்கும்'னு சொல்ல வந்தேன்.”

— ஜெ. கண்ணன்

நாடுகளில் கைவிடப்பட்டு வருவதால், அங்குள்ள தயாரிப்பாளர்கள், இந்தியா போன்ற வளரும் நாடுகளின் தலையில் அவற்றை வைத்துக் கட்டுகிறார்கள் என்கிறார் வி.என்.எஸ். “ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இங்கே இன்சினரேட்டர் வசதி கூடப் பல மருத்துவமனைகளில் இல்லை. இருக்கிற பெரிய மருத்துவமனை ஒன்றில், நாங்கள் போயிருந்த சமயம், அது இயங்கவே இல்லை!

“கேரளாவில், திருவனந்தபுரத்தில் PENPOL என்ற தனியார் நிறுவனம் ஒன்று, மருத்துவமனைக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துவதில் தேர்ந்தது. இதன் சேவையைப் பயன்படுத்த முன்வந்தால் கூடப் போதும்!”

அண்ணாநகரில் சுந்தரம் ஹாஸ்பிடல், தமிழ்நாடு மருத்துவமனை ஆகிய இடங்களில் முறையான வேஸ்ட் மானேஜ்மென்ட் இருப்பதைப் பாராட்ட வேண்டும்.

ஆனால், “இன்சினரேடர் மட்டுமே போதும் என்று மார்ச் 96-ல் கூறிய சுப்ரீம் கோர்ட் கூட, மே மாதமே அந்தத் தீர்ப்பை மாற்றி, இன்சினரேடர் மட்டும் போதாது; கழிவுகளை முழுமையாக நீக்கும் உரிய கருவிகளும் சாதனங்களும் கட்டாயம் அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு பொதுநல வழக்கில் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதையும் இனி கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.


ஒரு நாளைக்கு 500 கிலோ முதல் 700 கிலோ வரை மருத்துவமனைக் கழிவுகள் சென்னையில் மட்டும் வெளியேற்றப்படுகின்றன என்று குத்துமதிப்பாகக் கணக்கிட்டிருக்கிறார் வி.என்.எஸ்.

“முதலில் மருத்துவமனைகளில் வீணாக்கும் பொருட்களின் அளவைக் குறைக்க வேண்டும். எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கே உபயோகிக்க வேண்டும்!”

தனியார் மருத்துவமனைகள் சமாசாரமே இப்படி என்றால், அரசினர் மருத்துவமனைக் கழிவுகள் பற்றிக் கேட்கவே வேண்டாம்!

ஆந்திர அரசின் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் நடவடிக்கையை வரவேற்பதோடு, வாயாரப் பாராட்டுகிறார் வி.என். சுப்பிரமணியன்.

— சாருகேசி





1997 ஜனவரி 5
தாது மார்கழி 21
மலர் : 55
இதழ் : 23

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



சீதாராம் கேசரியின் நாடகம்!

சேஷன் தலைமைக் காலத்திலேயே, உட்கட்சித் தேர்தல்களின் முக்கியத்துவத்தை தேர்தல் கமிஷன் மிக வலிமையாக எடுத்துரைத்தது. இப்போதைய கமிஷனர்கள் கூட, 'சில்லறைக் கட்சிகளுக்கு அங்கீகாரம் மறுக்கப்பட வேண்டும்; எஞ்சியுள்ள முக்கிய கட்சிகளின் கணக்கு வழக்குகள் கமிஷனின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும், உட்கட்சித் தேர்தல்கள் கட்டாயமாக்கப்பட வேண்டும்' என்று பரிந்துரைத்து, இந்தப் பரிந்துரைகளைச் சட்டமாக்கும்படி நாடாளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் உட்கட்சி ஜனநாயகத்தின் முதுகெலும்பை முறிக்கும் காரியத்தைத் துணிந்து செய்ய முற்பட்டிருக்கிறார் சீதாராம் கேசரி!

நாடாளுமன்ற கட்சித் தலைவரை முறையான தேர்தல் நடத்தித் தேர்ந்தெடுக்காமல், ஒப்புதல் அபிப்பிராயத்தின் (consensus) அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதாக வற்புறுத்தி வருகிறார். அப்பதவிக்குத் தேர்தல் நடத்தினால் கட்சியே பிளவுபட்டுப் போய்விடும் என்பது கேசரியின் வாதம்! இது ஏற்கக்கூடிய வாதமே அல்ல என்பது அவருக்கே தெரிந்திருக்கும்! தேர்தலே நடத்தாமல், 'எல்லோரும் ஒப்புக் கொள்கிற அபிப்ராயம்' என்பதாக ஒன்றைத் திணிப்பதன் மூலம்தான் கட்சியில் ஏற்கெனவே உள்ள விரிசல்கள் மேலும் மோசமாகி பிளவு ஏற்படும்!

காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைமையிலிருந்து நரசிம்மராவ் நீக்கப்பட்டபோது,



'தனி மனிதரை விட கட்சியின் நலனே முக்கியமானது' என்றொரு காரணம் கூறினார் கேசரி. ஆனால் அந்த வார்த்தைகளை அவர் இப்போது மறந்தே போய்விட்டார்!

'நாடாளுமன்றக் கட்சித் தலைவர் பதவிக்குத் தாமே போட்டியின்றித் தேர்வு செய்யப்பட வேண்டும்' என்பதுதான் கேசரி குறிப்பிடும் 'ஒப்புதல் அபிப்பிராயம்' என்பதன் உள்ளர்த்தம்!

ராஜேஷ் பைலட் விடுவதாயில்லை! தாமும் அப்பதவிக்குப் போட்டியிட்டே தீருவது என்பதில் பிடிவாதமாய் இருக்கிறார்.


ஜனவரி மூன்றாம் தேதியன்று தலைமை குறித்து முடிவெடுத்தாக வேண்டிய நிலையில், கேசரி பிறருடைய வார்த்தைகளுக்கோ, அபிப்ராயங்களுக்கோ மதிப்புக் கொடுக்கும் மனநிலை யில் இல்லை.

காரணம் மிகத் தெளிவாகவே புரிகிறது. நாடாளுமன்ற காங்கிரஸ் தலைமைப் பொறுப்பி லிருந்து பிரதமர் பதவி என்பது கைக்கு எட்டக்கூடியதாக இருக்கும் என்கிற நம்பிக்கைதான்! அந்தப் பதவியாசை பிறரைப் போல் கேசரியையும் பற்றிக் கொள்ளவேதான், ராவின் ராஜி னாமா கோரியபோது பேசிய 'கட்சி நலன்' வசனங்களைக் காற்றில் பறக்கவிட்டிருக்கிறார். போதாக்குறைக்கு, காங்கிரஸ் உட்கட்சித் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு வேறு, தேர்தல் கமிஷனிடம் மனு கொடுத்திருக்கிறார்.

இந்த அணுகுமுறையினால் கேசரிக்கோ, காங்கிரஸ் கட்சிக்கோ, நாட்டுக்கோ இம்மியள வும் நல்லது நடக்கப் போவதில்லை.

மாறாக, நாடாளுமன்றக் கட்சித் தலைமைக்கும் காங்கிரஸின் பல்வேறு தலைமை நிலைகளுக்கும் முறைப்படி, ரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்தல் நடத்த முன்வருவாரானால், நீண்ட நெடு நாட்களாக நிலவி வந்த ஒரு குறையைப் போக்கிய தலைவர் என்கிற நற்பெயரை நிச்சயமாக கேசரி தட்டிச் செல்லலாம்.

அவர் செய்யக்கூடிய அந்த நல்ல காரியத்தினால் கட்சியும் ஆரோக்கியமான மாறுதல்



களுக்குட்பட்டு பலம்பெறும். இதுநாள்வரை பெருந்தலைவர்களின் விருப்பு - வெறுப்புக்கேற்ப நியமனத் தலைவர்கள் பொறுப்பேற்க, ஒற்றுமையும் சீரிய தலைமையுமின்றி காங்கிரஸ் ஆட்டம் கண்டு வந்திருக்கிறது. தேர்தல்களில் மாபெரும் தோல்விகளையும் சந்தித்திருக்கிறது. உட்கட்சி ஜனநாயகத்தை அரங்கேற்றுவதன் மூலம் போலித் தலைவர்கள் வெளியேற்றப்பட்டு, கட்சியின் கட்டுக்கோப்பும் ஒற்றுமையும் மேம்படும் என்பதில் சந்தேகமில்லை.

நாடு தழுவிய வீச்சும் கிளைகளும் உடைய ஒரு மூத்த கட்சி இவ்வாறு தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் போது, வாக்காளர்களுக்கும் அக்கட்சியிடம் அபரிமிதமான நம்பிக்கை ஏற்படும். பிற கட்சிகளும் அதே அக்னிப் பரீட்சைக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படும்! மொத்தத்தில் ஆரோக்கியமான ஜனநாயகம், நாட்டில் தழைக்க வழிபிறக்கும்.


இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை கேசரி வீணடித்துக் கொண்டிருக்கிறார். நரசிம்மராவ் என்னென்ன தவறுகளையெல்லாம் செய்து கடைசியில் வீழ்ச்சி அடைந்தாரோ அதே தவறுகளை கேசரியும் செய்து வருகிறார்.

ஓர் உறுப்பினர் ஒரு முக்கிய பதவிதான் வகிக்கலாம் என்று ஆரம்ப காலத்தில் முழங்கிய ராவ், இறுதிவரை கட்சித் தலைமை - ஆட்சித் தலைமை (பிரதமர் அல்லது நாடாளுமன்றக் கட்சித் தலைவர்) என்று இரட்டைக் குதிரை சவாரியே செய்து வந்தார். உட்கட்சி ஜனநாயகத்தை உடைப்பில் போட்டு, கட்சியை சரிவுப் பாதை நோக்கித் தள்ளிவிட்டார்.

இப்போது கேசரியும் அதே பாணியில் செயல்படுவதைப் பார்க்க, காங்கிரஸ் பாரம்பரியம் என்பதற்குப் புதியதொரு விளக்கம் கொடுக்கத் தோன்றுகிறது. தேசநலன், எளிமை, நேர்மை போன்றவற்றுக்குப் பதில் சுயநலம், பேராசை, சந்தர்ப்பவாதம் ஆகியவையே காங்கிரஸின் கோட்பாடுகளாகி விட்டன.

இத்தனையையும் திருத்தி அமைக்க, ஒரே ஒரு மனிதரின் திடசித்தம் போதுமானது. இந்த உண்மையை உணர்ந்தால் தம் பொறுப்பை உணர்ந்தவராவார் காங்கிரஸ் தலைவர் கேசரி!

பிரதமர் பற்றிய புத்தகம், தில்லியில் இலவசம்!



● முன்னாள் ஹரியானா முதல்வர் பஜன் லாலின் மகன் குல்தீப் பிஷ்னோயின் தில்லி அவுரங்கசீப் சாலை வீட்டிலிருந்து ஐந்து கோடி ரூபாய்க்கான வைப்புத் தொகை ரசீது களைக் கண்டுபிடித்த சி.பி.ஐ. அதிகாரிகள் மலைத்துப் போயிருக்கிறார்கள். 'இது பஜன் லால் தம் மகனுக்குக் கொடுத்த பணமாகத் தான் இருக்க வேண்டும்' என்றே சி.பி.ஐ. நம்பு கிறது. தில்லி வீடே பத்துப் பன்னிரண்டு கோடி ரூபாய் பெறுமாம். தவணை முறையில் தாம் பணம் கட்டி இந்த வீட்டை வாங்கியதாக பஜன்லால் கூறியிருக்கிறார்! குல்தீப் பிஷ் னோய் அரசு ஊழியர் அல்ல. அதனால் அவர் மீது நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது.

● உத்தரப் பிரதேசத்தில் பாரதிய ஜனதா வும், பகுஜன் சமாஜ் கட்சியும் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கப் போவது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது. இதற்குக் குறுக்கே நின்ற முன்னாள் முதல்வர் கல்யாண்சிங், தமது பழைய பகுஜன் சமாஜ் கட்சி எதிர்ப்பு நிலை யிலிருந்து மாறி விட்டார். பாரதிய ஜனதாவின் உயர்மட்டக் குழுக் கூட்டம் முடிந்தவுடன், உறுப்பினர் ஒருவர் கல்யாண்சிங்கிடம் போய் தைரியமாக, மாயாவதியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைப்பதை விரும்பாத நீங்கள், பி.எஸ்.பி. உறுப்பினர்களில் கணிசமான நபர் களை இழுத்துக் கொண்டு, ஆட்சி அமைப் பீர்கள் என்று பேசிக் கொண்டார்களே?'' என்று கேட்டிருக்கிறார். கோபம் அடைந்த கல் யாண்சிங், ''யாரென்று நினைத்தீர்கள் என்னை? நான் இறந்தால் கூட, என் மீது கட் சிக் கொடி போர்த்தி ஊர்வலமாகக் கொண்டு போகும் அளவுக்கு, கட்டுப்பாடு மிக்கவன், தெரியுமா?'' என்று உணர்ச்சிவசப்பட்டுச் சத்தம் போட்டாராம்!

● 'ஊழல் மன்னர் தேவேகௌடா' என்று

ஒரு புத்தகம் எழுதிப் பரபரப்பு உண்டாக்கினது போதாது என்று, இன்னொரு புத்தகத்தையும் சூட்டோடு சூடாக எழுதி வெளியிட்டிருக்கிறார் வெங்கடகிரி கௌடா. தேவேகௌடாவின் ஆதரவாளர்கள் மறியல் செய்யப் போகிறோம் என்று மிரட்டியும் கூட, 'மக்கள் ஊழல் கண்டு வெறுத்துப் போயிருக்கிறார்கள். அதனால் அதற்கு எதிராக, என்னை ஆதரித்தும் மறியல் செய்ய ஆட்கள் இருக்கிறார்கள்' என்று அறிக்கை விட்டிருக்கிறார் வெங்கடகிரி கௌடா. இந்தப் புத்தகத்தில், முதல் புத்தகம் வெளியிட்ட பிறகு மக்களிடமிருந்து தமக்குக் கிடைத்த ஆவணங்கள் எல்லாவற்றையும் தொகுத்திருக்கிறார். தில்லியில் இலவசமாக இந்தப் புத்தகம் கிடைக்கிறதாம்!

● த.மா.கா. வை காங்கிரசுடன் இணைத்து விட தில்லியில் நடக்கும் முயற்சிகள் பலிக்காது என்கிறார்கள். மூப்பனார் கொஞ்சம் நஞ்சம் அந்த மாதிரி முயற்சிகளுக்கு இடம்கொடுத்தாலும், நிதியமைச்சர் சிதம்பரம் கண்டிப்பாகச் சாத்தியமில்லை என்று சொல்லி விட்டார். "சோனியா காந்தி சொன்னால் நடக்கும்" என்ற வாதத்துக்கும் பதில் வைத்திருக்கிறது த.மா.கா.: "சோனியா முதலில் காங்கிரஸில் பொறுப்பு ஏற்கட்டும். பிறகு சொன்னால் பார்க்கலாம்!"

● பண்டைய முகலாய அரசர்களின் வாரிசுகள் தமக்கு விட்டுச் சென்ற சொத்துக்கள் என்று போலி ஆவணங்கள் தயாரித்து, அவற்றை நம்பிய அப்பாவிகள் தலையில் மிளகாய் அரைத்து லட்சக்கணக்கில் பணம் சுருட்டியிருக்கிறார் கே.எல். சேத் என்ற 38 வயது இளைஞர். தில்லி உயர்நீதி மன்றம் ஏப்ரல் 10, 1995 அன்று தம் பேரில் இந்தச் சொத்துக்களை மாற்றித் தந்ததாக சேத் போலி ஆவணங்களைத் தயாரித்திருக்கிறார்! தில்லி போலீஸ் சேத்தைக் கைது செய்திருக்கிறது.

● தில்லிப் பல்கலைக் கழக கவுன்சில் தேர்தல்களில் பாரதிய ஜனதா கட்சியின் உறுப்பினர்கள் வெற்றி பெற்று அக்கட்சிக்கு ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும், அள்ளித் தந்திருக்கிறார்கள். அகடமிக் கவுன்சில் தேர்தலிலும் பாரதிய ஜனதாவே பெரும் அளவுக்கு வென்று அதிக இடங்களைப் பிடித்திருக்கிறது! கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்த நந்திதா நாராயண் ஓர் இடத்தைப் பிடிக்க முடிந்ததன் காரணம், பெண்களின் ஆதரவு அவருக்கு இருந்ததுதான். காங்கிரஸ் கட்சி ஆதரித்த வி.கே. அகர்வால் தோற்றுப் போனார்.

● மாலை வரை உடல்நிலை சரியாக இருந்த ஐந்து மாதக் குழந்தை ஷா நவாஸ் சிங், இரவு உறக்கத்தில் ஏழு மணிக்கு இறந்து போயிற்று. இளம் தம்பதியான பெற்றோர் ஹர்மீத் சிங்கும், அஜீத் கவுரும் உடனே கண்களைத் தானம் கொடுக்கத் தீர்மானித்தார்கள். ஆனால் கண் ஆஸ்பத்திரி டாக்டர்கள் வரத் தாமதம் செய்தார்கள். போன் மூலம் அவர்களை அவசரப்படுத்திய தம்பதி, கண்தானம் கொடுத்த பின்தான் மன நிம்மதி அடைந்தார்கள். "எங்கள் குழந்தையோ போய் விட்டான். இரண்டு பேருக்குக் கண் பார்வையாவது கிடைக்கட்டுமே!" என்று அத்தனை துக்கத்துக்கு இடையிலும் ஹர்மீத் சிங்கும் அஜீத் கௌரும் சொன்னது எல்லாரையும் நெகிழ்த்தி விட்டது.

● உத்தர பிரதேச தேர்தலில், பாரதிய ஜனதாக் கட்சி பெரும்பான்மை பெறாமல் தோற்றதற்கு, அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோஷி, கட்சிச் செயலர் கோவிந்தாசார்யா மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்திருக்கிறார். கட்சிக்குள்ளேயே பலங்களையும், பலவீனங்களையும் பற்றி விவாதிக்காமல், பத்திரிகையாளரிடம் ஓடும் பாணியைக் கண்டனம் செய்திருக்கிறார் ஜோஷி. ஜோஷிக்கும் கோவிந்தாசார்யாவுக்கும் அவ்வளவாகப் போதாது. தாம் பா.ஜ.க. தலைவராக இருந்தபோதுதான் கோவிந்தாசார்யாவைத் தெற்கே அனுப்பி வைத்தார் முரளி மனோகர் ஜோஷி.

தில்லி நியூஸ்:

● சி.பி.ஐயில் நிறைய மாற்றம் வரப் போகிறது. ஜோகிந்தர் சிங், மூத்த அதிகாரிகள் 40 பேரை அவரவர் மாநிலங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு, இளம் ரத்தத்தைப் பாய்ச்சும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். தாராளமயமாக்கல் காரணமாக, பொருளாதாரக் குற்றங்கள் அதிகரித்து வருவதால், சி.பி.ஐக்கு நிறைய படித்த, இளம் புத்திசாலி அதிகாரிகள் தேவைப்படுகிறார்களாம்.

● நாடாளுமன்றத்தில் மகளிருக்கான இட ஒதுக்கீடு மசோதாவின் போது பேசிய முன்னாள் பிரதமர் சந்திரசேகர் கிண்டலடித்தார்: "முலாயம் சிங்குக்குப் பதிலாக, பூலன்தேவி பாதுகாப்பு அமைச்சர், வாஜ்பாயிக்குப் பதிலாக சுஷ்மா சுவராஜ் எதிர்க்கட்சித் தலைவி. சி.பி.எம். தலைவராக சோம்நாத் சட்டர்ஜிக்குப் பதில் கீதா முகர்ஜி!"

● வருமானவரித் துறை அதிகாரிகள் குஜராத் முதல்வர் சங்கர் சிங் வாகேலாவை வலை போட்டுப் பிடித்திருக்கிறார்கள். அவரது மகன் கல்யாணத்துக்கு ஆடம்பரமாய்ச் செலவழித்துள்ளார். சட்டசபையில் மெஜாரிடி பலத்துக்காக எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கவும் மனிதர் நிறையவே செலவழித்திருக்கிறாராம்.

— நியூஸ்வாலா

யாருமே தொழாத கோவில்!

கூப்பிடு தூரத்தில் வங்கக் கடல். ஆகவே, குறைவற்ற தென்றல். நகர இரைச்சலிலிருந்து மிக உள்ளடங்கி இருப்பதால் ததும்பி வழியும் அமைதி. கூடுதல் எழிலுக்கு, சன்னலைத் திறந்தால் உள்ளம் கொள்ளை கொண்டு போகும் பசுமைப் புரட்சி.

தமிழையே சுவாசித்து, தமிழையே உண்டு, தமிழுக்காகவே வாழ்ந்து மறைந்த ஓர் ஒப்பற்ற மனிதரின் நினைவாக உருவானது சென்னை பெசன்ட் நகரிலுள்ள உ.வே.சா. நூலகம்.

சாமிநாதய்யர் தம் ஆயுள் முழுக்கத் தேடித் தேடிச் சேகரித்த ஓலைச் சுவடிகள், சுவடிகளை காப்பாற்றுவதுதான் மிகச் சிரமமான காரியம். அதனாலதான் சுவடி அறையை மட்டும் குளிர் பதனம் செய்து, எப்போதும் பூட்டியே வைத்திருக்கிறோம். யாராவது சுவடிகளைக் காண, விரும்பிக் கேட்டால் அனுமதிக்கிறோம்" என்றார் நூலக ஊழியர் சாய்ராம்.

ஓலைச்சுவடிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அறையை நமக்காகத் திறந்து காட்டினார் சாய்ராம்.

உள்ளே நுழைந்ததும் சடாரென்று ஏழெட்டு நூற்றாண்டுகள் பின்னோக்கிப் போய்விட்டது போன்ற உணர்வு. சங்க இலக்கியங்கள், இலக்கண நூல்கள், திருத்தல புராணங்கள், பிற்கால இலக்கியங்கள் - சிற்றிலக்கியங்கள் - அத்தனையும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சுவடிகள். பூப்பட்டால் கொப்பளிக்கும் திருமேனி. விரல்கள் நடுங்கத்



• நூலகம்

அச்சு வடிவமாக்கி, அவர் பதிப்பித்த நூல்கள், அவருக்கு அன்பளிப்பாக வந்த நூல்கள், அவரது அன்பர்கள் நூலகத்துக்கு அன்பளிப்பாகத் தந்த நூல்கள் என்பதாகச் சுமார் இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களும் இரண்டாயிரத்து ஐந்நூறு ஓலைச் சுவடிகளும் இங்கே இருக்கின்றன.

நூலகத்துக்கு வருபவர்களுக்கு மின்விசிறிக் காற்றுதான்; சுவடிகளுக்குத்தான் குளிர்ப்பதன அறை! "உப்புக் காற்று, தூசு, மண் இவற்றிலிருந்து சுவடிகளைக் தொட்டு, எடுத்துப் பார்த்தால் வியப்புத்தான் உண்டாகிறது. அந்தக் காலத் தமிழ். அந்தக் கால எழுத்து முறை. ஒரு பிழை இல்லாமல் சுவடியில் செதுக்கியிருக்கிற நேர்த்தி. எழுத்துக்களின் சிறப்பு லாகவம். இவற்றை எண்ணி வியந்து கொண்டிருக்கையில் சாய்ராம் சொன்னார் : "ஓலைச்சுவடி எழுத்துக்களைப் புரிந்து கொள்வது சற்று சிரமம். அவற்றில் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி இருக்காது. (எழுத்தாணியால் புள்ளி வைத்தால், ஓலை கிழிந்து விடுமே?) முற்றுப்புள்ளி, கால்புள்ளி, அரைப்புள்ளி எதுவுமற்று, வாக்கியங்கள் நீள நீளமாகப் போய்க் கொண்டிருக்கும். ஒவ்வொரு சுவடியின் இடது ஓரத்திலும் சுமார் ஓர் அங்குல இடைவெளி விட்டு, அதில் நூலின்



• பாதுகாக்கப்படும் சுவடிகள்...

பெயர், ஆசிரியர் பெயர் போன்ற விவரங்கள் இருக்கும். ஒரு சுவடியில் உள்ள மொத்த விஷயங்களின் சாரத்தை ஓரிரு வரிகளில் - ஓரிரு சொற்களில் கூட முன்னதாக எழுதி வைத்து விடுவார்கள்."

சாமிநாதய்யர் இந்தச் சுவடிகளைச் சேகரிக்கப்பட்ட பாடுகளும் அவற்றை அச்சேற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளும் அவரது 'என் சரித்திரத்தில்' விரிவாக இருக்கிறது.

ஆனால், ஒரு பதிப்பாசிரியராக அவர் தமக்குத்தாமே வகுத்துக் கொண்டிருந்த இலக்கணங்களையும் ஒழுக்க விதிகளையும் தொழில் நேர்மையையும் இந்நூலகத்துக்கு நேரில் வந்து அவர் செய்து வைத்துப் போயிருக்கிற பணிகளைப் பார்த்தால்தான் தெரிந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு சுவடியைப் பதிப்பிக்கும் போதும், அது தொடர்பான பிற சுவடிகள் தரும் மேற்கோள்கள், வேறு வேறு உரையாசிரியர்கள் தரும் அர்த்தம், இவற்றுடன் தாம் சேகரித்த செய்திகள், தாம் சொல்ல விரும்பும் கருத்துக்கள் என தனித்தனியாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறார். உரையாசிரியர்களின் மேற்கோள்களுக்கு 'மேற்கோள் ஆட்சி' எனத் தலைப்பிடும் உ.வே.சா., தம் கருத்துக்கள் வருகிற இடங்களை 'ஒப்புமைப் பகுதி' என்று அடக்கமாகக் குறிப்பிடுகிறார்.

சுவடியிலிருந்து நூலாக்கும் போது ஏதாவது ஒரு வாக்கியம்- ஒரு சொல்லுக்குத் தமக்கு அர்த்தம் சரியாக விளங்காவிட்டால், வெளிப்படையாக, "இது எனக்கு விளங்கவில்லை" என்று தம் கைப்பட எழுதி வைத்திருக்கிறார்!"

உ.வே.சா. நூலகத்தில் உள்ள பல நூல்களில் குறிப்புகள், விளக்கங்கள் என ஆங்காங்கே அய்யர் தம் கைப்பட எழுதி 'வைத்திருப்பதைக் காண நேர்ந்தது அற்புதமான அனுபவம். அச்சை விட அழகாக இருக்கிறது. அவரது கையெழுத்து.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்காக ஆயிரமாயிரம் பக்கங்கள் எழுதிக் குவித்திருக்கிற அய்யர், தம் சொந்த நாட்குறிப்பேடுகளில் நறுக்குத் தெரித்தாற்போல ஓரிரு வரிகளிலே செய்திகளை, நிகழ்வுகளைப் பதிவுசெய்திருக்கிறார்.

1906-ம் வருடம் ஆங்கில அரசால் அவருக்குப் பெருமைமிகு 'மகாமகோபாத்யாய' விருதுகிடைத்தது. அதைத் தம் நாட்குறிப்பில் எப்படி எழுதியிருக்கிறார் தெரியுமா? 'சன்னது கிடைத்தது!' - அவ்வளவுதான்! ஒரே வரி.

ஆண்டுவாரியாக, சாமிநாத அய்யரின் நாட்குறிப்பேடுகள் இங்கே பார்வைக்குக் கிடைக் கிறது. (நூலகம்தானே என்று எதையும் வீட்டுக்கு எடுத்துப் போக முடியாது; அங்கேயேதான் படிக்க வேண்டும்.)

சாமிநாத அய்யர், தமிழ் இலக்கியங்களைத் தேடித் தொகுப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குக் கொஞ்சமும் சளைத்ததில்லை, இந்தப் பொக்கிஷங்களைப் பாதுகாக்க நூலகத்தார் மேற்கொள்கிற நடவடிக்கைகள்.

உ.வே.சா. நூலகம், ருக்மணி தேவியால் நிறுவப்பட்டு. கலாக்ஷேத்ரா சங்கரமேனனால் நிர்வகிக்கப்பட்டு வளர்ந்தது. அரசு தரும் சிறு மானிய உதவிதான் இங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கான வருவாய்.

சுவடிகளைப் பாதுகாக்கவே ஏராளமாகச் செலவாகிற நிலையில், அரசு உதவி கூடுதலானால் நன்றாயிருக்கும் என்பது இவர்களின் கருத்து.

சுவடிகளை எப்படிப் பாதுகாக்கிறார்கள்?

"லெமன் கிராஸ் ஆயில் என்கிற ஒருவித எண்ணெயிட்டுப் பராமரித்தால்தான் ஓலைச் சுவடிகள்

• சாய்ராம்




• பாலசாரநாதன்





"விளம்பரத்துல வர்ற மாதிரியே நீங்களும் உங்க 'மொபெட்'டை 'உங்க குடும்பத்துல ஒருத்தர்'னு சொல்லிக்கறது தப்பில்லை... ஆனா அதோட பேரையும் ரேஷன்கார்டுல சேர்க்கணும்னு இப்படி அடம்புடிக்கிறதுதான் சரியில்லை!"

– ஜெயாப்ரியன்



படிப்போர்களின் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ளலாமா?

ஹாங்காங்கில் 1000க்கு 817பேர்.


நார்வேயில் 1000க்கு 510பேர்

நம் இந்தியாவில்(?) 1940ல் 1000க்கு 15பேராகவும், 1985ல் 1000க்கு 26 பேராகவும், 1996ல் 1000க்கு 31 பேராகவும் நத்தை வேக வளர்ச்சி.

ஆதாரம்: இண்டியன் எக்ஸ்பிரஸ்
தகவல்: பழங்கூர் மீரா.முருகன்

சிங்கப்பூர் கல்வித்துறை அமைச்சரகம் 2400 பள்ளிச் சிறுவர்களிடம் புள்ளிவிவரங்களை சேகரித்தபோது ஒவ்வொருவரும் சுமார்7.5 கிலோ எடையுள்ள புத்தகப் பைகளைத் தூக்கிச் செல்வது தெரிய வந்துள்ளது. இனிவரும் ஆண்டு முதல் மூன்றாம் வகுப்பு குழந்தைகள் வரை 3 கிலோ எடைவரையும், நான்காம் வகுப்புக்கு மேற்பட்ட குழந்தைகள் 4.5 கிலோ எடை வரை மட்டுமே புத்தகங்களை சுமந்து செல்ல வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளது. தாய்லாந்திலோ பள்ளிக் குழந்தைகள் 2 கிலோ எடைக்குமேல் சுமந்து செல்லக் கூடாதென்று உத்தரவு அமுலில் இருக்கிறது! ஏற்கெனவே அதிகப்படியான எடையால் முதுகுத்தண்டு பாதிக்கப்படுகிறது என கண்டறியப்பட்டுள்ளதே காரணம்.

– அ. குமார்



ஒன்றோடொன்று ஒட்டாமல், செல்லரிக்காமல் இருக்கும். தவிர வழக்கமான நாப்தலின் உருண்டைகள் போடுவோம். பெரும்பாலான கவடிகளைப் பிரதியெடுத்து வைத்தாயிற்று. மைக்ரோஃபிலிமிலும் பதிவு செய்யப்படுகிறது" என்றார் சாய்ராம்.

உ.வே.சா. நூலகம், பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

"நல்ல பல தமிழ் நூல்கள் அச்சுருவம் பெற்றால், தமிழ் மக்களுக்குப் பயனுடையதாக இருக்குமே என்கிற எண்ணத்தில்தான் நூல்களை வெளியிடுகிறோம். ஆனால் வாங்கத்தான் ஆளில்லை; அதோ பாருங்கள்–" என்று ஓர் அறையைச் சுட்டிக்காட்டினார் பதிப்பகப் பிரிவின் பொறுப்பாளர் பாலசாரநாதன்.

அவர் காட்டிய அறையில் அச்சிடப்பட்டு, விற்காத நிலையில் ஏராளமான இலக்கண, இலக்கிய நூல்கள்.

அரசு நூலகங்களில் வாங்கிக் கொள்வார்களே என்று கேட்டால் "ஐந்நூறு பிரதிகள் மட்டும் வாங்குவார்கள். அதுவும் சுலப சாத்தியமல்ல" என்றார்.

"இதெல்லாம் கூடப் பெரிய விஷயமில்லை. இப்படியொரு நூலகம் சென்னையில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகிறது என்கிற விஷயமே பலருக்குத் தெரியாது என்பதுதான் எங்களின் முதல் வருத்தம். ஒருசில ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவர்கள் தவிர யாருமே வருவதில்லை. தமிழ் ஆர்வம் மிக்க, நூல் ரசிகர்கள் இங்கே வந்தால் அவர்களுக்கு உடன் இருந்து நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க, குறிப்புகள் எடுக்க, பிற உதவிகள் செய்யச் சித்தமாயிருக்கிறோம்" என்றார் சாயிராம். (பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருக்கும் இவர், சங்க இலக்கியச் சுவடிகளையெல்லாம் இரண்டாம் வாய்பாடு வேகத்தில் படித்துக் கொண்டு போகிறார்!)

ஜனவரி 19-ஆம் தேதியன்று இந்த நூலக வளாகத்தில் சாமிநாத அய்யரின் சிலை நிறுவும் விழா நடக்க இருக்கிறது.

"மாதம் ஒரிரு இலக்கியக் கூட்டங்கள் இங்கே நடந்தால் சிறப்பாக இருக்கும். ஆனால் யார் நடத்த முன்வருகிறார்கள்?" என்று வருத்தத்துடன் கேட்டார், நூலகத்துடன் நீண்ட நாள் தொடர்புடைய ஒரு வாசகி.

சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்கலாமே?


– ஔரங்கசீப்

படங்கள் : **யோகா**

‘நடிப்பதற்கு ஆட்கள் தேவை’ என்று எப்போதாவது தினத்தந்தி வரி விளம்பரப் பகுதியில் வருவதுண்டு. ஆனால், ‘எனக்கு நடிக்க வாய்ப்புத் தாருங்கள்’ என்ற கோரிக்கையை முன்வைத்து சமீபத்தில் ஒருத்தர் விளம்பரம் செய்திருந்தார்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த அந்தப் புதுமை இளைஞரைச் சந்திக்க முடிவு செய்தோம். ஒன்பது வருடங்களாக சினிமாவில் நடிக்க முயற்சி செய்து வருவதாகச் சொன்னார் வி. நல்லதம்பி.

"எனக்கு ஒரு அண்ணன், ஒரு தங்கச்சிங்க. அண்ணன், ஸ்போக்கன் இங்கிலீஷ் கோர்ஸ் நடத்தறாரு. தங்கச்சி, கல்பாக்கத்துல ஸ்டெனோவா இருக்குது. நமக்குத்தான் இந்த நடிக்கற ஆசை வந்திரிச்சி. அதனால வேலை எதுக்கும் போகலை. காஞ்சிபுரத்துலேருந்து கோடம்பாக்கத்துக்கு சீஸன் டிக்கெட் எடுத்து வெச்சிருக்கேங்க. டெய்லி காலைல ஒம்பது மணிக்கெல்லாம் வந்துருவேன். வரிசையா ஒவ்வொரு டைரக்டர், புரொட்



• தினத்தந்தியில் விளம்பரம்

என் பர்சனாலிட்டி எனக்குத் தெரியுங்க!



• நல்லதம்பி

யூசரையா போய்ப் பார்த்து சான்ஸ் கேட்பேன். ஈவினிங் காஞ்சிபுரம் திரும்பிடுவேன்."

"ஒம்பது வருஷமா முயற்சி பண்றதா சொல்றீங்க. இன்னும் ஒரு வாய்ப்புக் கூடவா கிடைக்கலை?"

"ஆமாங்க! எத்தனையோ டைரக்டருங்க, அஸிஸ்டெண்ட் டைரக்டருங்க இந்த ஒம்பது வருசத்துல நல்ல பழக்கமாயிருக்காங்கதான். ஆனா வாய்ப்புங்கதான் கிடைக்கமாட்டேங்குது. சும்மா கூட்டத்துல நிக்கத்தான் கூப்பிடறாங்க."

"எத்தனை படத்துல கூட்டத்துல நின்னிருக்கீங்க?"

"ஐயே... நமக்கு அதெல்லாம் புடிக்காதுங்க. குடுத்தா, எதனா கேரக்டர் ரோல் குடு; இல்லையா, ஆளை வுடு. அவ்ளோதாங்க. சினிமாவுல மூஞ்சியக் காட்டினா போறுங்கற மாதிரி எண்ணமெல்லாம் இல்லீங்க. நடிக்கணும். நல்ல தெறமை காட்டணும்: பெஸ்ட்

கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்டுன்னு பேர் வாங்கணும். இதாங்க என் லட்சியம்."

"ஒம்பது வருஷமா முயற்சி பண்ணிக் கிடைக்கலைங்கற போது உருப்படியா வேற எதனாச்சும் வேலை பார்த்துட்டே முயற்சி பண்ணலாமே?"

"நீங்க வேற. எங்க வீட்டுலயும் இதேதாங்க பேச்சு. 'ஏண்டா இப்படி ஊர் சுத்தறே'ன்னு எங்கம்மா புலம்பாத நாளே இல்லை. என்னங்க செய்யறது? ஒரு லட்சிய தாகம் இருந்திச்சின்னா, மத்த நெனைப்பெல்லாம் வராதுங்க."

"வேலைக்குப் போறதில்லை. தினம் காஞ்சிபுரத்துலேருந்து வந்துட்டுப் போறதா சொல்றீங்க. செலவுக்கு என்ன பண்றீங்க?"

"இட்டினாலும் அம்மாதாங்க உதவுவாங்க. தங்கச்சியும் பணம் குடுக்கும். எனக்கு சீஸன் டிக்கெட் மட்டும்தாங்க செலவு. மத்தபடி வெளியே தண்ணி கூடக் குடிக்க மாட்டேன். சாப்பாடு கூடக் கொண்டாந்துடுவேன்."

"அது சரி. இப்படி தந்தில விளம்பரமெல்லாம் குடுத்திருக்கீங்களே. அதுக்கு ஏது பணம்?"

"இதுக்கெல்லாம் வீட்டுல குடுப்பாங்களா? '86லேருந்து இன்சூரன்ஸ் கட்டிட்டு வரேங்க. அதுல லோன் போட்டு, 6,700 ரூவா எடுத்துத்தான் தந்தி விளம்பரம் குடுத்தேன். அது மட்டுமில்லை. இதே விசயத்தை போஸ்டரா அடிச்சி, கோடம்பாக்கம் முழுக்கப் போன வாரம் ஒட்டியிருக்கேன். எப்படியானா ஒரு சான்ஸ் கிடைக்காமலா போயிரும்?"

"இதுவரைக்கும் எந்தெந்த இயக்குநர்களை சந்திச்சிருக்கீங்க?"

"யாரை சந்திக்கலைன்னு கேளுங்க! ஒருத்தர் பாக்கி இல்லை. பாலசந்தர்லேருந்து, இன்னிக்கு வந்திருக்கற புது ஆளுங்க வரைக்கும் ஒருத்தர் விடலை. ப்ச். சான்ஸ்தான் கிடைக்க மாட்டேங்குது."

"உங்களுக்கென்ன, ஹீரோவாகணும்னு ஆசையா?"

"அட, என் பர்சனாலிட்டி எனக்குத் தெரியுங்க. இந்த மூஞ்சி ஹீரோவுக்கெல்லாம் சரிப்படாது. நல்ல கேரக்டர் ரோல் எதனா கிடைச்சா பின்னிடுவேன். நடிகர் சங்க உறுப்பினர் கார்டு கூட வெச்சிருக்கேங்க."

"நடிகராகாமலேயே உறுப்பினர் கார்டு கிடைக்குமா?"

"அதெல்லாம் கிடைக்குங்க. இது கூட என்ன... சான்ஸ் கேட்க ஸ்டுடியோ பக்கம் போனா, வாட்ச்மேன் விரட்டாம இருக்கறதுக்குத்தான்!"

"விளம்பரம் குடுத்து, போஸ்டரெல்லாம் போட்டிருக்கீங்க. இதுக்கப்புறம் யாராவது கூப்பிட்டிருக்காங்களா?"

"சில சான்ஸ் வராப்பல இருக்குங்க. ஆனா பாருங்க, பெரும்பாலும் இந்த ஃபீல்டுல புதுசா வரவங்களை நல்லா ஏமாத்திருவாங்க. பணம் தர மாட்டாங்க. அதான் நான் ஒரு முடிவு செஞ்சிருக்கேன். பேமெண்ட் முதல்லயே குடுத்துரணும். அப்பால நான் நடிச்சிக் குடுக்கறேன்னு சொல்லிடப் போறேன்."

"இதெல்லாம் நடக்கற கதையாங்க?"

"நடக்குங்க. லட்சிய வெறி உள்ளவனுக்கு எதிர்ப்புகளும் அவமானங்களும் ரொம்ப சாதாரணங்க. நிச்சயமா நான் ஒருநாள் பெரிய ஆளா வருவேன் பாருங்க."

"இப்ப உங்களுக்கு என்ன வயசு?"

"முப்பது ஆவுது."

"கல்யாணம்?"

"தங்கச்சிக்கு மொதல்ல ஆவணும். நமக்கென்ன அவசரம்? சாதிச்ச பிறகு பார்த்துக்க வேண்டியதுதான்!"

- கிச்சா

படம் : **யோகா**



சட்டத்தை வளைத்த பூனை!

அவுரங்கபாத் நகரில் கே. எஸ். பிஸ்ட் என்பவரின் வளர்ப்புப் பூனை எப்படியோ அங்குள்ள சத்யம் என்ற சினிமாத் தியேட்டருக்குள் நுழைந்து விட்டது. கோர்ட் நடவடிக்கையாக பூட்டி சீல் வைக்கப்பட்டிருந்தது அந்தத் தியேட்டர். பூனை பட்டினி. வயிற்றுக்குள் குட்டிகள் வேறு. அதன் 'மியாவ்' கேட்ட சொந்தக்காரர் தியேட்டரை சீல் வைக்க உத்தரவிட்ட மாஜிஸ்திரேட்டை அணுகி நிலைமையை விளக்கினார். இரக்க குணம் கொண்ட அந்த நீதிபதி வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் முன்னிலையில் தியேட்டரைத் திறந்து பூனையை வெளியேற்ற உத்தரவிட்டார்!

நன்றி : ஹிந்து; தகவல் : க. மாரியப்பன்

● அறிவியல் கலவாத சமய உணர்வு என்பது முடமானது; சமய உணர்வு இல்லாத அறிவியல் என்பது குருடானது!

- ஐன்ஸ்டீன் - போத்தனூர் ஏ. செந்தில்


ஜெ. வீட்டில்
10,500 புடவைகள்
''எத்தனை புடைவை இருக்குதுன்னு எண்ணிக்கிட்டிருக்கேன்....''
''தேச பொருளாதாரத்தை நீயே தனி யொருத்தியா முன்னேற்றிடுவே போலி ருக்கே...''
– இந்தியன் ஃபீச்சர்ஸ் ஸிண்டிகேட்
கம்ப்யூட்டர் விலை ரூ. 19995 தள்ளுபடி 5 நாட்கள் மட்டுமே!
''அந்த அஞ்சு நாளைக்கப்புறம் பதினஞ் சாயிரத்துக்கு விற்போம்....''
''தீவன ஊழல் விவகாரத்துல சிபிஐ காட்டுற சுறுசுறுப்பைப் பார்த்தா கடைசி யில மாடுகளும் எருமைகளும்தான் குற்ற வாளிகள்னு சொல்லுவாங்க போலிருக்கு...''
Naveen

10

அது என்ன ஞாயிற்றுக்கிழமைக்குத் தனி நிறம், குணம், மணம்? சூரியனைப் பார்த்தாள் வள்ளி. அது கொட்டாவி விட்டுக் கொண்டு, கைகளைத் தூக்கி, சோம்பல் முறித்துக் கொண்டிருந்தது. காற்று. இன்னும் குளித்திருக்கவில்லை. வெளிச்சம், 'பவுடர்' பூசி பனிச்சென்று இருந்தது. ஜனங்கள், இயல்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். ஞாயிறு, அவர்களை மேசை மனிதர்கள் என்கிற ஆகிருதியைத் தவிர்த்திருந்தது. குமாஸ்தாக்கள், மனைவிகளின் முகத்தைப் பகல் நேரத்தில் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காலை பத்து மணிக்குத் தெருவில் வருகிற, பஞ்சு மிட்டாய்க்காரனை, பதினோரு மணிக்கு வரும், குரங்காட்டியை, பன்னிரெண்டு மணிக்கு வரும், அங்காளம்மன் கோவில் வேண்டுதல்காரர்களை, ஞாயிறு, அவர்களுக்கு அறிமுகப்படுத்தியது. மணிக்கு மணி, உலகம், புதிய கோலம் பூண்டு கொண்டிருந்தது.

வள்ளி, அந்த அதிகாலையை ரசித்தாள். இந்த அழகிய காலையில், மனசுக்குகந்த ஒருவருடன், நடந்தால் அந்த அழகிய நேரத்தைக் கௌரவிக்கலாமே என்று நினைத்தாள், வள்ளி. அவள் வெளியே வரும்போது, ஒரு பூம்பூம் மாட்டுக்காரன், ஏராளமான வண்ண வண்ணத் துணிகளோடு அவளுக்கு எதிர்ப்பட்டான். அவள் மனம், மகிழ்ந்தது. வள்ளி, நேராகப் பிந்துவின் வீட்டுக்கு வந்தாள். படி ஏறி, பிளாட்டின் மணியை அடித்தாள். ஒரு பையன். கதவைத் திறந்தான். பிந்துவின் தலை பின்னால் தெரிந்தது.

"வா, வள்ளி.... வா... வா... எனக்கும் உன்னைப் பார்க்கணும்னு இருந்தது. புறப்பட்டேன். அதுக்குள்ளே, இந்தப் பையன் வந்தது... வா..."

வள்ளி, ஹாலில் அமர்ந்தாள். அவள் முன்வந்து அமர்ந்த பிந்து, "ஏதேனும் விசேஷமா" என்றாள். பையன், பிந்துவிடம் விடைபெற்றுச் சென்றான்.

"இல்லை. காலை மந்தாரமாக, வானம் மூடிக் கொண்டு இருக்கே. எங்காவது நடந்துட்டு வரலாம்னு இருந்தது. வந்தேன்."

"குட்... இந்தக் காலனியிலே, வானத்தைப் பார்க்கிறவள், நீ ஒருத்திதான். வா போவோம். காய்கறி மார்க்கட்டுக்குப் போவோம். அப்புறம் வ.உ.சி. பூங்காவில் உட்காருவோம். மத்தியானம், 'கிருஷ்ண விலாசில்' சாப்பிடுவோம். உன் வீட்டுக்காரர் இல்லியா?"

"இல்லை. அவர் மூட்டை சுமக்கப் போயிருக்கிறார்."

"மூட்டை?"

"பாவ மூட்டை."


பிந்து சிரித்தாள்.

"இந்து சாஸ்திரத்தில், புருஷன் புண்ணியம் மனைவிக்கும் ஆகும்னு இருக்காம். ஆகவேதான், தனியாகப் பெண்ணுக்குத் தவம் வேண்டாம் என்றார்கள். பெண்ணுக்குப் புருஷப் பணியே தவம். ஆணுக்குத் தெய்வப்பணியே தர்மம். உன் புருஷனின் பாவம் உன்னை வந்து சேரப் போகிறது."

"சேராது. பாவத்துக்கு நான் உடன்படவில்லையே... ஆனாலும் அந்தப் பாவக் காசில் வர்ற புடைவை, பண்டம் பாத்திரங்களைப் பயன்படுத்தித்தான் தீர வேண்டி இருக்கு."

அவர்கள் தெருவில் இறங்கினார்கள். எழுதி, அழித்த சிலேட் மாதிரி, வெளி எங்கும் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. காற்றில் மண்ணின் மணம் எழுந்தது. புடைவை, உடம்போடு ஒட்டிக் கொண்டு லஜ்ஜை ஏற்பட்டது தவிர, நடப்பது சந்தோஷமாகவே இருந்தது.

"வீட்டிலே இருந்த பையன் யாருன்னு தெரியுமா, வள்ளி?"



பூக்கள் நாளையும் மலரும்

பிரபஞ்சன்

"தெரியாதுக்கா."

"என் ஆபீசுல வேலை செய்யறவன். என் மேல ரொம்ப மரியாதை. அன்பு. எனக்கு உதவி செய்து. அதனால சந்தோஷப்படறவன். திடீர்னு இன்னைக்குக் காலைல வந்து, நாம கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேட்டான்."

"ஐயையோ"

"அதுல என்ன தப்பு? கேட்டது தப்பு இல்லை. அதை. அப்படித்தானே கேட்க முடியும்? நான்தான், வேணாம்னு சொல்லிட்டேன். எனக்கு உடம்பு அவஸ்தை இல்லை, வள்ளி. அதை மறந்துட்டேன். உடம்பு, அதன் கட்டு தளர்ந்து போச்சு. திரும்பவும், அதை எதுக்கு ஞாபகப்படுத்தணும். இந்தப் பையன், எனக்கு மகன் மாதிரி, இவன் மனசுக்குள்ளே இந்த மாதிரி ஆசை. அவன் மனசும் புண்படாமே, பக்குவமா பேசி அனுப்பிட்டேன்."

வள்ளி, யோசனையோடு நடந்தாள்.

"என்ன யோசிக்கிறே, வள்ளி"

"இல்லைக்கா... துணை இல்லாமே இருக்கிறது; உங்களுக்கு எந்தச் சமயத்திலும் தனிமையா, ஆதரவு இல்லையே என்கிறது மாதிரி..."

"எனக்கு அப்படித் தோணலை. எனக்கு இயல்பாகவே, அந்த உணர்வு அந்த விஷயத்துல இருந்தது கிடையாது. எனக்கும் என் கணவருக்கும் பிரச்னையே, அவர் என்னை ஒரு மனுஷியாவே ஏத்துக் கலைங்கறதுதான். அப்புறம், நான் தனியாயிட்டேன். தனி மனுஷி, ரொம்ப கலபமான மனுஷின்னு ஜனங்க நினைக்கிறாங்க. அவங்க பார்வையில, நான் எப்படி இருக்கணும்னு ஆசைப்படறாங்களோ, அப்படியே என்னை வடிவமைக்கிறாங்க. நான் என்ன பண்ணட்



அருள் வாக்கு.

பிறருடைய பாஷையை, பழக்கங்களை வெகு சுலபமாக எடுத்துக் கொள்வதில் தமிழ் ஜனங்களுக்கே ரொம்பவும் திறமை இருக்கிறது. தமிழன் என்றால் இங்கிலீஷ்காரனைவிட நன்றாக இங்கிலீஷ் பேசுகிறான், ஹிந்திக்காரனை விட நன்றாக ஹிந்தியில் பேசுகிறான். பால்ரூம் டான்ஸிலிருந்து, ஹிந்துஸ்தானி சங்கீதம் வரை எல்லாம் இவனுக்கு அநாயாசமாக வந்து விடுகிறது. இதிலே பாராட்டுவதற்கும் விஷயம் இருக்கிறது; கண்டிப்பதற்கும் விஷயம் இருக்கிறது. இது அந்நியம், பிறத்தியாருடையது என்று இல்லாமல் எதையும் இவனால் எடுத்துக்கொள்ள முடிகிறதே என்று பாராட்டலாம். ஆத்ம சிரேயஸுக்காக இல்லாமல் வெறும் இந்திரிய சுகத்துக்காகவோ, புத்திப் பெருமைக்காகவோ மட்டும் இவன் மற்றவர்களின் தப்பான சமாசாரங்களில் மோகித்து விழுந்து அவற்றையும் தனதாக ஸ்வீகரித்து விடுகிறானே என்கிறபோது கண்டிக்க வேண்டியதாகிறது.

தமிழ் மொழியும், இந்தப் பிரதேசத்துக்கென்றே விசேஷமாக உள்ள சில பண்பாடுகளும் ரொம்பவும் புராதனமானவை-ஜீவசக்தி வாய்ந்தவை. அப்படியானால், இத்தனை தொன்மையும் சக்தியும் இல்லாத கலாசாரங்களே புதிதாக வந்தவர்களைத் தங்களில் கரைத்துக் கொள்கின்றன என்றால், அவற்றைவிட வலுவாகத் தமிழ் நாடானது இங்கே வந்து குடியேறியவர்களின் விஷயத்தில் இதைச் செய்திருக்கத்தானே வேண்டும்? இப்படி நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் நடைமுறையில் பார்த்தால் நேர் மாறாக இருக்கிறது. மற்றப் பிரதேசங்கள் தங்கள் பாஷை, பழக்கங்கள் இவற்றிலேயே புதிதாக வந்தவர்களைக் கரைத்து

டும் சொல்லு..."

"எனக்குத் தெரியுங்கா..."

காய்கறி அங்காடி கறுகறுப்பாக இருந்தது. ரோஜாப்பழம் போலத் தக்காளிகள். விரல் மாதிரி வெண்டை. குண்டு குண்டாகக் கத்தரிக்காய்கள். பீடா மாதிரி பாகல்கள்.

"காய்களைப் பாருங்கம்மா... பளபளன்னு இருக்கு பாருங்க" என்றார், ஒரு கடைக்காரர்.

"காய்கறிக்கும் மேக்கப்பா?"

"என்ன பண்றதும்மா... உலகம் மேக்கப் மயம்" என்றார், அவர்.

பூங்காவுக்கு வந்து அமர்ந்தார்கள் அவர்கள். பிந்து சொன்னாள்.

"எல்லாம் மேக்கப் மயம். மனிதர்கள் முதல் காய்கறிகள் வரை. பட்டாணி, பச்சை வர்ணம் பூசுகிற காலம் இது. அசலான முகம், அசலான வர்ணம், அசலான காதல் ரொம்ப அரிதாய்ப் போயிற்று, வள்ளி. இந்தப் பையன், ஜனனியைக் காதலித்து, வேறு யாரையோ கல்யாணம் பண்ணிக்கப் போறானாம்."

தும்பிகள் பறந்து கொண்டிருந்தன. சிவப்பு மையில் குளித்து எழுந்தாற்போல ஒரு பட்டாம் பூச்சி, வள்ளியின் முன் கையில் வந்து அமர்ந் தது.

"அக்கா... ஜனனி என்ன சொல்கிறாள்?"

"பேசினேன். அந்த ஆல்பர்ட், அப்படிப் பட்ட பையன் இல்லையாம். 'அப்படியே, அவன் மோசம் செய்தாலும், கவலை இல்லை. என் வாழ்க்கை, ஆல்பர்ட்டோடு, முடிந்து போகிற விஷயம் இல்லை' என்கிறாள். காதல் என்ன கல்லறையா என்கிறாள்."

"தெளிவான பெண்."

பட்டாம்பூச்சி, வள்ளியின் மேல் இருந்து, அவள் ஒயர்கூடையின் மேல் வந்து அமர்ந்தது.

"அக்கா... எனக்கு எங்காவது வேலைக்குப் போனால் தேவலை."

"என்ன திடீரென்று?"

"லஞ்சப் பணத்தில் சோறு தின்பதும், எவனோ தந்த புடைவையை உடுத்துவதும், எனக்கு அவமானமாக இருக்கு. என் ரொட்டியை, என் வியர்வையில் நான் ஜெயிக்க வேண்டும்."

பிந்துவுக்கு முகம் சோர்ந்தது.

"என்ன வள்ளி. நீ சந்தோஷமாக இருப்பாய் என்றல்லவா நினைத்தேன்" என்று வருத்தமுடன் சொன்னாள்.

"அக்கா. நியாயம், ஒழுக்கம், மேன்மைகளில் தான் சந்தோஷம் சாத்தியம். ஊழல், பேராசை, வஞ்சம், விபசாரத்தால் சஞ்சலம்தான்க்கா சாத்தியம். என்னால், என் கணவரின் போக்கைத் தடுக்க முடியவில்லை. நான் என் வழியைத் தீர்மானிச்சுக்க வேண்டியதுதானே?"

"அவசரப்படாதே..." என்றாள் பிந்து. சிவப்பு நிறப் பட்டாம்பூச்சி, ஒரு செம்பருத்திச் செடியின் மேல் போய் அமர்ந்தது.

பட்டாம்பூச்சிக்கு எந்தச் செடி நிரந்தரம்?

ஜனனி, ஜெராக்ஸ் கடைக்கு வந்த நேரம், மதிய வேளை. அனேகமாக, கடையில் யாரும் இல்லை. உரிமையாளன், வேதம் மாத்திரம். ஏதோ ஒரு பத்திரிகையைத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தான். நிழலாடியதைக் கண்டு நிமிர்ந்தான். ஆச்சர்யம் கொண்டான்.

"ஜனனியா, வாங்க... வாங்க..."

"சௌக்யமா?"

"இருக்கேன்."

"ஆல்பர்ட்டை பார்க்கணும். நானே போனா நல்லா இருக்காது..."

வேதமும், ஆல்பர்ட்டும் நண்பர்கள். ஒருமுறை ஆல்பர்ட்டே, வேதத்தை அவளுக்கு அறிமுகப்படுத்தி இருந்தான். வேதம் எழுந்தான்.



விடுகின்றன. ஆனால் தமிழ்நாடு ஒன்றுமட்டும் இதற்கு விலக்காக இருக்கிறது. தமிழ்நாட்டில் மகாராஷ்டிரர்கள் முதலிய பல சமுதாயத்தினர் எத்தனையோ பரம்பரைகளாக வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் பாஷைகளையே பேசி வருகிறார்கள். ஆதிகாலத்திலிருந்து திராவிட தேசமானது இவ்வாறு அந்நிய தேசங்களிலிருந்தும் பாரதத்தின் பிற பகுதிகளிலிருந்தும் வந்தவர்களுக்கெல்லாம் இடம் தந்து, அவரவரையும் அவரவரது பாஷை, சம்பிரதாயம் இவைகளிலேயே நிலைப் படுத்தியிருக்கிறது. தமிழ்நாடு ஒரு 'ரிஃப்ரிஜிரேடர்' (குளிர்பதனப் பெட்டி) போல் எல்லா பாஷைகளையும் எல்லா நாகரிகங்களையும் கெடாமல் குளிர்ச்சியுடன் காத்துத் தந்து வந்திருக்கிறது. குளிர் சாதனப் பெட்டியில் வைத்த பழம் போல் மற்றப் பிரதேச பாஷைக்காரர்களான மகான்களின் இலக்கிய சிருஷ்டிகளும் இங்கே உண்டாக்கி கெடாமல் ரட்சிக்கப்பட்டு வந்திருக்கின்றன. உதாரணமாக, தியாகராஜரின் தெலுங்குக் கிருதிகள் இந்த மண்ணில் பிறந்தவையே. தெலுங்கு தேசத்திலேயே இப்படிப்பட்ட சிருஷ்டி உண்டாகவில்லை. இப்படியே பல பாஷைக் கிரந்தங்கள், பல சித்தாந்தங்கள் இங்கு உருவாயின. மற்றவை அனைத்தோடும் தன்னை இழைய விட்டுக் கொண்டு, தன்னை மற்றவர்மீது திணித்து நிர்ப்பந்திக்காமல் இருக்கிற ஒரு தனிப் பண்பு திராவிட தேசத்துக்கே சிறப்பாக இருந்து வந்திருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

"கடையைப் பார்த்துக்கிடுங்க... ஆல்பர்ட்டை நான் அழைச்சுக்கிட்டு வர்றேன்... ஏதாவது பிரச்னையா?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. சும்மா பார்க்கணும். அவ்வளவுதான்."

அந்தத் தெருவின் அடுத்த முனையில் இருந்த, ஆல்பர்ட் பணியாற்றும் நிறுவனத்துக்கு விரைந்தான் வேதம். கண்ணாடி அறைக்குள் இருந்த ஜெராக்ஸ் மெஷினை, அதற்கு இட்டிருந்த சிவப்புப் பொட்டை, பணம் சொறியும் லட்சுமி படத்தை, மேசையை என்று வெறுமனே மனம் படபடக்க வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ஜனனி. இதுவரை, ஆல்பர்ட்டைப் பார்ப்பதில் அவளுக்கு உற்சாகமும் குதூகலமும்தான் ஏற்படும். அதுவே, அவளது அனுபவமாக இருந்தது. ஆனால், இந்தப் பட படப்பு வித்தியாசமாக இருந்தது. அவளுக்கே அது ஆச்சர்யம் தந்தது.

சற்று நேரத்தில் வேதமும், ஆல்பர்ட்டும் கடைக்குள் நுழைந்தார்கள்.

"ஹாய் ஜனனி" என்றான் ஆல்பர்ட். வேதம், அவனிடம், "சாப்பிட ஏதாவது வாங்கி வர வேண்டுமா" என்றான். "வேணாம்" என்றாள் ஜனனி.

"அப்போ நீங்க பேசுங்க... நான் ஒரு மணி நேரம் கழிச்சு வர்றேன்" என்றபடி வெளியேறினான், வேதம்.

ஜனனிக்கு எதிர்ப்புறம் இருந்த நாற்காலியில் அமர்ந்தான் ஆல்பர்ட்.

"எப்படி இருக்கே, ஜனனி?"

"நல்லா இருக்கேன்."

"என்ன திடீர்னு" என்றபடி சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான் ஆல்பர்ட்.

"இதே கேள்வியைத்தான் நான் கேக்கணும்னு நினைச்சேன். என்ன திடீர்னு காணாமல் போயிட்டே...?"

அவன் சிரித்தான்.

"தப்பா நினைக்காதே, ஜனனி. வீட்டுல சூழ்நிலை சரியில்லை."

"என்ன நடந்துச்சு?"

"உனக்குத் தெரியுமே. அக்காதான் எனக்கு அம்மான்னு. அவங்க எனக்குப் பெண் பார்த்துக்கிட்டு இருக்காங்க."

"நீ கல்யாணம் பண்ணிக்கப் போறியா?"

"இல்லை."

"அப்போ, அக்கா பெண் பார்க்கிற முயற்சியைத் தடைபண்ண வேண்டியதுதானே. அக்காவை என்னத்துக்காக அலைக்கழிக்கணும்?"

அவன் சிகரெட் புகையை இழுத்துவிட்டபடி சொன்னான்.

"எனக்கு அந்த தைரியம் இல்லை. என்ன பண்றதுன்னே தெரியலை."

'காதல் பண்ண மட்டும்தான் தெரியுமா' என்று கேட்கத் தோன்றியது. அது அவனைப் புண்படுத்தி விடுமோ என்று அஞ்சி, அடக்கிக் கொண்டாள்.

அவர்களுக்கிடையில் 'மவுனம்' ஒரு திரை போல், கற்சுவர் போல் வலிமையாக வளர்ந்து நின்றது.

"கவலைப்படாதே, ஜனனி. எப்படியும் அக்காவிடம் இதைச் சொல்லியே தீர்வேன்" என்றான் ஆல்பர்ட்.

எப்போது என்று கேட்க நினைத்தாள். ஆனால் வார்த்தை தொண்டைக்குள் அடைத்துக் கொண்டது. முதன் முதல் யாசகம் கேட்கிறவன் போல, கூனிக்குறுகிப் போனாள். சினிமாவில் தாலியைக் கையில் பிடித்துக் கொண்டு கண்ணீர் மல்கும் பெண்ணாகத் தன்னை உணர்ந்தாள், ஒருகணம். அவமான உணர்வு மேலிட, அவள் கண்களில் இருந்து கண்ணீர்

அடுத்த இதழ்

பொங்கல் சிறப்பிதழ்

சுஜாதா எழுதும்

'மீண்டும் மத்யமர்'

– வாரம் ஒரு சிறுகதை

இந்திரா சௌந்தர்ராஜன் எழுதும்

ஆசை நெசவு

– வித்தியாசமான தொடர்கதை

வாசகர்களுக்கு

வாரம் ஒரு சவரன்


கல்கி

பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும் பரிசு

நீங்கள் செய்ய வேண்டியது என்ன? ஒவ்வொரு வாரமும் வெளியாகும் கூப்பனில் நாங்கள் குறிப்பிடும் ஓர் அனுபவத்தை நீங்கள் எழுத வேண்டும். சிறந்த அனுபவங்கள் பிரசுரமாகும். தலைசிறந்த ஓர் அனுபவத்துக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் தங்க நகை பரிசு. அடுத்த வாரத்துக்கு இப்போதே தயாராகுங்கள்!





"என்னங்க, முந்தாநாள் பத்தாயிரம் ரூபாய் டெபாசிட் செஞ்சுட்டு இன்னிக்கு வந்து பணத்தைத் திருப்பிக் கேக்குறீங்களே, நியாயமிருக்கா?

"என்னங்க பண்றது. ஆபீஸைப் பூட்டிட்டு நீங்க ஓடிப்போறமாதிரி நேத்து கனவு கண்டேன். அதான்.

—ஓ.எஸ். சதாசிவன்

உருண்டது.

"அழாதே... இப்போ என்ன நடந்துட்டு துன்னு அழறே?" என்றான், ஆல்பர்ட். அந்தக் கேள்வி, அவளை மேலும் உசுப்பி, மேலும் அழப் பண்ணியது. கைக்குட்டையால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். எழுந்து, கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

"ஜனனி... ஜனனி... ஜனா..." என்று பின்னால் இருந்து, ஆல்பர்ட் அழைக்கும் குரல் ஒலித்துக்கொண்டே இருந்தது. ஆட்டோ பிடித்து, காலனிக்குள் பிரவேசித்தவள், நேராகப் பிந்துவின் வீட்டு முன் வந்து நின்றாள்.

ஜானு மாமி, காசி ராமேசுவர யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி இருந்தாள். காலனிப் பெண்கள், மாமியின் கால்களில் வணங்கி, பிரசாதம் பெற்றுக் கொண்டு போனார்கள். கேள்விப்பட்டு, தேவகி, மாமியைப் பார்க்க வந்தாள்.

"எப்படி மாமி... தரிசனம் எல்லாம் நல்லபடியா ஆச்சா?"

"பேஷா, திவ்யமா..."

"என்ன என்ன பார்த்தேள்?"

"புதுசு புதுசா மனுஷாளை! எங்க போனாலும் மனுஷாதானே?"

"நூதனம் எதுவும் இல்லையா, மாமி?"

"இல்லேடி, அம்மா. எங்கும் என்னாலே காண முடியல்லை. எங்கே போனாலும், மனுஷா வாசனைதான். எல்லாம் ஒரே மாதிரியா, ஒரே தலை, இரண்டே கண், இரண்டே கால், ஆயிரம் புத்தி, லட்சம் மனசுகள்."

தேவகி சிரித்தாள்.

"ரொம்ப வித்தியாசமா பேசறேள்."

"இல்லை... யதார்த்தத்தைப் பேசறேன். மனுஷான் எல்லோருக்குமே, ஒரே வாசனை, ஒரே நிறம், ஒரே ஆகிருதி, எல்லாம் ஒரே மாதிரி இருக்கே. இதைத் தெரிஞ்சுக்கத்தான் பயணம் பண்ண வேண்டி இருக்கு. கடல், எங்கே போனாலும் உப்புத்தானேடியம்மா."

தேவகி குங்குமம் பெற்றுக் கொண்டு அமர்ந்தாள்.

"சார் எப்படி இருக்கார்."

தேவகி சொன்னாள். ஆல்பர்ட் திரும்பியும் பார்க்காமல் இருக்கிறதைச் சொன்னாள்.

"அப்படியா சங்கதி. என்னண்டை அவன் அட்ரசைக் கொடு. அவன் மூக்குல கயிறு போட்டு அவனை இழுத்தாரலை நான், ஜானு இல்லை. கோனு."

"இருந்தாலும் மாமி..."

"என்னடி?"

"ஒரு கிறிஸ்துவப் பையனைப் போய்..."

"அசடே. கடவுளுக்கு அது விருப்பம் தாண்டி. ஒரு இந்துவும், கிறிஸ்துவனும் கல்யாணம் பண்ணின்டா குழந்தை பிறக்குமோ, பிறக்காதோ?"

"பிறக்கும்."

"கடவுளுக்கு அது விருப்பம் இல்லைன்னா, குழந்தை பிறக்காமல் அல்லவா இருக்கணும்."

"வாஸ்தவம்தான் மாமி."

"ஜனனி குட்டிக்கும் ஆல்பர்ட்டுக்கும் கல்யாணம் ஆகத்தான் போகுது. குழந்தை பிறக்கத்தான் போகுது... நீ குழந்தையை எடுத்துண்டு கொஞ்சத்தான் போறே..."


தேவகி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அம்மா" என்கிற அலறல் தெருவில் இருந்து கேட்டது.

ஜனனி குரலாட்டம் இருக்கே என்றபடி, பதறியடித்து வெளியே ஓடி வந்தாள், தேவகி.

"அம்மா... அப்பா போயிட்டாம்மா" என்று பெரும் குரல் எடுத்து அழுதாள் ஜனனி.

(தொடரும்)



"அங்கே என்னப்பா சத்தம்?"

"இந்த ஆளு அடைதான் சாப்பிட்டாராம்; அதனால அடைக்குத்தான் மாவரைப்பேன், தோசை, இட்லிக்கு அரைக்க முடியாதுன்னு தகராறு பண்றார் முதலாளி!"

— சீர்காழி வி. ரேவதி



குமுறல்

வாரியார் சுவாமிகளையா கிண்டலடிப்பது?

●● கும்பகோணம் சாரங்கபாணி திருக்கோயிலில் பெருமாளுக்கு உரிய சுமார் ரூ. 30 லட்சம் மதிப்புள்ள நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் கொள்ளையடிக்கப்பட்டு மாதங்கள் அநேகம் சென்று விட்டன. இன்றைய தி.மு.க. அரசாவது கோயில் நகைகளை மீட்டுத் தருவதில் முனைப்புடன் செயல்படுமா?
கும்பகோணம், சித்ரா கிருஷ்ணமூர்த்தி.

●● திருச்சி, பொன்மலைப் பகுதியில் 1964-ஆம் ஆண்டு, அன்றைய அமைச்சர் கக்கன், மகாத்மா காந்தி சிலை அமைக்க அடிக்கல் நாட்டினார். அந்தப் பீடம் 'பூங்கா' எனப்படும் பொட்டலில் இன்றும் காணப்படுகிறது. தேசத் தந்தைக்கும் கக்கனுக்கும் இந்த நிலை வேதனைப்பட வைக்கிறது. காங்கிரஸோ, அல்லது மாநில காங்கிரஸோ கவனிக்கக் கூடாதா?
குடந்தை, பிரசன்னகுமார்.

●● சீர்காழி, காந்திஜி பூங்காவில் உள்ள வாசக சாலைக்கு வரும் நாளிதழ்கள், தற்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள நகராட்சி மன்றத் தலைவர் படிக்க முதலில் அனுப்பப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் நேரத்தோடு நாளிதழ்களைப் படிக்க முடிவதில்லை.
சீர்காழி, ஆர். ராஜதுரை.

●● சமயபுரம் மாரியம்மன் கோயிலில் பஸ்ஸிலிருந்து நாம் இறங்கியதுமே கடை வியாபாரிகள் சூழ்ந்து கொண்டு அர்ச்சனைத் தட்டைத் திணித்து ரூ. 35 வாங்கி விடுகின்றனர். சாமி கும்பிட வரும் இடத்தில் கணக்குப் பார்க்கக் கூடாது என்று பல பக்தர்கள் இந்தச் சுரண்டலுக்குப் பணிகின்றனர். இப்படி ஏமாற்றுவோரை யார் தட்டிக் கேட்பது?
கருமண்டபம், ஈ. ராதாகிருஷ்ணன்.

●● பகவபாளையம் கிராமத்தில் ஊர் நத்தத்தில் உள்ள ஒரு ஏக்கர் நிலத்தை ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த தனியார் ஆக்கிரமித்து உள்ளனர். மக்களின் எதிர்ப்பு, போலீஸ் கேஸ் வரை போய் நீதிமன்றத்தில் வழக்கும் பதிவாகியுள்ளது. இதனிடையில் ஆக்கிரமிப்பாளர்கள் குறுக்கு வழியில் பட்டா வாங்க முழுமூச்சுடன் செயல்பட்டு வருகிறார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் சொந்த வீடுகள் உள்ள வசதியானவர்கள். எனவே இந்த ஒரு ஏக்கர் நிலத்தை ஊருக்குத் தேவையான சத்துணவுக் கூடம், கோயில், பஞ்சாயத்துக் கட்டடம் பள்ளிக்கூடம் போன்றவை அமைய தமிழக முதல்வர் காப்பாற்றித் தர வேண்டும் என்று பகவபாளையம் கிராம மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.
இராஜன்நகர், எம். சுதா.

●● மதுரை மாநகரில் நான்கு ரோடுகள் சந்திப்பு பலவற்றில் நிறுவப்பட்டுள்ள கடிகாரங்களில் பெரும்பாலானவை ஒரு நாளில் இரண்டே முறைதான் சரியான நேரம் காட்டுகின்றன. புதிய மதுரை மேயர் இதில் கவனம் செலுத்தி மதுரையின் இமேஜ் பாழாகாமல் காக்கட்டும்.
மதுரை - 14, எஸ். வைத்தியநாதன்.

●● பொது நிகழ்ச்சிகள், மற்றும் தொலைக்காட்சியில் பல குரல் மன்னர்கள் தோன்றி, "ஐ லவ் யூ சொன்னாளே" பாடலையோ அல்லது "சிக்குபுக்கு ரயிலே" பாடலையோ வாரியார் சுவாமிகள் பாடினால் எப்படி இருக்கும் என்று மிமிக்ரி செய்கிறார்கள். இது பெரும் அபசாரம். இந்த அநாகரிகத்தைப் பல குரல் மன்னர்கள் விட்டு ஒழிக்க வேண்டும்.
சென்னை - 83, ஆர். ஹரி.

"தயாரிப்பாளராக திரும்பி வருவேன்!"

"நீங்கள் சொல்வது கரெக்ட்தான்! நான் கடைசியாக டீ.வி.யில் வந்தது தீபாவளியன்று தூர்தர்ஷனில் ஒரு அரைமணி நேர நிகழ்ச்சிக்காக, வெண்ணிற ஆடை நிர்மலாவைப் பேட்டி கண்டேன். அதற்கு முன், நான் ராஜ் டீ.வி.யில் தொகுத்து வழங்கியது லலிதா சூப்பர் சிக்ஸ். அதுவும் நாலு மாதங்களுக்கு முன்பே நின்றுவிட்டது. தட்ஸ் ஆல்!'' என்கிறார் 'மெட்ரோ' ப்ரியா.

பாடல்களுக்குத் தொகுப்புரை வழங்குகிறேன் பேர்வழி என்று வெண்கலக் கடையில் யானை புகுந்த கணக்காய், லொட லொடப்பார் ப்ரியா. ஆனால் மிஸ்டர் ப்ரியாவான சித்தார்த் எப்படி? பேட்டி என்றால் வார்த்தைகளை எண்ணி (இதற்கு யோசித்து என்று பொருள் கொள்க) எண்ணிப் (ரொம்பக் குறைச்சலாக என்று பொருள் கொள்க) பேசுகிறார்! இன்னும் ஒருபடி மேலே போய், "ப்ரியா சொல்வதை முழுசாக அப்படியே எழுதி விடுவீர்களா?'' என்று சீரியஸாய் கேட்கிறார்.

"சித்தார்த்! நீங்கள், ப்ரியாவின் நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டபோது, "அட! நீங்கள் பேட்டி காண வந்தது ப்ரியாவைத்தானே? என்னை விட்டு விடுங்கள்!'' என்று சொல்லிவிட்டு இடத்தை காலி செய்து விட்டார்.

''நானே என்னுடைய நிகழ்ச்சிகளைப் பார்ப்பது கிடையாது. சொல்லப் போனால், டீ.வி. பார்க்கவே நேரம் கிடைப்பதில்லை.''

"இன்றைக்குக் காளான்கள்போல புதிது புதிதாக ஏராளமான இளம்பெண்கள் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாய் வந்து கொண்டிருக்கிறார்களே?''

"ஆமாம்! என்னையோ, பெப்ஸி உமாவையோ கூப்பிட்டால் கூடுதலாய் பணம் கொடுக்க வேண்டியிருக்கும். எனவே, புது முகங்களாய் தேடிப் போகிறார்கள் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள். புதுமுகங்களுக்கும், ஆரம்பத்தில், பாபுலாரிடியும், அங்கீகாரமும்தான் பணத்தைவிட முக்கியம். ஸோ, நிறைய புது முகங்கள். கூடவே சினிமா, சினிமா என்று நம் சாட்டிலைட் சானல்கள் எல்லாம் ரொம்ப போரடிக்கிறார்கள். சினிமா பாட்டுகளுக்கு வழங்கப்படும் தொகுப்புரைக்கும், பாட்டுக்கும்கூட சம்பந்தமிருப்பதில்லை.''

"அட! இதற்கெல்லாம் பிள்ளையார் சுழி போட்ட பெருமை உங்களுக்கும் உண்டல்லவா?''

"அந்தக் கால கட்டத்தில், சினிமா பாடல்களுக்கு கேலி, கிண்டலாய் தொகுப்புரை கொடுப்பது புதிய விஷயம். ஆகவே அதற்கு நல்ல வரவேற்பிருந்தது. ஆனால், இப்போதும் அரைத்த மாவையே அரைப்பது எரிச்சலாய் இருக்கிறதே!''

"திருமணத்துக்குப் பிறகு, குடும்பம், டீ.வி. நிகழ்ச்சிகள் என்று இரண்டையும் சமாளிப்பது கஷ்டமாய் இருந்ததா?''

''கல்யாணமானவுடன் தனிக்குடித்தனம் ஆரம்பத்தில் சிரமமாக இருந்தது. இப்போது, தனிக்குடித்தனத்துக்கு குட்பை சொல்லிவிட்டு, கூட்டுக் குடித்தனம். ஸோ, நோ பிராப்ளம்!''

''டீ.வி.ரசிகர்களிடமிருந்து இன்னமும் லெட்டர்கள் வருகிறதா?''

"நிறைய. ஆனால், நேரடியாய் எனக்கு வராது. சம்பந்தப்பட்ட அலுவலகத்துக்கு லெட்டர்ஸ் வரும்; படிப்பேன். பதில் போடுவதெல்லாம் கிடையாது. நிகழ்ச்சியொன்றில் சத்யராஜை கிண்டலடிக்கப் போய், அவரது ரசிகர்கள் நேரே வீட்டுக்கு வந்து, அடிப்பேன், உதைப்பேன் என்று மிரட்டினார்கள். நானும், என் பெற்றோரும் ரொம்ப பயந்து விட்டோம். மிரட்டலைப் பார்த்து, பயந்து டீ.வி. புரோகிராம் செய்வதை நிறுத்தி விடலாமா என்று கூட நினைத்தேன். நிகழ்ச்சியின் டைரக்டருக்கு விஷயம் சொல்ல, அவர் அப்போதே மன்னிப்பு கேட்டுக் கொண்டார். நான் மறுவார நிகழ்ச்சியில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.''

"அடுத்து ஏதாவது நிகழ்ச்சி வழங்கப் போகிறீர்களா?''

"சன் டீ.வி.யில் நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருந்த என்னை, ஜி.ஈ.சி.டீ.வி.யில் இருந்த எஸ்.வி.சேகர் கூப்பிட்டபோது, நல்ல ஆஃபர் என்று நம்பி ஒருவருட காண்டிராக்டில் போய்ச் சேர்ந்தேன். அது நான் செய்த தவறு என்று பிற்பாடுதான் உணர்ந்தேன். அப்புறம் ராஜ் டீ.வி.யில் நிகழ்ச்சி வழங்கினேன்.



எங்கே காணோம்

ஆனால் எல்லாமே ஒரே மாதிரியான புரோகிராம்கள் என்பதால் எனக்கே கொஞ்சம் சலிப்பு வந்து விட்டது. 'இப்போது, நான் நிகழ்ச்சி வழங்குகிறேன். வாய்ப்புக் கொடுங்கள்' என்று யாரிடமும் கேட்க விரும்பவில்லை. எனவே, சாட்டிலைட் சானல் ஏதாவது ஒன்றில் - நேரம் வாங்கி நானே நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்ப யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"என்ன மாதிரி நிகழ்ச்சி?"

"நிச்சயமாய் பொதுமக்கள் பங்கேற்பு கொண்ட கேம் ஷோதான் (game show). ஒருவர் பற்றி ஒருவர் நன்கு அறிந்த அம்மா- பிள்ளை, கணவன்-மனைவி, அண்ணன்-தம்பி, அக்கா-தம்பி போல அணிகள் பங்கேற்கும் நிகழ்ச்சி."

"ஜோடிப் பொருத்தம் டைப்பா?"

"நோ... இது வித்தியாசமானது. வரும்போது பாருங்களேன்"

"எந்த நிகழ்ச்சித் தொகுப்பாளரை உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்?"

"பெப்ஸி உமா என் நெருங்கிய சிநேகதி. ஆனால் உமாவின் பெப்ஸி உங்கள் சாய்ஸ் எனக்குப் பிடிக்காது. டெலிபோனில் பேசுவதில் என்ன விசேஷம் இருக்கிறது? அவர் மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் முறை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நான் ரசிக்கும் மற்ற தொகுப்பாளர்கள் ஜேம்ஸ் வசந்தன், பிரியதர்ஷினி."

சந்திப்பு: **எஸ்.சந்திரமௌலி**

"கோபமே வராது!" - மனைவி தரும் சான்றிதழ்

"திட்டமிட்டு இப்படி நடக்கவில்லை. தற்செயலாக நடந்ததுதான்" என்கிறார் வரதராஜன்.

எதை? தமது திருமண நாளை!

"வரதராஜன் தம்பதியின் திருமண நாள் நவம்பர் இரண்டு. அவரது பெற்றோரின் திருமண நாளும் அதுதான். அவரது மாமனார்-மாமியாரின் திருமண நாளும் அதுவே!

"என் குடும்பத்திலே எல்லாருமே வைதிகமானவர்கள். அப்பா சமஸ்கிருத வித்வான். தம்பி தாமல் ராமகிருஷ்ணனும், தங்கை பெருந்தேவி சேஷாத்ரியும் மேடை உபன்யாசத்தில் புகழ் பெற்றவர்கள். நான்தான் நாடகம், டீ.வி, சினிமா என்று கொஞ்சம் வழி மாறியவன்.

இந்து உயர்நிலைப் பள்ளியில் படித்த போது, அப்பா அங்கே ஆசிரியராக இருந்தார். ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்கள் பங்கேற்கும் நாடகம் ஒன்றும், மாணவர்கள் இடம் பெறும் நாடகம் ஒன்றும் நடக்கும். முன்னதில் அப்பாவும், பின்னதில் நானும் நடித்துப் பரிசுகள் வாங்கியிருக்கோம்" எனும் வரதராஜனுக்கு, அவர் மனைவி உஷா, திருமணத்திற்கு முன்பே உறவு - மாமா பெண்.

"நல்ல வேலையில் சேர்ந்த பிறகு வரன் பேசலாம் என்று நினைத்தாரோ என்னவோ, பாங்க் ஆஃப் இந்தியாவில் நான் சேர்ந்த அடுத்த மாதமே சம்பந்தப் பேச்சு நடந்தது. உடனே கல்யாணம்" என்று புன்னகையுடன் கூறியவர் சற்றே சீரியஸானார்.

"பலரும் என் டைம் மானேஜ்மென்ட் பற்றிக் கேட்பதுண்டு. எனக்கு நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமைந்திருப்பதால் தான் இது சாத்தியமாகிறது. குடும்பப் பிரச்னைகள் இல்லையென்றால் ஒருவன் பல சாதனைகளைச் செய்ய முடியும். கடவுள் பக்தி, ஒழுக்கக் கோட்பாடுகள் இதையெல்லாம் சின்ன வயசிலிருந்தே அப்பாவும் அம்மாவும் எனக்குள் அழுத்தமாக விதைத்திருப்பது ரொம்ப உதவியாக இருக்கிறது. திடீரென்று சில வாரங்கள் நாடக நிகழ்ச்சிகளுக்காக வெளியூர் போக நேர்ந்தால்கூட, வீட்டைப் பற்றிப் பயமில்லை. பெற்றோரும் தம்பியும் என் குடும்பத்தை கவனித்துக் கொள்வார்கள் என்பதால் கவலையில்லாமல் இருப்பேன்!" என்று சொல்லும் வரதராஜன் திரைப் படங்களிலும் நடித்திருக்கிறார்.

"என் பெரியம்மா ஒருத்திக்கு மட்டும் நான் நாடகம், சினிமான்னு 'கூத்தடிப்பது' பிடிக்கல்லே. தவறான பாதைக்குப் போயிடுவேனோன்னு பயம். ஆனால் என் மனைவி இதுவரை என் எந்த முயற்சிக்கும் தடை போட்டதில்லை. இது ஒரு பெரிய வரம். அதே சமயம் ரொம்ப எக்ஸைட் ஆகிவிடும் குணம் அவனுக்கு. எதையுமே உடனுக்குடன் செய்து முடிச்சுடணும்."

"உண்மைதான். ஆறு மணிக்கு சமைச்சா ஆறரைக்குள்ளே எல்லாரும் சாப்பிட்டுடணும்னு அவசரப் படுத்துகிற டைப்" என்று சிரித்தபடி வழிமொழிந்தார் பத்தாம் வகுப்புப் படிக்கும் ஹரிப்ரியா. அப்பாவைப் போலவே அமைதியான டைப்பாம். "கொஞ்சம் சோம்பேறித்தனம், கமென்ட் அடிக்கும் சுபாவம். இதில்கூட என்னைக் கொண்டிருக்கிறாள்"-இது வரதராஜன்.

மூத்த மகள் ஸ்ரீவித்யாவுக்கு சமீபத்தில் பதினெட்டு வயது முடிந்திருக்கிறது. மேஜரான கையோடு கல்யாணம். மாப்பிள்ளை சுந்தர்மாதவனும் ஏற்கெனவே இவர்களுக்கு உறவுதான். இப்போது கணவன் இருக்கும் பெங்களூரில் பி.காம் படித்துக் கொண்டிருக்கிறார்.

"வீட்டுக்குத் தேவையான அத்தனை

ஷாப்பிங்கையும் - என் உடைகள், காலணிகள் உட்பட - உஷாதான் செய்வாள். ஒருமுறை நான் நாடகக் குழுவோடு பம்பாய் போயிருந்தேன். குழுவினரெல்லாம் அவரவர் குடும்பத்துக்காக எதெதையோ வாங்கிக் கொண்டிருந்தார்கள். நானும் இப்படி வாங்கிக் கொண்டு போய் அசத்த வேண்டும் என்று முடிவெடுத்தேன். மனைவிக்காக நாலு புடைவைகளையும், மகன்களுக்காக சில ரெடிமேட் உடைகளையும் வாங்கி வந்தேன். சென்னைக்கு

• மனைவி, மகள்கள், மருமகனுடன்...



வந்து அவர்களிடம் காட்டிய பிறகுதான் தெரிந்தது. அவை எல்லாமே ஃப்ரீஸைஸ் என்று. நீள அகலம் குறைந்த புடைவைகளை என் தலையில் கட்டியிருக்கிறான் கடைக்காரன். மகன்களின் முழங்காலுக்குத்தான் வந்தன நான் வாங்கிய உடைகள்'' என்று இவர் ஒப்புதல் வாக்கு மூலம் தர, குடும்பத்தினர் வெடிச் சிரிப்பு சிரித்தார்கள்.

தொலைக்காட்சித் தொடர், நியூஸ், நாடகம் என்று பல முகங்கள் இருந்தாலும் வரதராஜன் ஆத்மார்த்தமாக அதிகம் ஈடுபடுவது நாடகங்களில்தானாம். "ராஜ் டீ.வி.யில்கூட ஒரு நிகழ்ச்சிக்காக சில நாட்கள் சிங்கப்பூருக்குச் சென்று வரக் கூப்பிட்டார்கள். அந்தந்தத் தேதிகளில் எனக்கு நாடகங்கள் இருந்தன. அவற்றை ஒரு போதும் கான்ஸல் செய்ய மாட்டேன் என்று அழுத்தமாகக் கூறிவிட்டேன்'' எனும் வரதராஜன், தாம் எதற்கும் கோபப் படுவதில்லை என்கிறார். ''மிகவும் உண்மை''-திருமதி.

''கோபப்பட்டு மற்றவரின் நட்பை இழப்பதோ, அவர்களைப் புண்படுத்துவதோ தேவையில்லாதது என்று நினைப்பவன் நான். ஆனால் நிறைய வருத்தப் பட்டிருக்கிறேன். அது நான் மட்டும் சம்பந்தப்பட்டது இல்லையா?'' என்கிறார்.

— அருண் சரண்யா

படம்: யோகா

34

ஸீதாபிராட்டியின் சரணாகத ரக்ஷணம் ராமனுடையதைக் காட்டிலும் உயர்ந்து நின்றது எப்படி...?

விபீஷணன், ராமனுடைய திருவடியைப் பிடித்துக் கொண்டபோது அவனை ரக்ஷித்து அருளினான் பரமாத்மா. சீதாபிராட்டியோ ஒரு படி மேலே போனாள்.

இந்திர புத்திரனான ஜெயந்தன் என்கிற காகாசுரன் பிராட்டியினிடத்திலே அபசாரமாய் நடந்து கொண்டான். அவனைத் தண்டிப்பதற்காக பகவான் பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணினான். காக்கை உருவத்தில் வந்த அசுரன் அஸ்திரத்துக்குப் பயந்து ஓடுகிறது...!

இந்திரனாலும் கைவிடப்பட்டு, திரிமூர்த்திகளாலும் கைவிடப்பட்டு ஊர் ஊராகப் போய் வீடு வீடாக அலைகிறது காக்கை! ஆனாலும் ராம பாணத்திலிருந்து அத



ர்றுயில்லை


முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

னால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

இப்படி இந்தக் காகம் வீடு வீடாகப் போய் சரணாகதி பண்ணியதற்கு ஒரு கதையை உபமானம் சொல்லுவார்கள்: ஒரு யானையை வைத்துக் கொண்டு ஜீவிதம் நடத்திக் கொண் டிருந்தான் ஒரு பாகன். ஒரு நாள் அந்த யானைக்கு மதம் பிடித்து, அடர்ந்த காட்டுக் குள் ஓடிப்போய்விட்டது. யானைப் பாகன் வந்து பார்த்தால் யானையைக் காணோம்...! எங்கெங்கோ தேடியும் அது கிடைக்கவில்லை. கடைசியில் ரொம்ப சிந்தாகிரஹனாய் விழுந்து கிடந்தான் அவன்!

பிறகு எழுந்து வீட்டுக்குப் போய், உருண்டு கிடந்த பானைகளை யெல்லாம் எடுத்து, ஒவ்வொரு பானையாக யானையைத் தேடினானாம்!

பெரிய பெரிய இடங்களெல்லாம் தேடிக் கிடைக்காத யானை, பானைக்குள்ளே கைவிட்டால் கிடைத்துவிடுமா! அதைப் போலதான் காகாசுரனும் பலம்படைத்தவர் களெல்லாம் கைவிட்ட பின்னர் ஒவ்வொரு வீடாய்ப் போய்-சாமினியர்கள் வீடாய்ப்



போய் அபயம் கேட்டானாம்!

எந்த வீட்டிலும் அசுரனுக்கு உதவி கிட்டவில்லை. கடைசியில் ராமனிடத்தி லேதான் வந்து சேர்ந்தான். 'சரணாகதி' என்று அவன் திருவடியிலே வந்து இறக்கையைப் படியச் செய்தான். விழுந்தவனின் தலை, ராம னின் பாதங்களை நோக்காமல் எதிர்த்திசை நோக்கித் திரும்பியிருந்தது.

சீதாபிராட்டி பார்த்தாள்... 'குழந்தைக்கு சேவிக்கத் தெரியலையே' என்று காகாசுரனின் தலையை ராமனின் திருவடி நோக்கித் திருப்பி வைத்தாள்!

எத்தகைய கொலைக் குற்றம் புரிந்திருக் கிறான் அவன்! அப்படிப்பட்டவனை என்ன வேண்டுமானாலும் பண்ணலாம் அல்லவா! ஆனால் பகவான் மகாலக்ஷ்மியினுடைய காருண்யத்தைப் பார்த்துத் தணிந்து போனான். காகாசுரனுடைய ஒரு கண்ணை மட்டும் போக்குவதோடு நிக்ரஹத்தை நிறுத் திக் கொண்டான்.

இதனால்தான் இன்றைக்கும் காக்கை களுக்கு ஒரு கண் பார்வை இல்லாமலிருக் கிறது. தலையைத் திருப்பித் திருப்பி, சாய்த் துத்தான் அதனால் பார்க்க முடியும்.

காகாசுரனின் தலையைத் திருப்பி வைத்து அவனுக்கு அனுக்ரஹம் பெற்றுத் தந்ததை காகாக்ஷி நியாயம் என்று சொல்வார்கள்! பிழைத்துப் போன காக்கைக்கு ரொம்ப சந் தோஷம். அன்று முதல் அது சமஸ்க்ருதத்திலே பேச ஆரம்பித்து விட்டது! என்ன பேசுகிறது அது..? நாம் கொல்லைப் பக்கத்திலே துணி துவைக்கும் போது நம் கிரஹத்திலே வந்து சுவரின் மேல் உட்கார்ந்து கொள்கிறது. "கா...கா:" "கா...க:" என்று கரைகிறது. 'கா...?' என்றால் 'எவள்'. 'க:...?' என்றால் எவன்.

'அந்த ராமனையும் சீதை யையும் போல சரணா கத ரக்ஷணம் பண்ணக் கூடியவர்கள் எவன்?...(கா), எவன்...?(க:), என்று நம்மைப் பார்த்துக் கேட் கிறது!'.

உண்மையிலே அவர் களைப் போல சரணாகத ரக்ஷணம் பண்ண வேறு யாரும் இல்லையாதலால் நாமும் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌன மாக இருந்து விடுகிறோம். உடனே காக்கையும் பறந்து போய்விடுகிறது...! அடுத்த வீட்டுக்குப் போய் உட்கார்ந்து அதே கேள்வியைக் கேட்கிறது.

இன்றைக்கும் அந்தக் காக்கை எம்பெரு மானையும் பிராட்டியையும் நினைத்து நினைத்து 'கா க:' என்று சொல்லித் திரிகிறது என்றால் அதற்கு யார் காரணம்...?

இயலாமல் வந்து திருவடியிலே விழுந்த நேரத்தில், அவன் தலையைத் திருப்பி வைத்த சீதா பிராட்டியின் காருண்யம் காரணம்!

அதே காருண்யம்தான் அத்தனை கொடிய ராக்ஷஸ ஸ்த்ரீகளையும் ஆஞ்சநேயரிடத்தி லிருந்து காப்பாற்றியது. திரிசடை ஒருத்தி பண் ணிய சரணாகதியினுள்ளேயே அத்தனை பேரையும் 'அடக்கி, சரணாகத ரக்ஷணம் பண்ணி விட்டாளே தாயார். எனவே, அந்த மஹாலக்ஷ்மியின் காருண்யமே மிக உயர்ந்தது என்று அபயப் பிரதான காரத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.


ராமாயணம் வேத சமானம் என்று சொன்னால், அதில் வருகிற விபீஷண சரணா கதிக்கு உபநிஷத் ஸ்தானம் இருக்கிறது. வேதாந்தம் அது! உபநிஷத் இல்லாமல் வேதம் இல்லை அல்லவா...!

சரணாகதி வித்யையே எல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்ட வித்யை என்பதை விளக்குகிறது விபீஷண சரணாகதி.

ஒருத்தர் பக்தி யோகம் பண்ணுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதன் முடி விலேயே, இந்த ஜன்மத்திலேயே அவருக்கு மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்ல முடி யாது. இன்னொரு ஜன்மாவுக்கு அது தொடர லாம்...! பல ஜன்ம பரம்பரைகளுக்குக் கூட பிறவியை சகிக்க வேண்டியிருக்கும். ஆனால் சரணாகதி பண்ணினால் பரமாத்மா மோக்ஷத்தை உடனே கொடுத்து விடுகிறான்.

இப்படிச் சொன் னால் சந்தேகம் வரும்- நியாயமான சந்தேகம்- ஏற்கெனவே நாம் செய்த பாவ மூட்டை கள்... இனிமேல் வரும் பாவங்கள் எல்லாம் என்ன ஆகும்... சர ணாகதியினாலே அவற்றின் துர்ப் பலன் எல்லாம் போய்விடுமா...?

பக்தி யோகமே இந்தப் பாவ மூட் டைகளை அழித்து விடும். அப்படி யிருக்கும்போது சரணாகதி யோகத்தால்



இவற்றை அழிக்க முடியும் என்று சொல்லத் தேவையில்லை... சரணாகதியிலே இன்னொரு ஏற்றம் என்னவென்றால் அது பாவ மூட்டைகளையும் அழித்து மோக்ஷத்தையும் வாங்கிக் கொடுத்துவிடும்.



"நீங்க என்ன ஜவுளிக் கடைல வேலை பார்த்துக்கிட்டே கதை எழுதணும்னு ஆசைப்பட்டு வந்திருக்கீங்களா?"
"அட! எப்படி கண்டுபிடிச்சீங்க?"
"நூறு மீட்டர்ல ஒரு நாவலும், பத்து மீட்டர்ல ஒரு சிறுகதையும் எழுதியிருக்கேன். வேணுமான்னு கேட்டீங்களே, அதை வைச்சுத்தான்!"

- தமாஷ்காரன்

ஆசார்யர்கள் சரணாகதியை நான்கு விதமாகப் பேசினார்கள்.

உக்தி நிஷ்டா என்பது ஒரு வகை. ஆசார்யராய் இருக்கும்படியான ஒருவர், எம்பெருமான் எதிரிலே நம்மை நிறுத்தி, நம்மைக் குறித்து அவனிடத்திலே எடுத்துச் சொல்லி, நம்மையும் சொல்ல வைத்து, இந்த ஆத்மாவை அவன் திருவடியிலே சேர்ப்பிக்கும்படியான சரணாகதி உக்தி நிஷ்டை.

தனக்கே சக்தி இருந்தால், தானே பகவானை சரணாகதி பண்ணலாம். இது கவ நிஷ்டை. தனக்காக ஆசார்யனையும் பண்ணச் சொல்லி வேண்டலாம்... அதற்கு ஆசார நிஷ்டை என்று பெயர். பாகவதோத்தமர்களை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானிடத்திலே சரணாகதி பண்ணலாம். அதற்கு பாகவத நிஷ்டை என்று பெயர்.

இப்படி சரணாகதியிலே பல நிலைகள்... அத்தனை நிலைகளையும் ராமாயணத்திலே எடுத்துக்காட்டியிருக்கிறது! அதனால்தான் கொல்லத் தகுந்த குற்றமே பண்ணியவனாயிருப்பினும் அவன் சரணாகதி பண்ணிவிட்டானானால் ஒருத்தனைக் காட்டிக் கொடுப்பதில்லை. அத்தகையவனையும் ரக்ஷித்தே தீர வேண்டும் என்பதற்காகவே பகவான் ராமாவதாரம் பண்ணினான்.

மனத்திலே துஷ்டி (மன நிறைவு) இருந்தால் ஒருத்தருக்குப் புஷ்டி தானாக வந்துவிடும். ஆனால், மனத்தில் வியாகூலம் இருப்பின் எவ்வளவுதான் நன்றாகச் சாப்பிட்டாலும் புஷ்டி ஏற்படுமா?! ஒருநாளும் ஏற்படாது.

ராமாவதாரத்திலே பரமாத்மா எப்போதுமே புஷ்டியாகவே இருந்தானாம்!

ஆஞ்சநேயன் ராமனைப் பார்த்த சமயம், அவன் "ஹா சீதே! ஹா சீதே!" என்று அரற்றியபடியிருந்தானாம். அந்த நேரத்திலே ஆஞ்சநேயனுக்கு ராமனைக் குறித்து ஒரு தப்பபிப்ராயம் ஏற்பட்டதாம்.

'இவன் என்ன இப்படி அரற்றுகிறானே! ஸ்த்ரீலோலனாக இருப்பான் போலிருக்கிறதே! எப்போது பார்த்தாலும் 'சீதே! சீதே!' என்று சொல்லிக் கொண்டிருக்கிறானே... என தப்பாக எடை போட்டு விட்டானாம்.

அதே ஆஞ்சநேயன் அசோகவனத்திலே சீதையைப் பார்க்கிறான். ராமனையும் சீதையையும் தராசிலே நிறுத்தால் அழகிலே சமமாக இருப்பார்கள் என்பதை உணர்கிறான்.

பங்குனி உத்திர திருநாளில் ரங்கநாதரும் ரங்கநாயகி தாயாரும் ஒரே இருக்கையில் சேர்ந்து எழுந்தருளியிருக்க, எம்பெருமான் பாஷ்யக்காரர், அந்தத் திருக்கோலத்தை ஆச்சர்யத்துடன் பாடுகிறார். ஆஞ்சநேயர் ஆச்சர்யப்பட்டது மாதிரி அவரும் ஆச்சர்யப்படுகிறார். பகவானுக்கு சமமான ரூபம், குணம், சீலம் எல்லாம் நிரம்பியவளாக தாயார் தெரிகிறாளாம்!

ஆஞ்சநேயனும் அப்படித்தான் ஆச்சர்யப்பட்டான். அவனுக்குக் கூடுதலாக இன்னொரு ஆச்சர்யம்- சீதா பிராட்டியைப் பிரிந்தும் ராமன் இப்படி புஷ்டியாக இருக்கிறானே என்ற ஆச்சரியம்.

இதிலிருந்து தெரிகிறதல்லவா, ஸ்ரீ ராமபிரான் எப்போதுமே புஷ்டியாக இருந்தான் என்று!

ராமபிரானுக்கு இந்த அவதாரத்திலே ரொம்ப விசேஷம் நேத்திரத்தினுடைய அழகு. மஹான்களையெல்லாம் ஈர்த்திருக்கிறது அந்த நேத்ரம். ராமாயணத்திலே அவன் நேத்திரத்திற்குத் தோற்றவர்கள் மூன்று பேர்- ஆஞ்சநேயன், தசரதன், சபரி.

விச்வாமித்ரர் ராமனை அனுப்பச் சொல்லிக் கேட்கிறார் தசரதனிடம்... தசரதன் கதறி அழுகிறான்! 'நீங்கள் திருவடியால் ஆக்ஞாபிப்பதை சிரஸினால் செய்யக் காத்திருக்கிறேன்...' என்று விச்வாமித்ரரிடம் சொன்னவன் கலங்கிப் போய் அழுகிறான்! மஹரிஷியைப் பார்த்துச் சொல்கிறான்.

"இது நியாயமா? நீங்கள் என் குழந்தையைக் கேட்கிறீர்களே இது நியாயமில்லை. நான் சேவிக்கும்போது ஒரு கை நிறைய அக்ஷ

ஐதையை எடுத்து என் தலையில் போட்டு தீர்காயுஷ்மான் பவ என்று ஆசீர்வாதம் பண்ணினீரே... இப்போது மறைமுகமாக என் பிராணனை அல்லவா கேட்கிறீர்கள்! என் தலையில் போட்ட அக்ஷதைக்கு என்ன அர்த்தம்.... நான் ராமனை அனுப்ப மாட்டேன்...'' என்று புலம்புகிறான்.

''சின்னக் குழந்தை அவன். அஸ்தமனமானால் தூங்கிப் போய்விடுவான்! நீர் அவனைக் கூப்பிடுவதோ ராக்ஷஸர்களை எதிர்ப்பதற்கு. ராத்திரி வேளையிலே கண் விழித்துச் சண்டை போடுகிற அளவுக்கு இவனுக்கு வயசில்லையே...''

ராமன் பிறந்த பிற்பாடு தசரதனுக்கு வேறு வேலையே கிடையாதாம். சிம்மாஸனத்தில் அமர்ந்தபடி சுமந்திரனை அழைத்து, ராமனைக் கூட்டி வரச் சொல்லுவானாம்.

'அப்பா கூப்பிட்டீர்களா?' என்று ராமன் வருவான்.

'போ போ' என்பானாம் தசரதன். பவனத்தை விட்டு ராமன் வெளியேறும் நேரம் பார்த்து "வா" என்பானாம் மீண்டும். திரும்பவும் 'போ...', 'வா...' இப்படியே...!

குலசேகராழ்வாருடைய அனுபவம் இது! அந்த ராமாவதாரத்திலே ஈடுபட்டு தசரதன், ராமனின் முன்னழகையும் பின்னழகையும் மாறி மாறி சேவித்தான். அந்த நேத்திர அழகிலே ஈடுபட்டுத்தான் அப்படி சேவித்தான்.

சபரியும் இந்த நேத்ர விசேஷத்தைப் பாராட்டுகிறாள்:

''தங்கள் திவ்யமான பார்வை என்மீது பட்டது. உத்தமமான உலகத்துக்குப் போய்க் கொண்டேயிருக்கிறேன்...'' என்றாள். அப்படியெனில் அந்த கடாக்ஷம் எப்பேர்ப்பட்டதாயிருக்கும்!

ஆஞ்நேயருடைய அனுபவத்தைப் பாருங்கள்... சீதை அவனிடம் கேட்டாளாம். 'ராமன் எப்படி இருக்கிறான்? அவனுடைய புஜங்கள் எப்படியிருக்கின்றன...?'

ஆஞ்சநேயர் உடனே ஆரம்பித்து ராமனின் கண்களைத்தான் வர்ணிக்கிறார்!- கண்கள்தான் அவனை ஆகர்ஷித்தன என்பதால்.

'மரத்துக்கு மரம் தத்தித் திரியும் ஒரு குரங்கினைப் போல் திரியக்கூடிய என் உள்ளத்தையே கொள்ளை கொண்டு விட்டதே அந்த நேத்ரம்! யோகிகளின் உள்ளத்தை அது எவ்வாறு கொள்ளை கொள்ளும் என்று சொல்லவும் வேண்டுமோ...!' என்று எண்ணுகிறான்.



''டாக்டர், நேத்து வந்த கனவே எனக்கு இன்னைக்கும் வருது!''
''அதுக்கு ஏன் கவலைப்படறீங்க? மறு ஒளிபரப்பாக இருக்கும்.''
— எஸ். காமராஜ்

சுபமான பார்வை பகவானின் பார்வை!

அங்கண் இரண்டுங் கொண்டு
எங்கள் மேல்
நோக்குதியேல்
எங்கள் மேல் சாபம்
இழிந்தேலோர் எம்பாவாய்

என்று பாடுகிறாள் ஆண்டாள்.

நம்மாழ்வார் சொல்கிறார், 'ஒரு யமனுடைய விசேஷமான தன்மையை உலகத்திலே நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உன்னிடத்திலே இரண்டு யமன்கள் வைத்துக் கொண்டிருக்கிறாயே....!' என்கிறார்.

இரண்டு யமன்கள்...?

"ஆம்! உன் திருவடி பற்றக்கூடியவர்களின் ஆவி உண்ணும் இணைக் கூற்றங்கொலோ...!' என்கிறார்.

திருநேத்திரங்களைக் கடல் என்கிறார்; நதி என்கிறார். நேத்திர நதியிலே எழக்கூடிய சுழிகள் எத்தனை பாகவதோத்தமர்கள் வந்தாலும் ஏற்கக்கூடிய சக்திவாய்ந்தவை!

சூர்ய ரச்மி பட்டதும் அன்றலர்ந்த தாமரை எப்படி சோபாயமானமாக இருக்குமோ அப்படி காணப்படுகிறாராம் ஸ்ரீ ராமர். அவர் முகம் தாமரை; நேத்திரங்கள் தாமரை; நாபி தாமரை; திருவடி தாமரை! தாமரைக் காடு பூத்தது போலே இருக்கிறான். அந்த பத்ம வனத்திலே வாசம் பண்ணுகிறாள் மஹாலக்ஷ்மி! எம்பெருமானின் திருமுடியிலிருந்து திருவடிவரையில் எல்லாம் பத்ம மயம். மஹாலக்ஷ்மி வாஸம் பண்ணுவது அவன் ஹ்ருதய பத்மத்தில்!

இப்படி ஹ்ருதய பத்மத்தில் ஸ்ரீயைத் தாங்கி, பத்மவனமாகவே விளங்கும் பகவானிடம் சரணாகதி பண்ணி அவன் தாமரை நேத்திரங்களால் கடாக்ஷிக்கப்படுகிறவர்கள் எல்லாம் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறார்கள்.

(தொடரும்)


மேலும் ஒரு மனிதர்

லைஃபான்

பதினையாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ள அந்தப் பெரிய தொழிற்சாலையிலிருந்து வேலைக்கான நியமன ஆணை நேற்றே வருமென்று காத்திருந்தான், நாவரசு. இன்றைக்குத்தான் வந்தது. பெயர், பிறந்த நாள், படிப்பு, சாதி - மதம் என்று பதினைந்து கேள்விகள் கேட்டு, அதைப் பூர்த்தி செய்து வட்டாட்சியர் ஒப்பத்துடன் வியாழக்கிழமைக்கு முன்னதாக வந்து சேர வேண்டும் என்று கண்டிருந்தது.

காலண்டரைப் பார்த்தான்.

அடுக்கடுக்காய 'சிவப்புத் தேதிகள்...'



கோபத்தின் உச்சம்.

'வந்திருக்கிற பேப்பரில் தாசில்தார் கையெழுத்து வாங்கி வர்ற வியாழக்கிழமைக்குள் தொழிற்சாலைக்குப் போய்ச் சேரணும்."

"சேர்த்துட வேண்டியதுதானே?" என்று கேட்டார் அப்பா.

"சாத்தியமில்லை."

"ஏன்?"

"நாளைக்கு சனி - ஞாயிறு விடுமுறை. திங்கள் உள்ளூர் தர்கா சந்தூரிக்கு லோக்கல் விடுமுறை. தொடர்ந்து மூணு நாள் பொங்கலுக்கு... இனி தாசில்தார் தரிசனம் வெள்ளிக்கிழமைதான்."

"அப்ப ஃபேக்டரியும் லீவாத்தானே இருக்கும்?"

"ஊஹூம்! ஞாயிறு விட்டால் பொங்கல் விடுமுறை ரெண்டு நாள்தான் அவுங்களுக்கு." வேதனைப் பெருமூச்சு வெளிப்பட்டது.

"இப்ப என்னங்க பண்றது?"

- அம்மாவின் குரலும் ஜீவனற்றுப் போனது. ஆற்றாமை, அவசர கதியில் சிந்திக்க வைத்தது...

"இந்தப் பேப்பரில் தாசில்தார் கையெழுத்து வாங்கிட்டா தம்பிக்கு வேலை நிச்சயம்தானேம்மா?" என்றான், அண்ணன் பூவரசு.

'ஆமா' என்கிற மாதிரி தலையை அசைத்து, "ஆனா இன்னும் ஆறு நாளைக்கு ஆபீஸ் திறக்காதாமே..."

என்றான் வேதம்.

"அதை நான் பார்த்துக்கறேன்" என்று அவசரமாக ஆர்டரைப் பிடுங்கிக் கொண்டு வெளியே ஓடினான் பூவரசு.

அலுவலக வளாகம். வெறிச்சோடிக் கிடந்தது.

சற்றே தயங்கி உள்ளே நுழைந்தான்.

'துணை வட்டாட்சியர்' என்ற பதவிக்குப் போடப்பட்டிருந்த நீண்ட தேக்கு மேஜையில் ஒரு பெரியவர் சுருண்டு படுத்திருந்தார்.

"சார்..."

"யார்?" என்ற பெரியவரின் 'எழுச்சி', படுத்துக் கிடந்த தோற்றத்துக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது.

வார்த்தைகளை சமைக்கத் தெரியாமல் எடுத்த எடுப்பிலேயே பேப்பரை பெரியவரிடம் நீட்டினான் பூவரசு.

மற்றதை, 'அவர் பார்த்துச் சொல்லட்டும்' என்ற நினைப்பில், கொண்டு வந்த 'இருநூறு' பாக்கெட்டில் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான். பால் விற்றுச் சேமித்த பணம் பத்திரமாக இருந்தது.

"என்ன இது?" என்றார் பெரியவர், பூவரசு கொடுத்த பேப்பரைப் பார்த்து விட்டு. குரலில் லேசான அதட்டல் தொனித்தது.

"தம்பிக்கு வேலை... தாசில்தார் கையெழுத்து வேணும்."

"கலபமாச் சொல்லிட்டே?" – அதட்டல் அதிகரித்தது.

"எப்படிச் சொல்லணும்?" என்றான் பூவரசு.

– அவன் சொன்னவிதம்; குரலின் தாழ்ச்சி. 'எது சொன்னாலும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்' என்று பதுங்கிய உடல்... 'எனக்கு அவ்வளவாகப் புரியாது' என்று பிரகடனப்படுத்தும்



"அந்தப் பத்திரிகை செஞ்சது ரொம்ப அநியாயங்க."

"ஏன்? என்ன ஆச்சு?"

"பின்னே என்னங்க? நட்சத்திரக் குறியிட்ட கேள்விக்கு பரிசு தருவதாக அறிவிச்சிருந்தாங்க. நான் என் கேள்விக்கு நட்சத்திரக் குறியிட்டுத்தான் அனுப்பினேன். ஆனா, பரிசு கிடைக்கலை."

– எஸ். பாலாஜீ

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

சங்கடமான முகபாவம் – இத்தனையும் உள்ளடக்கிய கேள்வி பெரியவரைப் புரட்டிப் போட்டது.

காகிதத்தில் எழுதி இருப்பதைப் படிக்கத் தெரியாவிட்டாலும், வந்திருப்பவனை உலுக்கி உலுக்கியே விசயத்தைக் கறந்து விடுகிற அனுபவ உத்தி தூரப் போய் விழுந்தது.

"உன் தம்பி எங்கே?" என்றார்.

"லீவ் நாள்ல வேலை ஆகாதுன்னு..."

"ம்.. வெவரமானவன் வீட்ல இருக்கான். நீ வந்து நிக்கிறே பாவம்..."

– பெரியவர் பூவரசுவை கூர்ந்து பார்த்தார்; படித்தார் எனச் சொல்லலாம்.

தன்னை ஆழமாகப் பார்க்கிற, அனுபவம் பழுத்த கண்ணில் தெரிந்த கனிவு, 'தான் வந்த காரியம் நடந்து விடும்' என்ற நம்பிக்கையை நொடியில் தோற்றுவிக்க –

சட்டென்று அவரது கையைக் கோத்து கண்ணில் ஒற்றிக் கொண்டான் பூவரசு.

'கடவுள் உங்க மூலமாத்தான் என் தம்பிக்கு நல்ல வழிகாட்டணும்' என்கிற மாதிரி எதுவோ சொல்ல வந்தவன், வார்த்தை வக்கணையாகப் படாமல் வாயால் சொல்ல வந்ததைக் கண்ணால் பூர்த்தி செய்தான்.

அவனாகக் கையை விடுவிக்கக் காத்திருந்து, "இப்படி உட்கார்" என்ற பெரியவரின் குரலில் ஒரு தீர்மானம் தெரிந்தது...

– நிமிட நேரம் வளாக வெளியை வெறித்தார்.

நாற்பத்தைந்து வருசமாய் வளையவரும் வளாகம். ஆங்கிலேயர் காலத்தியதும் அதற்குப் பிந்தியதுமான கட்டடங்கள்... பங்கா இழுக்கிற வேலைக்கு இருபது வயதில் காம்பவுண்டுக்குள் நுழைந்த நாள் 'பளிச்'சென்று ஞாபகம் வந்தது... யாரோ – எப்பவோ தன் பிறந்த தேதியை எழுதுவதில் செய்த தவறு காரணமாக ஐந்து வருடத்துக்கு முன்பே ஓய்வு பெற்றிருக்க வேண்டிய தனக்கு இன்னமும் கிடைக்கிற சம்பளம் இனித்தது.... அதுவும் இந்த மாதத்தோடு முடிந்து விடும் என்ற ஞாபகம் வந்து நினைவை நெறித்தது...

"இதோ பார்! ஒம்பது மணிக்கு என் ஜோடிதார் வந்துடுவார். அவர போன்ல உக்கார வச்சுட்டு நாம வங்கவனம் போறோம்" என்றார்.

"எதுக்கு?" என்றான் பூவரசு.

"தாசில்தார் அங்கதான் கேம்ப்."

உற்சாகமாகிப் போனான்.

அடுத்த வினாடியே வந்து விட்டார், 'ஜோடிதார்'.

"இதைப் புடி" என்று ஒரு நீள ரிஜிஸ்தரை கொடுத்து, வந்தவரிடம் பொறுப்பை ஒப்ப

டைத்து விட்டு, "பொறப்படுப்பா" என்று பெரியவர் பூவரசுவைக் கிளப்பவும் –

"தச்சங்கொல்லையில் தகராறாம். தாசில்தார் போயிருக்கார்" என்று தகவல் பொடியைத் தூவினார் பொறுப்பேற்றுக் கொண்டவர்.

பெரியவர் ஸ்தம்பித்துப் போனார்.

"ஏன் நின்னுட்டீங்க?"

"காலைல ஆறு மணிக்கு விட்டா சாயுங்காலம் ஆறுக்குத்தானே அடுத்த பஸ் – தச்சங்கொல்லைக்கு."

"சைக்கிள் எதுக்கு இருக்கு?" என்றான் பூவரசு.

"பதிமூணு கிலோ மீட்டர்ப்பா."

"ஓலகமே சுத்தலாம் உக்காருங்க" என்று மிதிக்க ஆரம்பித்தான்.

தச்சங்கொல்லை பிரச்னை சுமுகமாக முடிந்திருக்க வேண்டும். தெளிவாக இருந்தது – பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்த தாசில்தார் முகம்.

'அருமையான தருணம்' என்ற மகிழ்வில் பெரியவர் நமஸ்கரிக்க, "வாங்க பெரியசாமி" என்றார், தாசில்தார்.

பூவரசு அவரது பெயரைத் தெரிந்து கொண்டவனாய் ஒதுங்கி நிற்க, படியேறிப் போய் தாசில்தாரிடம் 'பேப்பரை' சமர்ப்பித்தார், பெரியசாமி.

"என்ன இது?"

– பெரியசாமி பூவரசுவைக் கேட்ட அதே கேள்வி. இப்போது தாசில்தார் முறை.

"வேண்டிய பையனுக்கு வேலை உத்தரவு. ஐயா கையெழுத்து வேணும்."

"மொட்டையா இருக்கே" என்றார், பார்த்து விட்டு.

"வி.ஏ.ஓ-வைத் தேட அவகாசமில்லே. ஆர்.ஐ... ஐயாவோட வங்கவனம் கேம்பல இருப்பார்னு பொறப்புட்டேன்."

"நம்ம ஆளுங்க கையெழுத்து கிடக்கட்டும் பெரியசாமி... மனுதாரர் கையெழுத்து?" என்று கேள்விக்குறியைப் பெரிதாக்கினார், தாசில்தார்.

பேப்பரை உற்றுப் பார்த்த பெரியசாமிக்கு மொத்த முயற்சியும் செத்துப் போனது மாதிரி இருந்தது.

தாசில்தார் நீட்டிய பேப்பரைத் தாழ்மையுடன் திரும்பப் பெற்றுக் கொண்டு படி இறங்கினார்.

'மனுதாரர் கையெழுத்து கூடப் பார்க்காமல் எப்படி ஏமாந்தோம்?' என்ற வெட்க உணர்வு தாக்க –

"ஏம்ப்பா! உனக்கு வி.ஏ.ஓவைத் தெரியாது... ஆர்ஐன்னா வெளங்காது... சரி.. வீட்ல இருக்கிற பையன்ட்ட கூடவா கையெழுத்து வாங்கிட்டு வரத் தோணலை?" என்று நெடுமரமாய் நின்றவனிடம் நொந்து கொண்டிருந்த பெரியசாமியை, மேலே வரச் சொல்லி சைகை காட்டினார், தாசில்தார்.

ஓடிப் போனார்.

'இந்த மாதத்தோடு ஓய்வுபெறப் போகும் பெரியசாமியின் கடைசி விண்ணப்பம் இது என்ற கதியில் பேப்பரை வாங்கி கையெழுத்திட்டு சாவி ஒன்றையும் கொடுத்தனுப்பினார் தாசில்தார்.

பார்த்துக் கொண்டிருந்த பூவரசுக்கு கண்ணில் ஆனந்தப் பெருக்கு.

நன்றி சொல்லி, நமஸ்கரித்து இறங்கி வந்தவரை ஏற்றிக் கொண்டு வந்த வேகத்தை விஞ்சி சைக்கிளை மிதித்தான்...

கையெழுத்து வாங்கின பேப்பரை தன்னிடம் தராமல் தானே வைத்துக் கொண்ட பெரியவரின் செயல் குழப்பியது...

கொண்டு வந்த பணத்தை முன்னமேயே கொடுத்திருக்கணுமோ என்ற தவிப்பு...

அலுவலகம் வந்து விட்டது.

சைக்கிளை விட்டு பெரியசாமி இறங்கியதும், சட்டைப் பையிலிருந்த பணத்தை எடுத்து மரியாதையுடன் அவரது கைகளில் வைத்தான்.

துடித்துப் போனார்.

"என்னப்பா இப்படிப் பண்ணிட்டே.... என்னப் பார்த்தா பிடுங்கித் திங்கிறவனாவா தெரியுது?" என்றவரின் கண்கள் லேசாய்க் கசிந்து விட்டன.

குற்ற உணர்வு சற்றுமின்றி, "பெரியய்யா மன்னிக்கணும்... கையெழுத்து வாங்கின பேப்பரை தரலேன்னதும் பணத்தைக் கொடுத்தேன்" என்றான் பூவரசு, வெகு இயல்பாக.

இந்த வெள்ளையான – வெளிப்படையான பதில் போதுமானதாக இருந்தது பெரியசாமிக்கு.

அழைத்துக் கொண்டு அலுவலகத்துக்குள் போனார். தாசில்தாரிடமிருந்து, வாங்கி வந்த சாவியைத் துழாவி எடுத்து 'வட்டாட்சியர்' என்று பொறிக்கப்பட்ட அறையைத் திறந்தார்.

மேஜை மேல் இருந்தது முத்திரை. எடுத்து பூவரசுவின் பேப்பரில் – தாசில்தார் கையெழுத்துக்கு கீழ் பதிக்கவும் கோபுர முத்திரை சிரித்தது...

சிலிர்த்துப் போனான், பூவரசு.

பேப்பரை தராமல் தக்கவைத்துக் கொண்ட பெரியசாமியின் செயலுக்குக் காரணம் புரிந்து காலைத் தொட எத்தனித்தான்.

தடுத்து, முத்திரையிட்ட பேப்பரைக் கொடுத்து போயிட்டு வா என்றார், அவர்.

23

என்னை விலாமா?

''லஞ்சுக்கு வெளியே போவோம்னு வீட்டுல சொல்லிட்டு வந்திருக்கேன்... நீங்களும் எங்ககூட வர்றதா நினைச்சுட்டிருக்காங்க...''

வசந்தியுடன் வந்து நுழைந்ததும், நுழையாததுமாகச் சொன்னான் சேகர்.

''ஆயிரத்தெட்டு கேள்வி கேட்டாங்க. 'திடீர்னு என்ன லஞ்சு? ஆபீஸ்ல வேலை இல்லியா? அப்பாயின்ட்மென்டெல்லாம் கான்ஸல் பண்ணிட்டியா?'ன்னு அப்பா துளைச்சாரு. அம்மாவானா 'ஏண்டா எங்க போறே லஞ்சுக்கு...? சுகன்யா பார்த்டேயா இன்னைக்கு? டேபிள் புக் பண்ணியிருக்கியா? நான் வேணா போன் பண்ணி புக் பண்ணட்டுமா'ங்கறாங்க...''

''எப்படி சமாளிச்சே...?''

''எப்படியோ, எல்லார் கண்ணுலயும் மண்ணைத் தூவிட்டு வந்தாச்சு சுகன்யா. அதெல்லாம்கூடப் பரவாயில்லை... இந்தப் பொண்ணுக்கு தைரியம் சொல்றதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுச்சு...''

வசந்தியைப் பார்த்துச் சொன்னபோது அவள் எதுவும் நடக்காதது போல் கலபமாகச் சிரித்தான். ''போகலாமா....? டாக்டர் சொன்ன நேரத்துக்குப் போய்ச் சேர வேண்டாமா...?''

ஹாண்ட்பாகை எடுத்துக் கொண்டு கதவைப் பூட்டும் நேரம் 'ஒரு நிமிஷம்' என்று மீண்டும் உள்ளே போனாள் சுகன்யா. டெலிபோன் எண்கள் அடங்கிய சிறிய நோட்புக்கை எடுத்துக் கொண்டு திரும்பினாள்.

''எதுக்கு மன்னி உள்ளே போனேள்...?''

''போன் புக் எடுத்துக்க மறந்துட்டேன் வசந்தி.''

''ஏதாவது அவசரம்னா யாருக்காவது போன் பண்ண நம்பர் தேட வேண்டாமில்லையா...''

''என்ன எமர்ஜன்ஸி வரும்னு நினைக்கறேள் மன்னி... அட்மிட் ஆகணும்னு சொல்வாரா...?''

''சே சே! அப்படியெல்லாம் விபரீதமா கற்பனைப் பண்ணிக்காதே வசந்தி. மனசை இலேசா வைச்சுக்கோ...''


சொன்ன நேரத்தில் சோழிங்க நல்லூரில் போய் இறங்கியபோது சுகன்யாவுக்கே சற்று படபடப்பாகத்தான் இருந்தது. பிரச்னைகள் அப்படியே கரைந்து ஆவியாகிப் போய் விடக் கூடாதா...? உதடுகள் பிரார்த்தனைகளை முணுமுணுத்தன.

''வாங்க... சேகர்...? நீங்க வசந்தி இல்லையா...? இப்படி வாங்க... சுகன்யா, நீங்க இங்க உட்கார்ந்திருங்க'' என்று ஹால் நாற்காலியைக் காட்டிவிட்டு அவர்கள் இருவரையும் மட்டும் ஒதுக்குப்புறமாய் இருந்த தனி அறைக்குள் அழைத்துப் போனார் டாக்டர் மகேஷ். அதன் அகன்ற கதவு மூடப்பட்டு ஏ.ஸி. இயந்திரம் ஆன் செய்யப்படும் ஓசை மட்டும் வெளியே கேட்டது.

தன்னையறியாது நெடிய பெருமூச்சு வெளிப்பட்டதை உணர்ந்து சிரித்துக் கொண்டாள் சுகன்யா... 'ஒரு கல்யாணம் எப்போது நிறைவடைகிறது...?' மண்டைக்குள் கேள்வி குடைய ஆரம்பித்தது. ஓர் ஆணும் பெண்ணும் வாழ்க்கையை இணைத்துக் கொள்ள முடிவெடுக்கும் கணத்திலா? மோதிரமோ மாலையோ தாலியோ அடையாளச் சின்னமாகும் அந்த அரை நிமிஷ நேரத்திலா...? இல்லை, இருட்டின் சௌகரியத்தில் நிகழும் வேட்கைத் தணிப்பிலா...? அல்லது வெளிச்சம் ஒரு பொருட்டல்ல என்றாகிப் போகும் அந்த ரங்க அரங்கேற்றங்களின்போதா...? உயிர்ப் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது உறுதியாகும் உன்னதமான நிலையிலா? இல்லையென்றால்... எந்தப் பொக்கிஷத்தையாவது இழந்து துடிக்கும் கால கட்டத்தின் துயரப் பகிர்தலிலா...?

பூரணத்துவம் என்பதை இவற்றுள் எந்த ஒரு கட்டத்திலும் அடையலாம்... அல்லது எதிலுமே அடையாமலும் போகலாம்... ஏன் ஒவ்வொரு கட்டத்திலும்கூட அனுபவிக்கலாம்...

ஸ்ரீராமுடனான தன் வாழ்க்கையை விலகி நின்று எடை போட்டால் எங்கெங்கு முழுமையைத் தொட்டுக் காட்ட முடியும்...? வேண்



டபாட' கூறு ஃபோட்டுக் கொச்சைப் படுத் தும் விஷயம் அன்று அது.... அப்படியே இருக் கட்டும். பறிக்காத பூவாக...

டாக்டர் மகேஷ் வீட்டு வரவேற்பறை யின் ஃபிரெஞ்சு ஜன்னல்கள் அகலத் திறந் திருந்தன. தோட்டத்தில் பறிக்காத பூக்கள் வெயிலில் சிரித்தன. புன்னகையுடன் எழுந்து புல் தரைக்குப் போனாள் சுகன்யா.

கருத்துடனும் ரசனையுடனும் பராமரிக்கப் பட்டிருந்தன, பூச்செடி பாத்திகள். சிவப்பு இறகுகளைச் செருகி வைத்தது போல் ரெட் சால்வியா மலர்கள் பூத்திருந்தன. அடுத்து அமைந்த பாத்தியில் பச்சைப் பசேலென்று கொத்துமல்லிக்கு அண்ணன்போல் அலங்கார குரோட்டன்ஸ்; அதையும் அடுத்து வெள்ளை பிடுனியா மலர்கள். வண்ணங்களின் வேறு பாடும் வடிவங்களின் மாறுதல்களும் நயம் படத் தெரியும்படி அமைக்கப்பட்டிருந்தது.

குனிந்து ஒரு விரலால் இலேசாகத் தொட் டுப் பார்த்தாள். ஒரு குரோட்டன்ஸ் செடியை...

''இலையை பறிச்சிடாதீங்கம்மா...''

இந்துமதி ?

தலையில் முண்டாசும் காதில் பீடியுமாக மேல் சட்டையின்றி நின்றார் தோட்டக்காரர்.

''நீங்கதான் தோட்டம் பார்த்துக்கறீங் களா....?''

''ஆமாங்கம்மா.. டெய்லி வருவேன்.. ஐநூறு ரூபாய் சம்பளம். அம்மா மதியச் சாப் பாடு போட்டுருவாங்க... சனிக்கிழமையில பிரி யாணி.. பொங்கல், தீபாவளிக்குப் புதுத்துணி...

''இந்தந்த இடத்துல இன்னின்ன செடி வைக்கணும்னு யார் சொல்லுவாங்க....? அம்மாவா, ஐயாவா...?

சுற்றும், முற்றும் பார்த்துவிட்டு திருட்டு முழியுடன் சொன்னார் தோட்டக்காரர். ''அதாங்கம்மா ரொம்ப டமாஷு''; டாக்டர் ஐயா இருக்காரே... அவரு வந்து. 'கோவிந்த சாமி, இங்க பிடுனியா போட்டுரு; அதும் பக்கத்துல ரெட் சால்வியா வையு'ன்னுவாரு... நம்ம அம்மா இருக்காங்க பாருங்க... பின் னாலயே வந்து மல்லுக்கு நிப்பாங்க.. இடை யவே இடையாது. இந்த சைடு பூரா ரெட்டு; அந்தப் பக்கம் மூச்சூடும் வெள்ளைப் பூ போடுன்னுவாங்க...''

''அப்புறம்...?''

''அப்புறமேலே இரண்டு பேத்துக்கும் பெரிசா சண்டை வந்துடும்...''

பொத்திக்கொண்டு வந்த சிரிப்பை

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

அடக்கியபடி சுகன்யா கேட்டாள். "சண்டையில் யாரு ஜெயிப்பாங்க...?"

"யாரு ஜெயிச்சா என்ன, தோத்துப்புட்டா என்ன... என் பாட்டுல இஸ்டத்துக்கு நான் பாத்தி போட்டு ஊனிடுவேன் விதையை... அவங்க ஒரு வாரம் போல சண்டை போட்டுக்கினிருப்பாங்களா... அதுக்குள்ள முளை விட்டிருக்கும்... அப்புறம் இரண்டு பேருமா 'பாத்து தண்ணி ஊத்தினியா? இங்க புல்லு முளைச்சுருக்கு பாரு... அங்க பூண்டு முளைச்சுருக்கு பாருன்னு என் முழிய நோண்ட ஆரம்பிச்சிருவாங்க....' இவங்களா சண்டை போட்டாங்க?'ன்னு நான் தாடியை சொரிஞ்சுக்கிட்டு நிப்பேன்..."

இம்முறை சுகன்யாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை...

"என்ன கோயிந்தசாமி! அம்மா கைல உன் சந்திரபாபு ஆக்டெல்லாம் குடுக்க ஆரம்பிச்சுட்டியா...?"

"இல்லிங்க ஐயா" காது பீடியை அவசரமாகக் சுழற்றினான் கோவிந்தசாமி.

"டாக்டர் மகேஷ்! ஒரு சைக்கியாட்ரிஸ்டும் அவர் மனைவியும் சண்டை போட்டா யார் மத்தியஸ்தம் பண்ணுவாங்க...?

சுகன்யாவின் கேள்வி டாக்டருக்குப் பிடித்திருந்தது. "உன்னை மாதிரி யாராவது பட்டம் வாங்காத சைக்கியாட்ரிஸ்ட்கிட்டே போக வேண்டியதுதான்!"

டாக்டரின் கன்ஸல்டிங் அறைக்குள் நுழைந்தபோது வசந்தியும், சேகரும் உரையாடலில் ஆழ்ந்து கிடந்தார்கள்.

"எல்லாம் சரியாயிடும். நோ ப்ராப்ளம்..." என்றார் டாக்டர் தம் இருக்கைக்கு வந்தபடி.

"சுகன்யா கேள்விக்குறியுடனும் அவரையும் அவர் பேஷண்ட்களையும் மாறி மாறிப் பார்க்க...

நீங்க வெளில இருங்க. சுகன்யாவை அஞ்சு நிமிஷத்துல அனுப்பிடறேன்..."

அவர்கள் வெளியேறி கதவு சாத்தப்பட்டதும் பேசினார். "நிஜமாவே பிரச்னை ரொம்ப சிம்பிள். நீ சொன்ன மாதிரி பொண்ணு பயந்து போயிருக்கு... வீட்ல பண்ணின கெடுபிடியும் உலகம் தெரியாம வளர்ந்ததும்தான் காரணம். இரண்டு பேர்கிட்டேயும் தனித்தனியா பேசியிருக்கேன். என்ன செய்யணும்னு சொல்லியிருக்கேன். அவங்களுக்கு நினைச்ச நேரத்துல தனியா இருக்கற மாதிரி சூழல் அமைஞ்சா கொஞ்சம் உதவியா இருக்கலாம். இப்போ இருக்கறது ஜாயிண்ட் ஃபாமிலி போலிருக்கே..? எங்காவது ஒரு மாசம் தேனிலவுக்கு அனுப்பி வையேன்..."

"ஒரு மாசமா!"

"சரி, இரண்டு வாரம்..."

"பார்க்கறேன். சேகர் படு பிஸியான ஆசாமி. கல்யாணத்தன்னிக்குகூட செல்லுலார்ல பேசிக்கிட்டிருந்த மாப்பிள்ளை..."

"எத்தனை நாள் முடியுமோ போகச் சொல்லுங்க..."

"தாங்க்யூ டாக்டர்..." எழுந்தாள் சுகன்யா.

"எங்க எழுந்துட்டீங்க...?"

"ஏன் டாக்டர்?"

"என் ஃபீஸ் இருநூறு ரூபாய்..."

ஹாண்ட்பேகில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது; ரேஸ் குதிரையின் அவசரத்துடன் புறப்படத் தயாராய் இருந்தான் சேகர்.

தோட்டத்தைக் கடந்து, கேட்டைவிட்டு வெளியேறி, காரில் ஏறப்போன சமயம் 'டாக்டர் மகேஷ் - சைக்கியாட்ரிஸ்ட்' என்று பித்தளையில் பளபளத்த போர்டு தூணில் தொங்கி கண்ணைப் பறித்தது.

சேகர் பாக்கெட் பிரித்து சாவியை எடுத்து காரைத் திறக்கும் நேரம்,

"ஏன்டா பழி! நீ இங்க என்ன பண்றே..." நேர் எதிர்வீட்டு கேட்டிலிருந்து வெளிப்பட்டான் ஒரு இளைஞன்.

அவனுக்கு முதுகைக் காட்டி நின்ற சேகரின் முகம் சுருங்கிக் கருத்தது, ஒருகணம், ஒரேயொரு கணம்.

அடுத்தவினாடி அவன் காருக்குள் ஏறியிருந்தான். சிடக் சிடக்கென்று கதவுகளைத் திறந்து சுகன்யாவையும் வசந்தியையும் "ஏறுங்க" என்று உறுமினான். கூடவே காரும் உறுமலுடன் புறப்பட்டது.

"டேய் சேகர்! என்னடா கூப்பிட கூப்பிட காதுல வாங்கிக்காம போயிட்டேயிருக்கே..?"

எதிர்வீட்டு இளைஞன் போட்ட கூச்சலில் பாதிதான் அவர்களுடைய செவிகளை எட்டியது.

அவன் ஓட்டிய வேகத்தில் திரும்பவும் ஏதாவதொரு சிக்னலில் போய்த்தான் நிற்க

வேண்டியிருக்குமோ என்று கலங்கிப் போனான் சுகன்யா.

வசந்தி பயந்து கதவின் கைப்பிடியை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"சேகர் அமைதியாயிரு...ப்ளீஸ்"

"சொல்லமாட்டீங்க...? அமைதியாம் மண்ணாங்கட்டி....! எது நடக்கக்கூடாதுன்னு நினைச்சனோ அதுதான் கரெக்டா நடந்திருக்கு..." ரியர்வியூ மிர்ரர் வழியே பல்லைக் கடித்தான்.

''ஒண்ணுமே நடக்கலை. ரொம்ப சாதாரணமா டாக்டர் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வந்தோம்னு சொல்லி சமாளிச்சிருக்கலாம். அவசர ஆத்திரத்திலே காரியத்தைக் கெடுத்துட்டியே... இனிமே அந்த ஆளுக்கு விளக்கம் தர்றதுதான் கஷ்டம்... ஏன் கண்டுக்காம ஓடினேன்னு அவனுக்குச் சந்தேகம் வருமா இல்லையா...?"

"எல்லோரும் சேர்ந்து என்னைப் பைத்தியமா அடிச்சிடுறீங்க..."கத்திவிட்டு காரை ஓரம் கட்டி மூச்சு வாங்கினான்.

"சேகர், இது ரொம்ப அதிகம்! இப்படி வார்த்தைகளை அள்ளி விடக்கூடாது."

"ஐ-ம் சாரி... ரொம்ப சாரி...?" இரண்டு நிமிடங்களுக்கு ஸ்டீயரிங் வீல் மீது தலை கவிழ்ந்து கிடந்தான்.

பிறகு, "ஓ.கே. போகலாம்..." என்று மீண்டும் வண்டியைக் கிளப்பி அமைதியாய் ஓட்டிப் போய் சவேராவில் நுழைந்தான்.

ஏ.ஸி. குளுமையில் இளைப்பாறி, தக்காளி சூப்பையும், வெஜிட்டபிள் புலாவையும் ருசி பார்த்தபோது மூவருமே நிலைக்குத் திரும்பியிருந்தனர். ஐஸ்கிரீம் வந்தபோது வசந்தியின் வெனிலாவில் ஒரு ஸ்பூனை அவன் எடுத்துக் கொள்ள, அவள் அவனுடைய சாக்லேட்டில் கொஞ்சம் நக்கிப் பார்க்க... கண்டும் காணாததுபோல் இருந்த சுகன்யாவுக்கு அப்பாடி என்றிருந்தது.

''ஹனிமூன் போயிட்டு வாங்களேன். இரண்டு பேரும்...''


''எல்லா மூணையும் இங்கேயே கொண்டாடிடுவோம்... இல்லை...?'' வசந்தியைப் பார்த்துக் கேட்க அவள் வெட்கத்துக்கும் பெருமைக்குமிடையே தகித்துச் சிவந்தாள்.

"சீரியஸா சொல்றேன் சேகர்... நான் வேணா ஏற்பாடு பண்ணட்டுமா...?"

''இல்ல சுகன்யா... அவசரப்படாதீங்க. முதல்ல இன்னிக்கி ஆபீஸ் போறேன். அங்க நிலவரம் எப்படின்னு பார்த்து, எத்தனை நாள் வெட்டிக்க முடியும்னு கணக்குப் போடறேன். அப்புறமா எந்த இடம், எப்போ கிளம்பறதுன்னு முடிவு பண்ணறோம்..."

சொன்னபோது, உடுத்திய துணியோடு 'தேன்நிலவு' புறப்பட வேண்டியிருக்கும் என்று அவன் நிச்சயமாய் எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)



• வாழ்வில் வெகு முக்கியமாய் கற்றுக் கொள்ள வேண்டியது எப்படி வாழ்வது என்பதே.

— ஆவ்பரி

• திறமை வாய்ந்தவனுக்குப் பின் பல திறமையானவர்கள் இருக்கிறார்கள். - சீனப் பழமொழி.

— பா.குணா

• ஒவ்வொரு மனிதனுக்கும் தன் அபிப்ராயத்தைக் கூற உரிமை இருக்கிறது. ஆனால் எம்மனிதனும் தன் அபிப்ராயம் பிறரை ஆட்சி புரிய வேண்டும் என்று எதிர்பார்க்க உரிமை கிடையாது.


— தாமஸ் பெயின்/ அவ்வை கே. சஞ்சீவிபாரதி

• கடவுள் இந்த பூமியை எப்படி ஆள்கிறார் என்று விளங்கிக் கொள்வதற்காகவே நான் பத்திரிகைகளைப் படிக்கிறேன்.

—ஜான் நியூட்டன்/ போத்தனூர் ஏ.செந்தில்

பாத்திமா அக்காள் புறப்படுகிற நேரம் வந்து விட்டது. மாப்பிள்ளையை அவளோடு நிறுத்தி பாலும் பழமும் கொடுத்துக் கொண் டிருந்தார்கள். "மடிப்பணம் போடறவங்க போடலாம்...." என யாரோ சொல்ல, காதர் மாமு சம்சாரம் அக்காவின் முந்தானையை விரித்துப் பிடித்துக் கொண்டாள். பெண்ணின் உறவுக்காரர்கள் ஐந்தும் பத்தும் போட ஆரம் பித்தார்கள். சடங்குகள் அனேகமாக முடிந்து விட்டன. குடும்பத்தின் பெரிய தலைக்கட்டு, "ம்... ம்... புறப்படலாம்" என்று குரல் கொடுத் ததும் கண்களில் நீர்மல்க பிறந்த வீட்டையும் மனிதர்களையும் வெறிக்கப் பார்த்துவிட்டு அவள் கிளம்ப வேண்டியதுதான்.

ஜமால் துக்கத்தில் இறுகி இருந்தான். தவிர்க்க நினைத்தாலும் மாப் பிள்ளையின்



முகத்தையே கண்கள் அடிக்கடி வெறித்தன. அக்காளின் அருகில் அவன் மேலும் கருப்பாகத் தெரிந்தான். அகலமுகம். அம்மைத் தழும்பு, தடித்த உதடுகள், சிரிக்கும்போது மேல் வரிசைப் பற்களின் விகாரம், அழுந்த வாரியும் படியாத கேசம். சுருக்கம் விழுந்த வேஷ்டிக் கட்டு....

தலைக்குத் தொப்பியும், இரு பக்கமும் அதி லிருந்து தொங்கிய மலர் 'சேரா'வும், கழுத்தில் மாலையும் இல்லாவிட்டால் மாப்பிள்ளை என்று சொல்ல முடியாது போலிருந்தது.

பெரியப்பாவின் மீது கோபமாக வந்தது. அக்காளுக்கு இப்படி ஒரு ஆளைக் கட்டி வைக்க எப்படித்தான் மனம் வந்தது?

"என்னடா வேடிக்கை பார்த்துக்கிட்டு.... போயி சாமான்லாம் எடுத்து வைய்யி..." சின்ன மாமு கத்தினார். தாங்கிக் கொண்டிருந்த பழத் தட்டை அவனிடத்தில் நீட்டினார். பின்னா லேயே பணியாரக் குடம், புது ஜமுக்காளம், வண்ணப்பாய், உருட்டுத் தலையணை, கல்யாண விசிறி என 'சரவழி'ச் சீர் வந்து கொண்டிருந்தது.

அவர்களது தெருவிற்குள் பெரிய வாகனங் கள் நுழைய முடியாது. அகலம் போதாது. மாமு முன்னே செல்ல, அவனும் மற்றவர் களும் வரிசையாக நடந்தார்கள். யாரும் பேசிக் கொள்ளவில்லை. தெரு முனையில் கார் நின்றி ருந்தது. மாமு ஒவ்வொரு சாமானாக வாங்கி உள்ளே பத்திரமாக அடுக்கினார்.

"இங்கியே இருக்கணும். பொண்ணை வழி அனுப்பிட்டுத்தான் போகணும்... என்ன..." இன்னாரிடத்தில் என்றில்லாமல் பொதுவாகச் சொன்னார்.

மாமு காரைத் தொட்டுப் பார்த்தார். அவ ரது கல்யாணத்திலும் கார் வைத்துத்தான் கூட் டிப் போனார்கள். அதன் பிறகு அப்படி யொரு சவாரி இன்னும் வாய்க்க வில்லை.

இடம்பிடிக்கிற அவ சரத்துடன் இரண்டு பெண்கள் ஓடி வந்தார் கள். "ஏம்மா... பொறப் பட்டாகளா?" என்றார் மாமு. சட்டென்று தங்களது முகத்தை மறைத்துக் கொள்ள அவசரப்பட்டார்கள் அவர்கள் இருவரும். பெண் வீட்டுக்காரர் களுக்கு, அன்னிய பெண்களிடத்தில் பேசக் கூடாது என்ற இங்கிதம் தெரிய வில்லை என கருதியிருக்கக்கூடும்.

மாமுவுக்கும் இது தப்பு என்று தோன்றி யதோ. என்னவோ, அவரும் வேறு திசையில் பார்க்க ஆரம்பித்தார்.

"த்தா... வந்தாச்சு..." சாகுல் மாமுவின் மகன் சத்தமாகச் சொன்னான்.

கும்பலாக வந்து கொண்டிருந்தார்கள். பாத் திமா அக்காளின் உடம்பு சுத்தமாக புர்க்காத் துணியால் மூடப்பட்டிருந்தது. சேலைகளின் மொடமொடப்பும், மல்லிகைப் பூ மணமும் காற்றில் மிதந்து வந்தன.

"வர்றேன்... ஜமால்..." என விடைபெறும் போது, தன்னால் பதில் சொல்ல முடியாது போலிருந்தது. "டேய்... டேய்..." என்று மாமு கூப்பிடுவதைத் திரும்பிப் பார்க்காமல், விலகி நடக்க ஆரம்பித்தான்.

வீடு அமைதியாக இருந்தது. சற்று முன்பு வரை சிரிப்பையும், கலகலப்பையும், மனிதப் புழக்கத்தையும் கண்டு பூரித்த வெள்ளைச் சுவர்கள், வெறுமையுடன் நெடுநெடுவென்று நிற்பதை போலிருந்தது. பெரியம்மா வெறும் தரையில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். அம்மாவும் பேச ஏதுமற்றவள் போல நிலைப் படியில் கால் நீட்டிச் சாய்ந்திருக்க, சின்ன


மாமு சம்சாரமும், அவளது தங்கையும் வீட்டை ஒழுங்கு பண்ணிக் கொண்டிருந்தார்கள். பூ மாலையுடன் அக்காளை அமர வைத்திருந்த மேற்கு மூலையில் இன்னும் வாசனை இருந்தது. மாமு வாடகைச் சாமான்களைத் திருப்பி அனுப்ப கைவண்டிக்காரனைக் கூப்பிடப் போயிருந்தார்.

ஜமால் வாசலுக்கு வந்தான். பந்தல் இடுக்கு வழியாக இறங்கு வெய்யில் திட்டுத் திட்டாக இறைந்து கிடந்தது. காதர்சா தன்னத்தா, வாழைக் குலையை நோட்டமிட்டுத் திரிந்த சிறுவர்களை "போங்கடாலே... காலிப்பய புள்ளைகளா..." என விரட்டிக் கொண்டிருந் தார்.

இனி இந்த வீடு அக்காள் இல்லாத வீடு என்ற உணர்வே குபீர் குபீரென்று நெஞ்சில் அறைந்தது.

அக்காள் அழுத்தக்காரி. இந்தக் கல்யாணத் தில் தனக்கு இஷ்டம்தானா என்பதை கடைசி வரைக்கும் அவனிடத்தில் சொல்லவே இல்லை. சொல்லாத விஷயங்கள் எத்தனையோ சொன்னதற்குச் சமம். ஏன் அப்படி இருக்க வேண்டும்? தான் என்ன அன்னியமா? அசலா?

சொந்த சின்னத்தா மகன். தம்பி. சேர்ந்து விளையாடியவன். சண்டை போட்டவன். தாதிம்மாவின் மடியில் ஒன்றாகப் படுத்து, கதை கேட்டு, தனிமைக்குப் பயந்து கைகோத்து



மும்தாஜ்யாசீன்

நடந்து, இருவரும் ஒன்றாகவே ஸ்கூலுக்குப் போய், திரும்பியதும் சேர்ந்து படித்து....

படிப்பில் புலி. சம்முகம் சாரின் கேள்விகளுக்கு, 'டக்டக்'கென்று பதில் சொல்கிறவள் அவள்தான். சாருக்குப் பெருமை. "பொட்டப் புள்ள என்ன போடு போடுது..."

எட்டாம் வகுப்பு வரைக்கும்தான் படித்தாள். அரைப் பரீட்சை லீவில் தாவணி போட, படிப்பு நின்று விட்டது. சம்முகம் சார் வீட்டிற்கே வந்து கெஞ்சினார். "புள்ளைக்கு இருக்கிற அறிவுக்கு எங்கியோ போகணும். நிறுத்தாதீங்க..."

பெரியப்பா பெருமூச்சு விட்டார். உலக நடப்புக்கும், குடும்பப் பழக்க வழக்கத்திற்கும் உள்ள இடைவெளியை பொறுமையாக எடுத்துச் சொன்னார். வெகுநேரம் பேசினார்கள். கடைசியில், வந்ததற்கு ஒரு தம்ளர் காப்பித் தண்ணியையும், "பொட்டப்புள்ளைக்கு ரெண்டு எழுத்து எழுதப் படிக்கத் தெரிஞ்சாப் போதும்ங்க சார்..." என்ற பதிலையும்தான் சாரால் பெற முடிந்தது.

உலகம் வீட்டு எல்லைக்குள் சுருங்கிப் போனால் என்ன? தனக்கு எங்கிருந்தாலும் ஒன்றுதான் என்கிற மாதிரிதான் அக்காள் இருந்தாள்.

ஸ்கூல் முடிந்து வருகிற ஜமாலிடம், "இன்னைக்கு என்ன பாடம்?" என்று விசாரிப்பாள். பக்கங்களில் பார்வையை ஓட விட்டு புத்தகத்தை மூடி, "இதான் பதில்... சரியா?" என்று கேட்பாள். தனது சின்ன உலகத்திலும் அவனிடத்தில் சொல்ல எத்தனையோ இருக்கும்.

–வந்து பாருடா... ரோஜாப்பூ மொட்டு விட்டிருக்கு.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

"தொப்பையைக் குறைக்க வழி இருக்கா டாக்டர்?"

"நீங்க வேணா 'தொப்'னு சுருக்கிச் சொல்லுங்க!"

– அம்பை தேவா



– அப்பப்பா.... எவ்ளோ நட்சத்திரம். எண்ணுவியா நீ?

– நிலாவைப் பார்த்துக்கிட்டே நடக்கணும். நம்ம கூடவே அதும் வருமாக்கும்.

– இது நானே சமைச்சது... தின்னு பாரு...

அவளுக்குத் தெரியாத விஷயங்களே கிடையாது என்று ஜமாலுக்குத் தோன்றும். அம்மாவுக்கு இன்னது பிடிக்கும். அத்தா இப்படித்தான் யோசிப்பார். சித்தப்பாவின் குணம் இது. மாமுவிடம் எதைச் சொன்னால் கேட்பார். அவளிடத்தில் பேச உட்கார்ந்தால் நேரம் போவதே தெரியாது.

ஒருநாள் சொன்னாள்.

"கல்யாணம் பண்ணிருவாக போல. யார் யாரோ வர்றாங்க. பயமா இருக்குடா..."

ஜமால் சற்று திடுக்கிட்டாலும் "கல்யாணம் நல்லதுதானே... பாத்திமாக்கா..." என்றான்.

"போடா..."

"எப்படியும் பண்ணித்தானே ஆகணும்?"

"ப்ச்ஸ..."

"ஏன்?"

"ஆளு கருப்பாம். படிப்பும் அதிகம் இல்லை. காப்பிக் கடை...."

"படிச்சவன் வந்தாத்தான் கட்டிப்பியா?"

"பின்ன... கல்விதான் மனுஷனுக்கு அழகு."

"ஆமாக்கா... படிச்ச மாப்ளைதான் உனக்கும் பொருத்தமா இருக்கும்."

அவளைப் பிரகாசமாகப் பார்த்தான். அபூர்வமாக அவளிடமிருந்து வெளிப்படும் ஒளி அதிலிருந்தது.

இன்னொரு நாள், சாயங்காலம்.

ப்ளஸ் டூ அரைப் பரீட்சையில் அதிசயமாக எழுபது மார்க் வாங்கியிருந்ததை சொல்லவென்று ஓடி வந்தான். முன் வாசலில் மீன் உரசிக் கொண்டிருந்த பெரியம்மா, "புழக்கடையில் இருக்கா... போ...." என்றாள்.

ஆனால் அக்காள் அங்கு இல்லை. உள் அறை ஜன்னலில் நின்றிருந்தாள். அங்கிருந்து கலையா குப்பிம்மா (அத்தை) வீடு தெரியும். அத்தாவுக்கு ஒன்று விட்ட மூத்த சகோதரி வீடு. எப்போதோ நிகழ்ந்த சொத்துச் சண்டையில் பேச்சு வார்த்தை கிடையாது.

"அங்க என்னக்கா பண்றே?"

"ஒண்ணுமில்லை..." முகத்தில் திடுக்கிட்ட தன் சாயல். அவனைக் கண்டதும் இறங்கி வந்தாள். பரீட்சைத் தாளை வாங்கி புரட்டி விட்டுக் கொடுத்தாள். "எழுவது மார்க்கு... பரவாயில்லையா?"

"ம்..." பாராட்டை எதிர்பார்த்த ஜமாலுக்கு ஏமாற்றமாக இருந்தது.

கலையா குப்பிம்மா வீட்டிலிருந்து ஆண் குரல் கேட்டது.

"யார்க்கா அது?"

"அவுங்க மகன் வந்திருக்காரு..."

"பஷீர் மச்சானா?"

"ம்...."

பஷீர் மச்சான் படித்து விட்டு எங்கோ தொலைவில் வேலையில் இருந்தார். அம்மாவைப் போலவே சிவந்த நிறம். சுருள் முடி. படித்த பிள்ளை என்ற பெருமை. ஆறு மாதம், ஒரு வருஷத்திற்கு ஒரு தடவைதான் ஊருக்கு வருவார். பெண் கொடுக்க "நான் நீ.." என்று எத்தனையோ பேர் துப்பு கொண்டு வந்தார்கள்.

என்ன நினைத்தாளோ. "பகையே கூடாது. குடும்பம் ராசியா இருந்தா இப்ப எவ்ளோ நல்லா இருக்கும்?" என்றாள் பாத்திமாக்கா.

ஜமால் சும்மா தலையாட்டினான். எதுவும் சொல்லாமல் அவள் எத்தனையோ புரிய வைத்த மாதிரி இருந்தது. ஏக்கம், துக்கம், ஆசை எல்லாவற்றையும் உள் வாங்கி, பெருமூச்சால் தன்னைக் கரைத்துக் கொண்ட ஒருத்தியின் குரல்தான் அவை.

ஜமால் பதில் பேசாமல் புறப்பட்டான். ஏதாவது அற்புதம் நிகழ்ந்து குடும்பப் பகை மறையக்கூடாதா என மனத்தில் ஒரு மூலையில் ஆசை இருந்தது. இரண்டாம் மாதமே பஷீர் மச்சானுக்கு நிக்காஹ் நடந்து முடிந்து விட்டது.

அதன் பிறகு தனது கல்யாணத்தைப் பற்றி அவள் 'எதுவும் பேசியது இல்லை. அவனாகவே ஆரம்பித்தாலும், "வேற பேசுடா..." என்று சொல்லி விடுவாள். அவளது சிரிப்பு, துள்ளல், அபூர்வமாக முகத்தில் ஒளிரும் பிரகாசம் எல்லாம் எங்கோ போய் விட்டன.

இதனிடையே அவளையும் எத்தனையோ பேர் வந்து பார்ப்பதும், போவதுமாக இருந்தார்கள். எல்லாம் ஒரேயடியாக ஏறிய கையாகவோ அல்லது பொருந்தாத இடமாகவோ இருந்தது. ஹாஜியார் – ஏதோ ஒரு விசேஷத்திற்கு வந்தவர் – எல்லோரையும் கூப்பிட்டு சத்தம் போட்டார். "என்னப்பா... பொட்டப்புள்ளையை வீட்ல வச்சுக்கிட்டு வெளையாடறீகளா.... வர்றவனையெல்லாம் வேணாம்னா என்ன அர்த்தம்.... முத்தலிபு மவன் காப்பிக்கடைன்னு தட்டாரிச்சு அனுப்பினீகளாம்.... அவனுக்கு என்ன வருமானம்னு தெரியுமாடா உங்களுக்கு. நான் சொல்றேன். பாத்திமா அந்தப் பையனுக்குத்தான். பின்னப் பெறகு ஏதாச்சும் பிரச்னைன்னா நான் பொறுப்பு. தைரியமா செய்யுங்க..."

குடும்பத்துக்கு ரொம்பவும் வேண்டப்பட்டவர். அவரது வார்த்தைக்கு மறுவார்த்தை பேசி யாருக்கும் பழக்கமில்லை. பாத்திமாக்காவின் எதிர்காலம் சில நொடிகளுக்குள் முடிவாகி விட்டது.

நிச்சயதார்த்தம் முடிந்து மறுநாள் தனியாகப் பார்த்தபோது, "அக்கா... உனக்கு இஷ்டம்தானே..." என்று கேட்டான் ஜமால்.



''உங்க ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்யறேன்...''

''ஏங்க...?''

''இத்தனை ஊழலையும் நான் செய்யல, பணத்தாசை பிடித்த என் மனசாட்சிதான் செஞ்சதுன்னு மனுவுல குறிப்பிட்டிருக்கிறதை ஏற்க முடியாது...!''

– ஜி. செல்வத்துரை

"ஏன் இப்படிக் கேக்கிறவன்?"

"இல்லே... மாப்பிள்ளை படிக்கலை. கருப்புன்னு நீதானே அன்னிக்கு..."

"அப்பத்தி நிலைமை வேற..." என்ற பாத்திமா அக்காள், அவன் எதிரிலிருப்பதை மறந்தவள் போல, "பாய் ஏவாரி மகளுக்கு சாயாக் கடை மாப்பிள்ளைதான் கெடைக்கும். அதிகமாக எதிர்பார்க்கக் கூடாது" என முணு முணுத்தாள்.

அவளது சம்மதத்தைப் பற்றி அவனுள் பதிவாகி இருந்த தகவல் இவ்வளவுதான். இஷ்டம் இல்லை என்றுதானே இதற்கு அர்த்தம்?

அக்காவை போய்ப் பார்த்துவிட்டு வந்தால் தேவலாம் போல இருந்தது ஜமாலுக்கு.

புகுந்த வீட்டு மனிதர்களைப் பற்றி இந்நேரம் தெரிந்து கொண்டிருப்பாள். அந்தரங்கமாகப் பேச எவ்வளவோ இருக்கும். மன பாரத்தை இப்படிக் குறைத்தால்தான் ஆயிற்று.

ஹாஜியாராம். இப்படிப்பட்ட பெண்ணிற்கு, தான் சொல்லும் பையன் பொறுத்தமானவன்தானா என்று யோசிக்க வேண்டாம்? "சாதா தோசை ஒண்ணேய்..." என்று குரல் கொடுக்கிறவனுக்கு, ரோஜாச் செடி மொட்டு விடுவதைப் பற்றி என்ன அக்கறை? "போமெ... போ" என சிரிக்கக்கூடும். "மசால்வடைக்கு நேரமாச்சு. சீக்கிரம் ஆட்டித் தொலை" என கல்லுரலைக் காட்டுவானோ என்னவோ.

அம்மா சொல்லச் சொல்ல அத்தா ஏதோ லிஸ்ட் எழுதிக் கொண்டிருந்தார்.

ஜமால் அருகில் வந்து நின்றதும், முகம் நிமிர்த்திப் பார்த்தார்.

"அக்காவைப் பார்த்துட்டு வரலாம்னு நினைக்கிறேன்..." என்றான் ஜமால்.

"எந்த அக்காவை?" அம்மா இளக்காரமாகச் சிரித்தாள். "பாருங்க கூத்தை... பொறந்தவள் சீர் கொண்டு போகப் போறானாம் உங்க பிள்ளை..." இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது என்று ஜமாலுக்குப் புரியவில்லை.

"ரெண்டும் ரெட்டைப் பிறவி மாதிரி வளர்ந்ததுங்க... அப்படித்தான் இருக்கும்" என்றார் அத்தா.

"பிடிக்கலைன்னா நான் போகலை..." என்றான் ஜமால்.

"அதுக்கில்லை.... கொண்டான் குடுத்தான் வீட்டுக்கு சீர் குடுக்கிறதுக்கு முன்னாடி போயி கைநனைக்கக் கூடாதுப்பா..."

"எப்ப சீர் தர்றதாம்?"

"நாளை மறுநாள்..."

"ரெண்டே நாள்தான் இருக்கு..."

"ம்... பாரு. அதுக்குப் பலகாரம் பண்ணத்தான் லிஸ்ட் எழுதிக்கிட்டு இருக்கேன்..."

"மறு வீடுதானே இது?"

"ம்..."

"அப்ப அக்காவும் வரும் இல்லே?"

"ம்...ம்..."

"எத்தனை நாளைக்கு இருக்குமாம்?"

"அது அவ புருஷன்ல சொல்லணும்..."

புருஷன்... ஹே!

ஜமால் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

"ஹேய்... பொண்ணு மாப்பிள்ளை வந்தாச்சு..." புழுதியைக் கிளப்பிக் கொண்டு, வாசலில் வந்து நின்ற ஆட்டோவின் பின்னாலேயே குழந்தைகள் பட்டாளம்.

பாத்திமா அக்காள், புருஷனுடன் இறங்கினாள். கைப்பெட்டியை வாங்கிக் கொள்ள ஜமால் முன்னேற, "இதான் என் தம்பி..." என்றாள்.

"தெரியும். உன்னை அழைச்சுட்டு இளம் பற்ப்ப என்னை முறைச்ச ஆளாச்சே" மாப்பிள்ளை பல் கறை தெரிய அகலமாகச் சிரித்தான்.

"ஏன்... ஜமால் அப்படியா?" பாத்திமாவும் சிரித்தாள். உள் மனதிலிருந்து பூரணமாக வெளிப்பட்ட சிரிப்பு, சொந்த மனதை மிதித்த சந்தோஷம் முகத்தில் பனிச்சிட்டது.

அக்கம்பக்கம் கூடி விட்டது.

"வாடி... வாங்க மாப்ளே..."

அக்காளைச் சுற்றிலும் கேலியும், சிரிப்பும்...

சூழ்நிலை ரம்யமாக மாறி விட்டது. சீனியம்மாளைக் கண்டதும் "போச்சு... நான் அம்புட்டுத்தான்..." அக்காள் கைகளை உதறினாள். வயசுப் பொண்டுகளை கேலி – கிண்டலில் உண்டு இல்லை என்று பண்ணி விடுகிறவள் அவள்.

ஒவ்வொரு தடவை அவள் சிரிக்கும் போதும் காது ஜிமிக்கியும், குஞ்சலம் வைத்துக் கட்டிய பின்னலும் அசைந்தாடின. விசேஷ நாளில் நல்ல புடைவையும், நகையும் நட்டு

மாகப் பார்த்தது உண்டு. ஆனால் முன் எப்போதுமில்லாத சோபிதமாக இப்போது தெரிந்தாள்.

ஜமால் வெளி ஜன்னலிலிருந்து உள்ளே எட்டிப் பார்த்தான். அக்காளைச் சுற்றிய கூட்டம் இன்னும் போகவில்லை. மாப்பிள்ளை மட்டும் தனியாக முன் ஹாலில் சப்பணமிட்டு அமர்ந்து, முகட்டுக்கூரை, மாத காலண்டர், மக்கா மதீனா படம், கொடியில் தொங்கிய பெரியத்தாவின் பனியன் - துண்டு, சுவர் வெடிப்பு என் பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீரென பாத்திமா அக்காள் ஜன்னலை நோக்கி வந்தாள். "இங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?"

"உன்னைத்தான் பார்த்துக்கிட்டிருக்கேன்..." என்றான் ஜமால். ஏதோ வேடிக்கையாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு.

"நான் என்ன அதிசயப் பொருளா... போடா... போய் மச்சான்கிட்ட பேசிக்கிட்டு இரு.. தனியா உக்காந்திருக்கார் பாவம்..." குரலில் தொனித்த கோபம் அவனைச் சுள்ளென்று குத்தியது.

"மச்சானா... நல்லா இருக்கு..."

"பாருங்க அக்கிரமத்தை. நாளைக்குப் போறேன்னு நிக்கிறாளாம் பாத்திமா..." அம்மா புலம்பிக் கொண்டே வந்தாள்.

"வந்து ரெண்டு நாள் ஆகலை அதுக்குள்ளியா?" அத்தாவும் ஆச்சரியப்பட்டார்.

"அதான் நானும் கேட்டேன். அவரு சோறு தண்ணிக்குக் கஷ்டப்படுவாரு சின்னம்மாங்கிறா... என்னத்தச் சொல்ல?"

ஜமால் அமர்ந்த இடத்திலிருந்து அம்மாவின் முகத்தைப் பார்க்க முடியாது. குத்தலாகவோ, நமுட்டுச் சிரிப்புடனோதான் அவள் இதைச் சொல்லி இருக்க வேண்டும்.

"பொட்டப் புள்ளைக சொந்தம் நிக்காஹ் வரைக்கும்தான்..." அத்தா அவளை ஆமோதித்தார்.


"அதென்ன மாயமோ... கழுத்துல கருகுமணி ஏறுகிற வரைக்கும் மன ஊசலாட்டம்... ஏறின பிறகு அவன்தான் எல்லாம்னு ஆயிருது. பொம்பளைப் பொறப்பே ஒரு விசித்திரம்..."

"ஆம்பளைக மட்டும் என்னவாம்?" என்றார் அத்தா.

"ஆமா... நீங்களும்..." அம்மா என்னவோ சொல்ல வாய் எடுத்தவள் ஜமாலைப் பார்த்து விட்டாள். "என்னடா... இருட்ல கெடக்கிறவன்? அவ... அங்க உன்னைக் காணம்னு தேடிக்கிட்டிருக்கா... போ..."

"எனக்கு வேற வேலை இருக்கு..." யார் முகத்தையும் பார்க்காமல் ஜமால் வெளியே புறப்பட்டான்.

நீங்கள் கேட்டவை — தராசு



• வழிவிட்ட மரங்கள்!

● சூர்யநிலா, சேலம்.

? சோதனையிலிருந்து சொக்கத் 'தங்கமாக 'ஜெ' மீண்டு வருவார் என்கிறாரே காளி முத்து?

! அப்போதும் தங்கமா! அடக் கடவுளே!

● ஆ. அழகேஷ், பூதப்பாண்டி.

? தற்போது எல்லா கவிஞர்களும் 'கவியரசு' என பட்டப் பெயர் போட்டுக் கொள்வது குறித்து...?

! லேட்டஸ்டாக 'கவிச்சக்கரவர்த்தி' ஒருவர் கிளம்பியிருக்கிறார் தெரியுமா...? தம் கவிதை களை மெட்டமைத்துப் பாடி கச்சேரி செய்து சந்தோஷமும் அடைகிறார்!

● எஸ். மீ. ராஜா, கோபாலசமுத்திரம்.

? நான் சட்டத்தை நன்கு கரைத்துக் குடித் தவன். அதைப் பயன்படுத்தி ஜெயலலிதா வின் மீதான வழக்குகளை உடைத்துத் தூள் தூளாக்குவேன் என்று பி.எச். பாண்டியன் கூறியிருக்கிறாரே...?

! ஜெயிப்பதற்கு சட்டம் மாத்திரம் போதாது. நியாயமும் நம் பக்கம் இருக்க வேண்டும்!.

● எஸ்.ஏ.என். செந்தில்குமார், சூலூர்.

? தேவேகௌடா சென்ற வாரம் ஹரி யானா போன போது, பாதுகாப்பு ஏற் பாடுகளுக்கென முந்நூறு மரங்கள் வெட் டப்பட்டுள்ளனவே!

! அருகாமையில் இருந்த கல்லூரி விளை யாட்டுத் திடலில் ஹெலிகாப்டர் இறங்கியிருக் கலாம்; மரங்கள் தேவையின்றி வெட்டப் பட்டன என்பதுதான் உச்சகட்ட சோகம். வி.வி.ஐ.பி. பாதுகாப்பு என்று வரும்போது சில அதிகாரிகளுக்கு புத்தி தடுமாறி விடுகிறது.

● மல்லிகை மன்னன், மதுரை — 14.

? ஊழல் செய்த புரட்சித் தலைவிக்கு போலீஸ் வேனில் அழைப்பு; ஆனால் கண்ணப்பனுக்கு மட்டும் சொகுசு கார்! கருணாநிதி ஆட்சியில் தர்மம் எப்படியெல் லாம் தடுமாறுகிறது!

! ஒரு தடுமாற்றமும் இல்லை. 'காரில் ஏற மாட்டேன்; போலீஸ் வேன் கொண்டு வாங்க' என்று கூறியவர் ஜெயலலிதாதான். பிறகு அதில் ஏறுவது கஷ்டமாயிருக்கிறது என்று ஸ்டூல் கொண்டு வரச் சொன்னார். தேவையான உயரத்தில் ஸ்டூல் கிடைக்காது போகவே, 'காரிலேயே போகிறேன்' என்று மனத்தை மாற்றிக் கொண்டார். கண்ணப்பன் விஷயம் வேறு. வீட்டில் நீதிபதி காத்திருக்கிறார் என்ப தால் அவசரத்துக்கு காரில் அழைத்துப் போகப்பட்டார். பிறகு சிறைக்கு போலீஸ் வேனில்தான் பயணம். செய்தி களைச் சரியாகப் படிக்கா விட்டால் நாம்தான் நமது மதிப்பீடுகளில் தடுமாறிப் போவோம்.

● மு. கருணாநிதி, தேவராயனேரி.

? பணத்தின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறதே... இதனால், பாதிக் கப்படுவது ஏற்கெனவே வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கீழ்த்தட்டு மக்கள்தானே?

! நடுத்தர வர்க்கத்தையும் சேர்த்துக் கொள் ளுங்கள். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிப்பவர்கள்... இந்த லட்சணத் தில் விலைவாசி உயர்வு அப்படியொன்றும் அதிகமில்லை என்று மத்திய அரசு அபத்த அறிக்கை விடுகிறது! எங்கே போய் முட்டிக் கொள்ள...!

● சு. கார்த்திகேயன், திருப்பூர்.

? ஒருவேளை ஜெ சொல்கிற மாதிரி, அவர் கவனத்துக்கு வராமலேதான் இத்தனை ஊழல்களும் நடந்திருக்குமோ...?

! ஊழல் என்று அதிகாரிகள் எடுத்துக் காட்டிய பிறகும் கையெழுத்துப் போட்டிருக் கிறாரே சார்...! (நிலக்கரி இறக்குமதி வழக்கு)

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? ராகுல் காந்தி கொலம்பியா நாட்டு அழகியைக் காதலிக்கிறாராமே...?

! காதலிக்கட்டுமே! என்ன தப்பு! அரசியல் பாரம்பரியம் மட்டுமல்ல... காதல் பாரம்பரியமும் நேரு குடும்பத்துக்கு உண்டு!

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.

? 'என்னைக் கைது செய்துள்ளார்கள் என்பதற்காகப் போராட்டம் நடத்த வேண் டாம்' என கட்சித் தொண்டர்களுக்கு ஜெய லலிதா வேண்டுகோள் விடுத்துள்ளாரே?

! அப்படியாவது, தம்மைக் கைது செய்ததற் காக எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்களா என்ற ஏக்கமாயிருக்கலாம்...!

● எம். அசோக்ராஜா,

அரவக்குறிச்சிப்பட்டி.

? பாகிஸ்தானை வென்ற வெள்ளி விழாவை நாம் கொண்டாடுவது, தோற்றுப் போன பாகிஸ்தானைச் சீண்டி விடுவது போல் ஆகாதா?

! நாம் கொண்டாடுவது பாகிஸ்தானின் தோல்வியை அல்ல; வங்க தேசத்தின் விடு



• தொடரும் பாரம்பரியம்!


ராகுல் காந்தி



• வெண்ணெய்..?




• ...சுண்ணாம்பு..?



• புகழ்ச்சியும் நெகிழ்ச்சியும்



• வர்ணனை வீரர்!



• கரைத்துக் குடித்தவர்!

தலைமையையும் அதற்கு உதவிய இந்திய ராணுவத்தின் வெற்றியையும் தான். இதில் பாகிஸ்தான் மனம் நோகாத படி நடந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் வெற்றிப் பொன் விழாவைக் கொண்டாடியபோது, நேச நாட்டுத் தலைவர்கள், யுத்தத்தில் உயிரிழந்த ஜெர்மானிய வீரர்களுக்கும் சேர்த்து அஞ்சலி செலுத்தினார்கள் என்பது கவனத்துக்குரியது.

● **எம். ஆர். சுகந்தி, திருத்துறைப்பூண்டி.**

? ஒரு பெண்ணின் தலைமையில் நடந்த மிகவும் மோசமான ஆட்சியின் கீழ் ஐந்தாண்டு காலம் தமிழகம் சீரழிந்தது என்பது பெண் இனத்திற்கே இழுக்கு அல்லவா...?

! அப்படியானால், மோசமான ஆண்பிள்ளையின் ஆட்சியில் நாடே சீரழிந்து போனது ஆண் குலத்துக்கும் இழுக்குத்தானே!

● **அ. பானுமதி, ஆம்பலாப்பட்டு (தெற்கு).**

? இப்போதைய அரசியல் சாணக்கியன் யார்...?

! கருணாநிதிதான்! உ.பி.யில் 356 பிரயோகிக்கப்பட்டபோது அதை வரவேற்று, 'மத்திய அரசுக்கு வேறு வழி இல்லை...' என்று கூறினார். இப்போது உ.பி. உயர்நீதி மன்றம் அரசின் 356 பிரயோகத்தைத் தவறென்று தீர்ப்பு வழங்கியிருக்கும் நிலையில், அந்தத் தீர்ப்பையும் வரவேற்று, 'அதற்காகத்தான் 356 நீக்கப்பட வேண்டும் என்று சொல்கிறோம்...' என அறிக்கை விட்டிருக்கிறார். இது சாணக்கியம்தானே!

● **டி. பசுபதி, ஊஞ்சவேலாம்பட்டி.**

? ஜெ. புதிதாகப் பத்திரிகைகள் தொடங்கி நடத்தப் போகிறாராமே...?

! மோசமான முதல்வராக இருந்து நாட்டைச் சுரண்டுவதை விட, மோசமான பத்திரிகையாசிரியராக இருந்து தமது வாசகர்களை மட்டும் மூளைச் சலவை செய்ய முற்படுவது எவ்வளவோ மேல்...!

● **ஜான்ஸி ராணி, மதுரை - 10.**

? லஞ்சம், ஊழல், மோசடி, பதுக்கல்.. இதற்குத்தானா அன்று அரும்பாடுபட்டு சுதந்தரம் வாங்கினது...?

! இல்லை; இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டி வழக்குத் தொடுக்கவும், இவற்றை முன்னிட்டு தேர்தலில் ஊழல்காரர்களுக்கும் தகுதியற்றவர்களுக்கும் தோல்வி ஏற்படுத்தவும் முடிகிறதல்லவா... அதற்காக வாங்கியதுதான் சுதந்தரம்!

● **வி. அர்ஜுன் குமார், கோவை - 42.**

? ஜெயலலிதா காளி உபாசகரா?

! தம்மையே ஆதிபராசக்தியாகக் கருதி தொழுவோரை ஏற்பதைக் காட்டிலும் காளி உபாஸகராக மாறியிருப்பது முன்னேற்றம் தான்!

● **பா. அச்சுதன், சேத்துப்பட்டு.**

? மனத்தில் நெகிழ்வை ஏற்படுத்திய நிகழ்ச்சி...?

! 'ஏரி, குளங்களைச் சீராக மராமத்து செய்து வைத்திருந்தால், வெள்ளத்தால் இத்தனை பாதிப்பு ஏற்பட்டிராது' என்று பேசிய முதல்வர், இனி இந்த அரசு அப்பணிகளை மும்முரமாகச் செய்யும் என்று உறுதியளித்தார். அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் முன்பு பக்தவத்சலம் மராமத்துத் துறை அமைச்சராக இருந்து ஆற்றிய அரும்பணிகளையும் நினைவு கூர்ந்த போது உண்மையில் நெகிழ்ச்சியாகத் தான் இருந்தது.

● **ஆர்.கே.எஸ். சம்சுகனி, டி. மாரியூர்.**

? 'எஸ்.டி.எஸ். - ஓட்டை வாளி! ஆர்.எம்.வீ. - அறுந்த கயிறு' என்ற காளிமுத்துவின் வர்ணனை எப்படி...?

! காளிமுத்து - நமுத்த பட்டாசு!

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
எம். அசோக்ராஜா,
ஸ்ரீ கணபதி ஏஜென்சீஸ்,
பெல்நகர், திருச்சி - 620 015.

காதலிக்கிறாராமே..?

அந்தர - சுந்தரன்!

ரிஷபன்

அந்த விநோதக் காட்சியை முதலில் என் மகள் தீபாதான் கவனித்தாள்.

"அய்யோ. அப்பா கீழே இறங்கு."

ஞாயிற்றுக்கிழமை என்பதால் சற்றே காரியங்களில் நிதானம். அதாவது காலை கண் விழிப்பதில் தொடங்கி.

எட்டு மணி, கண் விழித்தபோது.

சூரிய வெளிச்சம் கட்டிலுக்கே வந்து விட்டது. இன்னமும் தொக்கி நிற்கிற சோம்பல்.

"அப்புறம் மத்தியானம் தூங்க முடியாது. எழுந்துக்கறீங்களா?"

புவனாவின் கிண்டல் வேறு. இனியும் படுப்பதில்லை. எழு, தம்பீ என்று எழுந்தேன். நின்றேன்.

இந்த நிமிடம்தான் தீபாவின் அலறல்.

"அய்யோ, அப்பா, கீழே இறங்கு."

"என்னடி. உளர்றே?"

"கீழே வாப்பா."

கட்டிலை விட்டு எழுந்து நிற்பவனிடம் என்ன பேச்சு இது.

நடந்து அவள் அருகில் போனேன்.

"என்ன தீபு..."

"அம்மா."

தீபா அலறிக் கொண்டு சமையலறைக்குள் ஓடியது. புவனாவும் அவளுமாக அடுத்த நிமிடம் வெளியே வந்தார்கள்.

"என்னங்க. உங்களுக்கு என்ன ஆச்சு?"

எனக்குத் தலை சுற்றியது. ஞாயிறும் அதுவுமாய் அரைத் தூக்கத்தில் எழுந்த பிரமையில் இருப்பவனிடம் மேலும் என்ன சோதனை.

"கீழே பாருங்க" - புவனாதான் சொன்னது.

கைலி கட்ட மறந்து விட்டேனா. அவசரமாய்க் குனிந்தால்... கைலி.

"நல்லாக் குனிஞ்சு பாருங்க. கைலியைத் தூக்குங்க."

கைலியைத் தூக்குவதா. புரியாமல் லேசாக உயர்த்தி, கீழே பார்த்தேன்.

ஹா!

மூச்சு ஒருகணம் நின்று விட்டது.

பூமிக்கு - அதாவது தரையிலிருந்து அரை அடி உயரத்தில் நின்று கொண்டிருந்தேன்.

அவ்வளவுதான். இதயம் வேகமாய்ப் படபடக்க 'ஹாஜ்மூலா' தாத்தா போலக் குதித்து கீழே இறங்க முயற்சித்தேன். ம்ஹூம். என்ன குதித்தாலும் அதே அரை அடி உயரத்தில்தான்.

"புவனா, என்னடி இது"

"என்னங்க... எப்படியாவது கீழே வாங்க."

"எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா? வர முடியலைடி."

லேசாய்க் கண் தளும்பி விட்டது.


தீபாவும் புவனாவும் பாதுகாப்பான தூரத்தில் நின்று கொண்டு பத்துப் பதினைந்து கட்டளைகளைச் சொல்லிக் கொண்டிருக்க, என்னால் முடிந்த அளவு - ஊஹூம், முடியவே முடியாத அளவு - முயற்சித்து அந்தரத்திலேயே நின்றேன்.

"ஏய், வயித்தைக் கலக்கறது."

பரிதாபமாய்ப் புலம்பினேன்.

"நேத்து ராத்திரி என்ன சாப்பிட்டீங்க"

"எல்லாம் நீ சமைச்சுப் போட்டதுதான்."



"என் மேல எரிஞ்சு விழத் தெரியும்..."

"அய்யோ அம்மா. இப்பவும் ஏன் அப்பா கூட சண்டை போடறே. பாவம் அப்பா, எப்படியாவது கீழே இறக்கி விடு."

புவனா விரலைச் சொடுக்கினாள்.

ஐடியா.

"வா, தீபா. நாம ரெண்டு பேரும் ரெண்டு கையையும் புடிச்சுத் தொங்கலாம்."

தொங்கினார்கள். பலன், என் கை வலி தான்.

புவனா பெருமூச்சு விட்டாள்.


தீபா அந்தரக் கால்களின் கீழ் தன் கை விரல்களை ஓட விட்டுப் பார்த்தாள். சுலபமாய் இந்தப் பக்கமிருந்து அந்தப் பக்கம் தடங்கலின்றிச் சரு சரித்தன.

"நெஜம்மாவே சப்போர்ட் இல்லாம நிக்கிறீங்க அப்பா."

"போதும், உன் சர்டிபிகேட். நாளைக்கு ஆபீஸ் எப்படிப் போவீங்க."

மீண்டும் கிலியைக் கிளப்பினாள்.

"நம்ம டாக்டரைப்



பார்ப்போமா?" என்றேன் தீனமாக.

"இதுக்கு அவர் என்ன பண்ண முடியும். ஜுரமா, தலைவலியா, மாத்திரை தந்து குணப் படுத்த."

"இப்படியே எடக்கு மடக்காப் பேசுங்க. இப்ப என்ன செஞ்சா நீங்க கீழே வருவீங்க."

"அதே கேள்வியை எத்தனை விதமா நீ கேட்டாலும் எனக்குப் பதில் தெரியலியே!" பழைய சிவாஜி படக் காட்சி போலப் புலம்பினேன்.

"டேய் சிவா... என்னடா பண்றே"

நாணுவின் குரல் கேட்டது.

"அய்யோ, நாணு வந்துட்டான். நாங்க ரெண்டு பேரும் இன்னிக்கு கே.கே. நகர் வரை போகிறதாப் பிளான்."

பதறி எழுந்து அந்தரத்தில் நின்றவனைப் பிடித்து அமர்த்தினாள்.

"பேசாம படுங்க. உடம்பு சரியில்லைன்னு சொல்லிடலாம்."

நாணு உள்ளே வந்து விட்டான்.

"என்ன, கிளம்பலியா இன்னும்?"

"சொல்லேண்டி நீயே" என்பது போல புவனாவைப் பார்த்தேன்.

"அப்பாக்கு உடம்பு சரியில்லே..." என்றாள் தீபா அவசரமாய்.

"என்ன உடம்பு. ஜொரமா?"

நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.

"கடவியே..."

"இல்லே.. ஸ்டமக் பிராப்ளம்."

"அப்படியா. நேத்து நல்லாத்தானே இருந்தான்."

"இன்னிக்குக் காலையிலதான்..."

நாணு என்னையே சந்தேகமாய் முறைத்துப் பார்த்தான்.

"சரி. அந்தக் கவரைக் கொண்டா. நானே கொண்டு போய்க் கொடுக்கறேன்."

சட்டென்று எழுந்து கொள்ள முயன்றவனை தீபா அடக்கிப் படுக்க வைத்தாள். நாணு கவனித்து விட்டான்.

"என்ன தீபா..."

"ஹிஹி.. ஒண்ணுமில்லே. சும்மா."

"எங்கே வச்சிருக்கீங்க" என்றாள் புவனா.

"மேஜை மேல பாரு..."

அங்கே இல்லை. 'என் கைப்பையில் பாரு'. ஊஹூம். 'கிச்சன்ல வச்சேனா' இல்லை. அட, எங்கே போய்த் தொலைந்தது? என்னையும் மீறி டென்ஷனில் எழுந்து அலமாரியின் உச்சியில் இருந்த கவரை எடுத்து விட்டேன்.

"இந்தா" என்று நாணுவிடம் நீட்டினேன்.

அதற்குள் புவனாவும் தீபாவும் கோவில் சன்னிதியில் திரை போடுகிற மாதிரி போர்வையின் இருபுறமும் பிடித்துக் கொண்டு ஓடி வந்து என் முன்புறம் மறைத்தார்கள்.

"என்னடா இது.."

"இது ஒரு மாதிரி. தொத்திக்கிற பிராப்ளமாம்... யாரும்கிட்ட போகக் கூடாதாம்..

டிவி சீரியல் பார்க்கிற ஜோரில் தீபாவுக்கு கற்பனை பிய்த்துக் கொண்டது.

நாணு தலையைப் பிய்த்துக் கொண்டான்.

"எனக்கு ஒண்ணுமே புரியலே"

"எனக்கே புரியலே" என்றேன் அழாத குறையாய்.

திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு வெளியேறினான்.

"ஸ்ஸ்... ஹப்பா... தப்பிச்சேன்" என்றேன்.

போர்வையை எடு...

தீபா மீண்டும் என் கால்களைப் பார்த்தாள்.

"எப்படிப்பா முடிஞ்சுது. கால் வலிக்கலே?"

"கேள்வியைப் பாரு. ஏன் வலிக்கப் போவுது. உங்கப்பா இனிமேல் செருப்பே வாங்க வேண்டாம். பேட்டாக்கு அழுற பேட்டா மிச்சம்."

இப்போது என் 'பிரச்னை' எனக்கு ஒரு மாதிரி பழகிப் போய்விட்டது. குறுக்கும் நெடுக்குமாய் நடந்து பார்த்தேன்.

"ஹை... ஜாலியா இருக்கு. இப்படியே உட்கார்ந்தா என்ன ஆகும்?"

"ஆமா. பெரிய ஆராய்ச்சி."

உட்கார்ந்தேன். புவனா கிடக்கிறாள். அபூர்வமாய் வாய்த்த திறனை ஏன் வீண் அடிப்பானேன்.

அந்தரத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்த கோலம்!

"புவனா... அம்மா புவனா"

என் அத்தையின் குரல். கூடவே அப்பாவும். ஊருக்குப் போனவர்கள் திரும்பி விட்டார்களா?

"ஓடுங்க.. கட்டிலுக்கு"

"எதுக்கு. நம்ம அப்பாதானே."

வந்து விட்டார்கள். அப்பா கேஷுவலாய் அறைக்குள் பையை வைக்கப் போக அத்தை பெருமூச்சுடன் சோபாவில் அமர்ந்தாள்.

"என்ன பஸ்ஸோ... ஓவர்டேக் பண்ணணும்னு அந்தரத்துல பறக்கற மாதிரி ஓட்டறான். உயிரைக் கையில பிடிச்சுண்டு சீட்டுக்கு மேல வித்தைக்காரன் மாதிரி உட்கார்ந்திருந்தோம்."

அத்தை பேசிக் கொண்டே போனாள்.

"அத்தே. இவரைப் பாருங்களேன்."

புவனாதான் கேவியது.

"என்னடி. ஏன் என்னவோ போலப் பேசறே?"

அப்பாவும் ஹாலுக்கு வந்து விட்டார்.

"அப்பா..."

"தாத்தா."

இருவருமாய்ப் புலம்ப, அப்பா பிளஸ் அத்தையின் பார்வைகள் என் பக்கம் திரும்பின.

"என்னடா?" ஜோடி நாயனம் போலக் கத்தினார்கள்.

"தெரியலைப்பா. கார்த்தால எழுந்தா இந்த மாதிரி..."

"நம்ம ஃபாமிலில இந்த மாதிரி முன்னால யாருக்காவது வந்திருக்கா?" என்றாள் அத்தை.

"இது என்ன ஆஸ்த்துமா, டிபி மாதிரி வியாதியா."

"ஏண்டா... ஏதாவது ரோட்டுல மிதிச் சுட்டியா மந்திரிச்சுப் போட்டதை."

"இனிமேல மிதிக்கவே முடியாதுப்பா..." என்றேன் பலவீனமாக.

"இருங்கோ. உங்க ரெண்டு பேருக்கும் காப்பி கொண்டு வரேன்."

புவனா இந்த இடத்திலிருந்து தப்பித்தால் போதும் என்று உள்ளே ஓடி விட்டாள்.

தீபாவுக்கு பாடப் புத்தகத்தில் மனதே பதிய வில்லை. என் மீது ஒரு பார்வை, பாடத்தின் மீது ஒரு பார்வை என்று அல்லாடினாள்.

"திருஷ்டி சுத்திப் போடட்டுமாடா?" என்றாள் அத்தை.

"அய்யோ அத்தை.. பேசாம இரு."

"ஏண்டா.. பாரதத்துல தர்மரோட தேர் அந் தரத்துல நிக்கும்னு படிச்சிருக்கேன். பொய்யே சொல்லாதவராம். அப்புறம் அஸ்வத்தாமன் செத்ததா பொய் சொல்லப் போக தேர் கீழே வந்துரும். அது மாதிரி."

அப்பா தவறாமல் டீவி மஹாபாரதம் பார்த் தவர். கையிலே 'வியாசரை' வைத்து ஒப்பிட்டு பார்த்துக் கொண்டு புராணம் பேசினார்.

"அப்பா...."

சுரீலென்று உறைத்தது. பொய்யே சொல் லாதவர். நேற்றிரவு நடந்தது நினைவில் வந்தது.

"என்னங்க.. என்னை உங்களுக்கு ஏங்க ரொம்பப் பிடிக்குது..."

தீபாவுக்கு போர்த்திவிட்டு விடிவிளக்கை ஒளிரவைத்த புவனா என்னருகில் நெருங்கி படுத்துக் கொண்டாள்.

"யார் சொன்னது..."

"குறும்பு..." செல்லமாய்க் கன்னத்தில் இடிக்க கடவாய்ப் பல் ஆடிவிட்டு அமர்ந்தது.

"அம்மா.. தாயே.. கொஞ்சம் மெதுவா..."

"நெஜத்தைச் சொல்லுங்க. எம்மேல உசுருதானே."

மேலே சரிந்ததும் என் 'உசுரு' ஒரு வினாடி நின்று இயங்கியது.

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்லே.."

"மனசைத் தொட்டுச் சொல்லுங்க."

தொட்டுச் சொன்னேன்.

"பிடிக்கும். அவ்வளவுதான்."

"எப்பவும் விளையாட்டு. உங்களுக்கு..."

"எனக்கு இப்ப தீபாவைத்தான் ரொம்ப பிடிக்கிறது..." என்றேன்.

"போங்க. ஆனாலும் மோசம்.."

"இல்லம்மா. உன்மேல எனக்கு நிறைய விமர்சனம் இருக்கு. நிறைய கேள்விகள், பதில் கள். உன்னை உனக்காகவே பிடிக்கணும்னா, இன்னும் கொஞ்சம் வருஷம் ஆகும். நமக்குள்ளே இந்த சச்சரவுகள் மீறிய அழுத்த மான அடி மனசு நேசம் புலப்பட.. புரிஞ்சுக்க.."

ஏன் இப்படி டீவி பேட்டியில் குறிப்பிட்ட நடிகர் பேசுகிற தொனியில் பேசினேன் என்று புரியவில்லை.

ஆனால் சொன்னபோது எனக்கே நேர்மை என்று தொனிக்கிற பதிலைச் சொன்னேன். புவனா அதைக் கேலியாக எடுத்துக் கொண்டு தனக்கே இயல்பான இன்னொசன்ஸுடன் என் கையைப் பற்றிக் கொண்டு தூங்கிப் போனாள்.

கடவுளே.. என்னையும் மீறி மனத்தில் பட்டதைச் சொல்லி விட்டேன். முகமூடியற்று நான்!

அடக் கடவுளே. பொய் சொன்னதால் கீழிறங்கிய காலம் போய் நிஜம் சொன்னதால் மேலே ஏறி விட்டேனா. இப்படியும் நடக்குமா?

"புவனா..."

மூளைக்குள் 'கிளிக்' கேட்டது.

சமையலறைக்குள் சஞ்சரித்தேன்.

"என்ன இது... ஹால்ல அப்பா, அத்தை இருக்காங்க."

"புவா.. புவிக்குட்டி... என் கண்ணே.. என் செல்லமே..."

"என்னங்க இது... ச்சே அசிங்கம்."

"உம்மேல உசுரு. நீதான் இந்த உலகத் துலேயே படு அழகு. பெங்களூர் போட்டி எல்லாம் குப்பை. அவ உன் கால் தூசு பெற மாட்டா. எலிசபெத் டெய்லர், ரியாஸ் டெய்லர், ஜூஹிசாவ்லா.. எல்லாம் பாவ்லா..." ரிதமிக்காய்ப் பேசப் பேச...

அப்படியே கீழிறங்கித் தரையைத் தொட்டு நின்றேன்.

முதுகெலும்பு

கிராமம்
நாட்டின்
முதுகெலும்பாம்!
அதனால்தான்
கிராமத்தை
அரசாங்கத்தால்
திரும்பிப் பார்க்க
முடியவில்லையோ...

— டி.எல்.சிவகுமார் எழுதிய முகத்துக்குத் தெரியாத முதுகெலும்புகள் நூலிலிருந்து - வயலூர் பா.குணா.



♦ தலைவரின் (ரஜினி) பிறந்த நாள் நேரடி ரிப்போர்ட்டை ஒரு ரன்னிங் காமெண்டரியைப் போலத் தந்த கல்கிக்கு சாம்பியன்ஸ் டிராபியை தாராளமாகத் தரலாம்.
சென்னை -1, கே.ஆர். உதயகுமார்.

♦ 'தேன் நிலவு ஒரு திகட்டாத பயணம்!' அட்டைப் படம் கண்டு 'கல்கியில் கிளு கிளுப்பூட்டும் சமாசாரமா?' என்ற வியப்பில், கட்டுரையைத் தேடிப் பிடித்துப் படித்துப் பார்த்தேன். ஹனிமூனுக்கு அனர்த்தம் கொண்டிருந்த என்னைப் போன்றவர்களுக்கு, மணவாழ்க்கை என்கிற புத்தம் புது அனுபவ உலகில் உதிர்க்கப்படுகிற ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் முற்றிலும் புரிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகிற இனிய பயணம் தான் தேனிலவு என்ற கல்கியின் பாதை தவறாத வரிகள் மூலம் மணவாழ்க்கையின் புனிதத்தைப் புரிந்துக் கொள்ள முடிந்தது.
பெங்களூர் - 47, மு. புஷ்பராசன்.

♦ 'ஜெயில்லலிதா!' தலையங்கத்தின் தலைப்பு சூப்பர். கடைசிவரி சிந்திக்க வைத்தது. அனுதாபம் மிக்கவர்கள் தமிழக வாக்காளர்கள். அதனாலேயே ஊழல் தடுப்பு அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு, நீதி விரைவாக வழங்கப் படம் வேண்டும் என்ற தங்களது யோசனை வரவேற்கப்பட வேண்டியது மட்டுமல்ல, விரைவாகச் செய்ய வேண்டியதும்தான்.
தூத்துக்குடி - 1,எஸ். ராமசுப்பிரமணியன்.

♦ சென்னையின் மழைக்காட்சிகளைப் படம் பிடித்துப் போட்டது பெரிதில்லை. 'சென்னையில் மழை' தலைப்பை 'மழையில் சென்னை' என்று மாற்றி எழுதி, பதில்தான் எத்தனை ஆழமான சிந்தனை!
சென்னை - 14, அய்யாறு வாசுதேன்.

♦ 'ரேவதி மாறிவிட்டாள்' என்று நடிகை ரேவதி அளித்த பேட்டி எல்லோரும் 'சமூக சேவை' செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்க்கும்படி இருந்தது.
திருச்சி - 17, உஷாமுத்துராமன்.

♦ நேதாஜி விமர்சனத்தில், படத்தில் வருகிற வில்லனுக்கு நீர் சொன்ன அந்த வார்த்தைகளைப் படித்து விட்டு, சிரிப்புன்னா, சிரிப்பு... தாங்க முடியாத சிரிப்பு!
சென்னை - 73, க.கலைச்செல்வன்.

♦ கடைசியில் எங்களை பாதரட்சைகளை என்னும்படி வைத்து விட்டீரே, இது நியாயமா?
வேலூர் -4, சுதாமணிமேகலை.

♦ தம் சொத்தைத் தம்மக்களுக்கு எழுதி வைப்பதற்குக் கட்ட வேண்டிய வரியைத் தாம் செலுத்துவதற்கு இராஜாஜி அவர்கள் குறிப்பிட்ட காரணம், கண்களில் நீரை வரவழைத்தது. நீண்ட நேரம் இன்றைய அரசியல்வாதிகளைப் பற்றிய சிந்தனைகளில் ஆழ்த்தி, தொடர்ந்து கட்டுரையைப் படிக்கவிடாமலும் செய்து விட்டது. எத்தகைய மேன்மையான மனிதர்கள் ஆண்ட நாடு இது!
சேலம் - 7, இ. இளங்கோ,
மாநிலப் பொருளாளர், தமிழ்நாடு கூட்டுறவுத் துறை நடுநிலை அலுவலர் சங்கம்.

♦ காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் 27.5.96 அன்று "என்னைப் பாதித்த சிறுகதை" என்னும் தலைப்பில் ஓர் கட்டுரைப் போட்டியை நடத்தியது. அதில் கலந்து கொண்ட மேல்நிலைப் பள்ளி மாணவியான எனக்கு முதற்பரிசும், பாராட்டிதழும் வழங்கப்பட்டது! அதில் நான் சென்ற ஆண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சிறுகதையான "சமூக நலக் காடுகளும் சாம்பல் பூத்த குழந்தைகளும்" என்ற கதையை மையமாகக் கொண்டு எழுதியே வெற்றி பெற்றேன்! சமூக விழிப்புணர்வுக்கு, 'கல்கி' இளைய சமுதாயத்தின் வழிகாட்டியாகவே உள்ளது.
கோட்டையூர், ச.கோமதி.

♦ கல்கி 15.12.96 இதழ் தலையங்கம் கண்டேன். தமிழ்நாட்டு அரசு அலுவலகத்தில் தமிழை வலுக்கட்டாயமாகத் தமிழ்க்குடிமகன் திணிக்கிறார் என்று எழுதியுள்ளீர்கள். எந்த நாட்டிலும் அந்த நாட்டு மொழியை யாராவது திணிக்க முடியுமா? 1956-க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்கள் தமிழ் ஆட்சிமொழி என்று தெரிந்துதான் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தமிழில் எழுத உடனடியாகப் பயிற்சி பெற்று இருக்க வேண்டும்.

விஞ்ஞான, மருத்துவக் கல்விக்குத் தேவைப்படும் அடிப்படையான ஆங்கிலச் சொற்கள் அப்படியே தமிழ் வடிவாக்கப்பட்டு கற்றுத் தரப்பட்டால் ஒருவர் சராசரி ஆங்கில அறிவைக் கொண்டு வெளிநாடுகளில் சமாளித்துவிட முடியும் என்று எழுதியிருக்கிறீர்கள். இதுவும் ஒப்புக் கொள்ளும் வகையில் இல்லை. ஆங்கில பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துவது தமிழ்வழி படிப்பதினால் வரும் நற்பயன்களைக் குறைக்கும். எந்தத் துறையைச் சார்ந்த ஆங்கிலம் வேண்டும் என்றாலும் அதை தேவைப்படுவோர் கற்றுக் கொள்ள முடியும்; ஆங்கிலச் சொற்கள் வழி, துறை அறிவு பெற வேண்டிய அவசியம் இல்லை.
சென்னை -5, ச.முத்துக்குமரன்,
உறுப்பினர், செயலர், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

வட்ட மேஜை

ஜாலி போட்டி - 23


பரிசு ரூ. 5000/-

இது புது வருடம். அதனால் 'புது' போட்டி! கீழே எட்டு சினிமாக்காரர்களின் புகைப்படங்கள் உள்ளன. இவர்கள் நடித்த, இயக்கிய, தயாரித்த- ஏதோ ஒருவகையில் சம்பந்தப்பட்ட எட்டு திரைப்படங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்.

ஒரே கண்டிஷன்- எட்டும் 'புது' அல்லது 'புதிய', 'புதுமை' இப்படித் தொடங்குகிற பெயர்களாகவே இருக்க வேண்டும்! சரியான விடை எழுதுபவருக்கு ரூ.5000/- பரிசு. பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவர்.

கடைசி தேதி 13.1.97. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.










ஜாலி போட்டி 23

1. .... பாரதிராஜா
2. .... பாக்யராஜ்
3. .... ரகுமான்
4. .... ரேவதி
5. .... சித்தாரா
6. .... சத்யராஜ்
7. .... பிரேம்
8. .... தாணு

பெயர்: ....


முகவரி : ....

....



இவ்வாறாக...

அன்றைக்குப் போலவே
இன்றைக்கும்
ஆதரவாயிருக்கும் அம்மாவை
ஐயோ பாவம்
தாய்ப்பாசமென்று விட்டுவிடலாம்
தாய்ப்பாசமென்று விட்டுவிடலாம்





ஆயிரத்தொரு சண்டைகளுக்கு
அப்புறமும்
அப்பா காட்டும் அக்கறையை
அன்புக்கு நேர்வதெல்லாம்
துன்பம்தானென்று விட்டுவிடலாம்

மார்பில்
முகம்புதைத்து
மனைவி கேட்கும் கேள்விகளுக்கு
மறுமொழியாக
மௌனத்தை விட்டுவிடலாம்

காலைக்கட்டி மயக்கும்
குழந்தைகளை
கடவுளின் அற்புதங்களை நம்பி
சும்மா
விட்டுவிடலாம்

முதுகுக்குப் பின்
புறம்பேசித் திரிகிற
நண்பர்களின் குணத்தை
மன்னித்து
மறந்து விட்டுவிடலாம்

வேண்டியவர்களின் யோசனைகள்
வேண்டாதவர்களின் கேவலப்படுத்தல்கள்
இரண்டுமே

விதியின் முன்புக்கு
வீணென்று
விட்டுவிடலாம்

எனில்
எல்லாவற்றிற்கும் மேல்
இயல்பிலேயே உறுத்திக்கொண்டிருக்கும்
என் மனசாட்சிக்கு
என்ன பதில் சொல்ல ?

- விக்ரமாதித்யன்

நகைக் கடைகள்:



வழுக்கல்? ''இத்தனை வருடம் புத் தாண்டையொட்டி, சலுகையில் நகை வாங்கிய வாடிக்கையாளர்களுக்கு, சலுகை ரத்தானதில் ஏமாற்றம். வெளியூர்களிலிருந்து, 'பணத்துடன், நகை வாங்க வந்து விட்டோம். சலுகை கொடுங்கள்' என்று கேட் டார்கள் பலர். அதுவுமின்றி பொதுவாகவே, இன்று அனைத்துப் பொருட்கள் விற்பனையிலும் கடும் போட்டி காரணமாய் தள்ளுபடி, இலவசப் பரிசு, அதிர்ஷ்டப் பரிசு என்று கொடுக்கிறார்கள். நாங்கள் மட்டும் சும்மா இருக்க முடியுமா?' என்று கேட்கிறார் லலிதா ஜுவல் லரியின் சுகுமாரன்.

"வருஷத்தில் 364 நாள் நமக்கு; ஒருநாள் - ஜனவரி முதல் தேதி - கஸ்டமர்களுக்கு நன்றி

போட்டி போடும் சலுகை விற்பனை எதற்காக?

சென்னை நகரத்து நகைக்கடைகள் திமிலோகப்படுகின்றன. 'கூலி இல்லை; சேதாரம் இல்லை; கற்களுக்குக் கட்டணமில்லை' என்று எல்லா நகைக்கடை களும், போட்டி போட்டுக் கொண்டு விற்பனை செய்ய கடைகளில் திருவிழாக் கூட்டம்.

சென்ற ஆண்டு, இதுபோன்ற சலுகை விற் பனையால், சிறு நகை வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாய் சலசலப்பு எழ, 'இந்த ஆண்டு... கூலி இல்லை, சேதாரம் இல்லை.. வியாபாரம் நடத்துவதில்லை' என்று, சிறு நகை வியாபாரிகள் நலன் கருதி, அனைவரும் தீர் மானித்தார்கள் (ஆனால், நகை வாங்க வந்த வர்கள், அந்த சலுகைகளை, நகைக் கடைக் காரர்களிடமிருந்து, கேட்டுப் பெற்றுப் பயனடைந்தது பகிரங்க ரகசியம்)

சென்ற ஆண்டு, நகை வியாபாரிகள் எடுத்த நிலைப்பாட்டிலிருந்து இவ்வாண்டு ஏன்

கூறும்விதமாய் மறைந்த என் தகப்பனார் ஆரம் பித்து வைத்தார். அதை இவ்வாண்டும் பின்பற்றுகிறோம்" என்கிறார் பாலு ஜுவல் லர்ஸ் ஐயப்பன்.

"சென்ற வருடம் பண மார்க்கெட் ரொம்ப டைட். வியாபாரத்தில் அதன் பாதிப்பை உணர முடிந்தது. மோசடி நிதி நிறுவனங்களின் குட்டு வெளிப்பட்டு விட, மறுபடி மக்களுக்கு தங்கத்தில் முதலீடு செய்ய ஆர்வம் அதிகரித்து உள்ளது. முதலீடு செய்கிற பணத்துக்கு ஈடான தங்கத்தை அவர்களிடமே பாதுகாப்பாய் வைத்துக் கொள்ள முடிகிறதே! இது பிக்ஸட் டெபாஸிட் ரசீது போன்ற காகிதம் இல் லையே!" என்று தொடர்ந்த ஐயப்பனிடம், "சலுகை வியாபார சமயத்தில், விற்கப்படும்

நகைகள் தரத்தில் குறைந்தவையாய் இருக்குமோ என்ற பயம் நிலவுகிறதே?'' என்றோம்.

''வழக்கமான தரம் குறையும் சாத்தியமில்லை. இந்தச் சலுகை விற்பனை நாட்களுக்காக, எந்த வியாபாரியும் தரம் தாழ்ந்த நகைகளை பிரத்யேகமாய் தயாரித்து விற்பாரென நான் நம்பவில்லை.''

''ஓரிரு நாட்கள் சலுகை என்றால் சரி! பத்து நாட்கள் எதற்காக?'' இதை லலிதா ஜுவல்லரி சுகுமாரனிடம் கேட்டோம்.

''இரண்டு மூன்று நாட்கள் என்றால் கூட்டம் சமானிக்க முடியவில்லை. நிறைய பணத்தை எடுத்துக் கொண்டு வந்து, சாவகாசமாய் டிஸைன் பார்த்து வாங்க, கஸ்டமர்களால் முடியாது போகிறது. அந்த சிரமத்தைக் குறைக்கவே இந்த ஏற்பாடு. ரெண்டு நாளானாலும், பத்து நாளானாலும் மொத்த விற்பனையில் பெரிய வித்தியாசமிருக்காது!''

''சில நகைக் கடைகளுடன் இணைந்த ஃபைனான்ஸ் கம்பெனிகள் மூடப்பட்டு விட்டதால், தங்களின் நிதி நிலைமையின் ஸ்திரத் தன்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டத்தான் இந்தச் சலுகை விற்பனை உதவும் என்று சொல்லலாமா?''

''எங்களைப் பொறுத்த வரை எங்கள் வாடிக்கையாளர்களில் மெஜாரிடி ரெகுலர் கஸ்டமர்கள். அவர்களுக்கு எங்கள் பேரில் ஆழமான நம்பிக்கை எப்போதும் உண்டு என்பதால் நாங்கள் அப்படியெல்லாம் செய்ய வேண்டியதில்லை!''

— கௌதம்ராம்

அரசு கெஜட்டில் ஆபாச வார்த்தைகளா?

அண்மையில் கோழிக்கோட்டுக்கு விஜயம் செய்த பிரதமர் தேவேகௌடாவை வரவேற்க முதல்வர் நாயனார் போகவில்லை. இது கேரள அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ''இது கேரள பண்பாட்டுக்கே இழுக்கு. பிரதமரை வரவேற்க முதல்வர் போகாததால், கேரளாவின் பிரச்னைகளைப் பிரதமரிடம் எடுத்துக் கூறுகிற ஒரு மாபெரும் வாய்ப்பை நாயனார் தவற விட்டு விட்டார். பிரதமரிடம் ஏதாவது தனிப்பட்ட முறையில் வருத்தம் இருந்தாலும் அதை இப்படியா அநாகரிகமாக வெளிக்காட்டுவது?'' என்று காரசாரமாக அறிக்கை விட்டார் கேரள மாநில காங்கிரஸ் தலைவர் வயலார் ரவி.



இதற்கு நாயனாரும் சளைத்துப் போய் விடவில்லை. ''ஏதாவதொரு மத்திய அமைச்சர் வந்தாலே அவர்கள் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருக்கும் வயலார் ரவிக்கு வேண்டுமானால் இதுவொரு பெரிய பிரச்னையாகத் தெரியலாம். நான் வரவேற்கப் போகாவிட்டால் என்ன? அமைச்சர்கள் சென்றார்களே! அவர்கள் கேரள பிரச்னைகளை எடுத்துக் கூறவில்லையா என்ன? அதோடு மரபுப்படி கேரள தலைநகரான திருவனந்தபுரத்துக்கு பிரதமர் வரும்போதுதான் முதல்வர் சென்று வரவேற்க வேண்டும். மற்றபடி நான் போய்த்தான் வரவேற்க வேண்டும் என்பதில்லை!'' என்று சூடாகப் பதிலடி கொடுத்து விட்டார் நாயனார்.

● கேரளாவில் ஏற்பட்டுள்ள இன்னொரு பரபரப்பு, கேரள கெஜட்டில் வெளியாகியுள்ள ஒரு விஷயம். கேரள தொழிலதிபர் ஒருவருக்கும் அவரது தொழிலாளி ஒருவருக்கும் இடையிலான வாய்த் தகராறில் வெளிப்பட்ட கெட்ட வார்த்தைகள். லேபர் கோர்ட்டில் வெளிப்பட்ட இந்த விஷயத்தை அப்படியே அரசு தனது கெஜட்டில் பிரசுரித்துப் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது!

திருவனந்தபுரத்திலிருந்து : **எஸ்.எஸ். மணி**

மைத்ரேயி

ஒரு கொடி தேவைப்பட்டது. தேசியக் கொடி. மைத்ரேயியை மதுசூதன் சந்தித்ததற்கு அதுதான் காரணம்.

ராமநாய்க்கன் பேட்டையிலும் டைலர்கள் இருந்தார்கள். மதுசூதனனுக்கு அவர்கள் மீது நம்பிக்கையில்லை.

கொடியின் அளவு பெரியது. நாலடிக்கு ஆறடி. பழைய கொடி கிழிந்து விட்டதால் உள்ளூர்ப்பள்ளியில் நன்கொடையாக ஒரு கொடி தைத்துத்தரும்படி கேட்டிருந்தார்கள்.

அது அவன் படித்த பள்ளி. கேட்ட நன்கொடையோ தேசியக் கொடி. ஏதோ ஒன்று என்று ஒப்பேற்றிவிட மனசு வரவில்லை.

வளைந்து நெளிந்து உயர்ந்து தாழ்ந்து குலுக்கிக் கலக்கிய மண் சாலையில் அவன் அரைமணி நேரம் மொபெட்டில் பாடுபட்டு விட்டு வாணியம்பாடி வந்தான்.

காதர் பேட்டையில் ஒரு முகவரி சொன்னார்கள். தேடினான்.

கண்டுபிடித்தபோது மத்தியானம்.

மாடியேறிய முதல் தளத்தில் ஒரு பெரிய ஹால். பதினைந்து தையல் மெஷின்கள் ஏதோ எக்ஸ்போர்ட் துணி தைக்கிற யூனிட்.

பதினான்கு மெஷின்கள் காலியாயிருந்தன. சாப்பாட்டிற்குப் போயிருக்க வேண்டும்.

ஒரு மெஷின் மீது ஒரு செய்தித் தாளைப் பரப்பி விட்டு அதன் மேல் எவர்சில்வர் டப்பா ஒன்றை மூடி திறந்து கொண்டிருந்தாள் மைத்ரேயி.

காலடியோசை கேட்டு அவள் முகம் திரும்பிற்று. அவள் கண்கள் அவனை ஏறிட்டுப் பார்த்தன.

மதுசூதன் எதற்கு வந்தோம் என்று மறந்து போனான். சில கணங்கள்.

மைத்ரேயி கூட மறந்து போனாள். சில கணங்கள்.

வெகுநாட்கள் கழித்து வாணியம்பாடி ரயில்வே ஸ்டேஷன் கோடியில் ஒரு சிமெண்ட் பெஞ்சில் அவர்கள் இருவரும் அந்த மறதியை நினைவு கூர்ந்தார்கள்.

"அது ஏன் மைத்ரேயி? அந்த மறதி ஏன்?"

மைத்ரேயி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"அது என்ன மைத்ரேயி?"

புதிர்களை விடுத்தது போன்ற ஒரு புன்னகை அவள் உதட்டில் ஊர்ந்தது.

"ஒரு வசனம் தோணுது. சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"ரொம்ப வருஷமா தேடிய பொருள் திடீர்னு எதிர்க்க நின்னாப்பிலே ஒரு திக்பிரமை" என்றான்.

"ஜன்ம ஜன்மாந்தரமா..." என்று திருத்தினாள் மைத்ரேயி.

அவள் பொங்கி வருகிற சிரிப்பை அடக்கிக் கொண்டு சொல்கிறாள் என்று அவனுக்குப் பட்டது.

அவனுக்கு முதலில் ஒரு வருத்தம்

கிண்டலுக்குரிய பொருளாகி விட்டதில் ஒரு சின்ன ரோஷம்.

மைத்ரேயியின் செக்கச் சிவந்த முகமும் கறுத்த கண்ணும் அந்தச் சிரிப்பில் திணறுவதைப் பார்த்ததும் மதுசூதன் சிரித்தான். அவள் வாய்விட்டு உடம்பு குலுங்கச் சிரித்தாள்.

ஒருவர் மாற்றி ஒருவராக இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

வாயும் வயிறும் வலித்தன.

அவன் தான் முதலில் நிறுத்தினான்.

"ஏன் சிரித்தோம்?"

"சிரிப்பு வந்தது."

"இது சிரிக்கிற விஷயமா?"

"உருகலாம். கரையலாம். பைத்தியம் பிடிச்சு அலையலாம். இதெல்லாம் 'ஓல்ட் ஃபேஷன்."

"சிரிக்கிறது நியூ ஃபேஷனா?" அவன் குறுக்கிட்டான்.

"இன்னும் சிலதை விட்டுட்டேன்."

"சொல்லு..."

"பீச், ஹோட்டல், பார்க், சினிமா, லாட்ஜ்! சினிமாங்கன்னே வர்ற மாதிரி கட்டிப் பிடிச்சுக்கறது. உருண்டு பொரள்றது. கடைசியிலே கண்ணீர்! கதறியழறது"..... கண் இமைக்காமல் அவனைப் பார்த்தவாறே சொன்னாள்.

"நீ ஒரு நியூரோ சர்ஜனாயிருக்கணும் மைத்ரேயி!" அவன் குறுக்கிட்டான்.

"அறுக்கறேங்கிறீங்க?"

"இரக்கமில்லாமே..." மதுசூதன் கூட்டிச் சொன்னான்.

மைத்ரேயி நிதானமாகச் சொன்னாள்.

"காதல் செத்துக்கிட்டிருக்கு மது. அதுல யாருக்கும் நம்பிக்கையில்லே. மதிப்பில்லே இப்ப யாரும் காதலிக்கிறதில்லே."

"அப்போ நம்மது?" மதுசூதன் கேட்டான்.

"பொழுது போக்கிண்டிருக்கோம்."



'நெஜமா?"

"நெஜம்மா."

அவன் ஊர்ஜிதப செய்வது போல் தலை யாட்டினான். பிறகு தொடர்ந்தான்.

''எந்தப் பொழுது போக்கிற்கும் சில விதிகள். சில வரம்புகள் சில நாக ரிகங்கள் உண்டு. இப்படி நாமும் வகுத்திட்டிருக் கோம் யூ லைக் மீ. ஐ லைக் யூ. இப்ப! தாற்காலி கமா. அவ்வளோதான் இப்ப மகிழ்ச்சியா இருக் கோம். இதுக்கு முடிவு உண்டு. அது துக்கமா. சோகமா மாறக் கூடாது. முடிவு வரும் போது நீங்க சந்தோஷமா குட்பை சொல்லணும். நானும் சந் தோஷமா குட்பை சொல் லணும்."

அப்படி மைத்ரேயி சொன்னாள் என்பதை விரிஞ்சிபுரம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தி லிருந்த மைத்ரேயி வீட்டு நடைத் திண்ணையில் அமர்ந்து எதிர்த் திண் ணையில் உட்கார்ந்திருந்த பிரபாகர வர்மாவிடம் தெரிவித்தான் மதுசூதன்.

பிரபாகர வர்மா ஓய்வு பெற்ற ஃபாரஸ்டர். மைத் ரேயியின் அப்பா.

வாசல் நிலையைப் பிடித்து நின்றிருந்த கார்த்தியாயினி- மைத்ரேயியின் அம்மா- அதைக் கேட்டு விட்டு வெடித்துச் சிரித்தாள்.

பிரபாகர வர்மா புன்னகை செய்தார். தலை திரும்பி கார்த்தியாயினிக்கும் அந்தப் புன்னகையை நீட்டித்தார். கோளாறு பிடித்த குடும்பமோ என்று ஒரு கணம் குழம்பினான் மதுசூதன்.

அவனுக்கு டீ போட்டுத் தர தேயிலை வாங்கிவர மைத்ரேயி கடைக்குப் போயிருந் தாள்.

அவள் தான் தன் பெற்றோரைப் பார்க்க விரும்பிய மதுசூதனைக் கூட அழைத்து வந் திருந்தாள்.

தினசரி அவள் வரும் அதே ரயிலில்.

அவர்கள் பாலக்காட்டிலிருந்து குடி பெயர்ந்து விரிஞ்சிபுரத்தில் நிலையூன்றிய குடும்பம். துபாய்க்குப் போன அண்ணன். ஓய்வு பெற்ற அப்பா. அம்மா. ஓட்டு வீடு. பளிச்சென்று ஒரு தூய்மை. அதது இருக்க வேண்டிய இடத்தில் அடுக்கிச் சீராக்கிய ஒரு நேர்த்தி.

"என் உத்தேசம்..." என்று ஏதோ சொல்லப்

வையவன்

போனான் மதுசூதன்.

"உஸ்ஸ்..." என்று ஆசிர்வதிப்பது போல் கை உயர்த்தித் தடுத்து நிறுத்தினார் பிரபாகர வர்மா.

"அதான் மைத்ரேயி..." என்று கார்த்தியாயினி இடைமறித்தாள்.

"அவ்வளவுதான் மைத்ரேயி" என்று பிரபாகர வர்மா மேலே சொன்னார்.

அவனுக்கு நாக்கு வறண்டது.

"கொஞ்சம் தண்ணீர் குடுங்கோ" என்று கார்த்தியாயினியைப் பார்த்துக் கேட்டான்.

அவள் உள்ளே போனாள்.

வர்மா மெதுவான குரலில் சொன்னார்.



"அந்தச் சிறையிலே ஏதோ ஒரு பெரிய ஊழல் நடந்திருக்குதாமே?!"

"இருக்காதா பின்னே! எங்க தலைவர் ஆறு மாசமா அங்கேதானே இருக்கிறார்!"

— வி. ரெங்கநாதன்

"மிஸ்டர் மதுசூதன்! எங்க ரெண்டு பேர் கல்யாணமும் காதல் கல்யாணம்தான்."

அவன் இது தேவையா என்பது போல் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

"ஒங்களை எனக்குப் புரியறது! என்னை எங்க வீட்டுக்காரிக்குப் புரிஞ்சது. மைத்ரேயி?" என்று கையைத் தூக்கி வானத்தைக் காட்டி முகம் இறக்கி உதடு பிதுக்கித் தலையசைத்தார்.

"மைத்ரேயியை ஒங்களுக்குப் புரியலியா?" என்று மதுசூதன் விளக்கம் கோரினான்.

"காலம் அப்படியிருக்கு! ட்ரை யுவர் பெஸ்ட். நீங்க நல்லவர். புத்திசாலி. பொம்பளையை வலுக்கட்டாயப்படுத்த முடியாது. பூ மலர்ச்சிக்குச் செயற்கை முறை கண்டுபிடிக்கலே. முடியாது. முயற்சி பண்ணினா நாம எங்கியாவது முட்டாளாயிடுவோம்."

தண்ணீர் கொண்டு வந்த கார்த்தியாயினி, அவன் குடித்து முடித்து காலித் தம்ளரை வாங்கியபின் சொன்னாள்.

"ஒங்களை சந்திச்சப்புறம் அவகிட்டே ஒரு மாறுதல் இருக்கு. எல்லாம் நல்லபடி அமையறதிலே எங்களுக்குப் பரம திருப்தி. ஆனா அதுக்கு நாங்க ஒண்ணும் செய்யறதுக்கில்லே."

"புரியலே" என்று மதுசூதன் குறுக்கிட்டான். அவனுக்கு நிஜமாகவே புரியவில்லை.

"மைத்ரேயி மனசு வக்கணும்."

"என்னை அழைச்சுட்டு வர்றதா சொன்னாளா?"

"சொன்னா. எப்போன்னு சொல்லலே."

"என்ன சொன்னா?"

"ஒரு ஃப்ரெண்ட். எம்மேலே ரொம்பப் பிரியமா இருக்கார்னு சொன்னா" என்று கார்த்தியாயினி பதிலளித்தாள். அவனுக்கு சிறு ஏமாற்றம்.

"நீங்க ஒண்ணுமே நெனக்கலியா?" என்று இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

மதுசூதன் ஆழம் தெரியாமல் காலை விடுகிறோமே என்று முதல் முறையாகப் பயந்தான்.

அவனுடைய பயத்தின் எக்ஸ்ரே படத்தைப் பார்ப்பது போல் வர்மா அவனைக் கூர்ந்து நோக்கினார்.

மனிதருக்குத் துளைக்கிற கண்.

"என்ன இருக்கு நெனைக்க? மைத்ரேயி எங்க குழந்தை. ஒண்ணு மட்டும் தீர்க்கம். அவளுக்கும் எங்களுக்கும்..."

அவர் நிறுத்தினார்.

கார்த்தியாயினி தொடர்ந்தாள்.

"அவள் புத்திசாலி. குடும்ப கௌரவத்தைக் காப்பாத்தணும்னு நெனைக்கிறவ... அதுலே உறுதியானவ."

விரிஞ்சிபுரத்திலிருந்து வாணியம்பாடிக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்காக அன்றாடம் ரயிலில் வந்து போகிற அந்த அபூர்வமான அழகு மகள் மீது அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கை அவனை அயர்த்திற்று.

இந்த அன்றாடப் பயணத்தில் எத்தனை ஆயிரம் கண்கள். எவ்வளவு விகார மனோபாவங்கள். எப்படிக் கடக்கிறாள்?

துபாயிலிருந்து அண்ணன் அனுப்புகிற பணம். அப்பாவின் பென்ஷன். அவள் வேலை செய்யாமல் அந்தக் குடித்தனம் மூழ்கி விடாது. எதற்கு இவ்வளவு பாடுபடுகிறாள்?

மைத்ரேயியிடம் அதைக் கேட்கலாம். பதில் வராது. அவளிடம் அபூர்வமான பாஷை ஒன்று இருந்தது. மௌனம். பார்வை. இந்த இரண்டு எழுத்துக்கள் மட்டும் உள்ள மொழி.

என்ன சிக்கலான பிரச்னைக்கும் அவளால் அதில் பதில் தர முடியும். பேச முடியும். நிற்கிற எல்லையில் நில் என்று கட்டளை இட முடியும்.

எனக்கும் கூடவா என்று அவள் பாஷையிலேயே கேட்டான்.

'உனக்கும்தான்' என்று பதில் வந்தது.



"ஊழல் செஞ்சிட்டு ஜெயிலுக்குள்ள இருக்கற அரசியல்வாதிகளைப் பார்த்து ஒரு பாடம் கத்துக்கிட்டோம்!"

"என்ன பாடம்? ஊழல் செய்யக் கூடாதுன்னா...?"

"ஊகும், ஊழல் செய்து அவங்களை மாதிரி மாட்டிக்கக் கூடாதுன்னு.....!"

— நீடா.சி. இளஞ்செழியன்

பிரபாகர வர்மா வானத்துக்குக் கை உயர்த்தி உதடு பிதுக்கியது சரிதான்.

மைத்ரேயி புரிந்து கொள்ள முடியாதவள்.

அவளை ஒரு ஞாயிற்றுக்கிழமையில் ராம நாய்க்கன்பேட்டைக்கு அழைத்துப் போவதற்கு அவர்களிடம் அனுமதி கோரினான்.

"தாராளமா! அவ வரத் தயார்னா கூட்டிட்டுப் போங்களேன்" என்றார் பிரபாகர வர்மா.

"ஆட்சேபணையே இல்லே. ஆனா ராத்திரி ரயில்லே அவளை வீட்டுக்கு அனுப்பிச்சிடணும். இல்லேன்னா நாங்க கவலைப்பட்டுண்டு இருப்போம்."

என்ன தைரியம்! எவ்வளவு நம்பிக்கை!

அரைமணி நேரம் அவளை மொபெட்டில் உலுக்கிக் குலுக்கி தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். ஊர் முழுதும் வேடிக்கை பார்த்தது.

பத்து ஹார்ஸ் பவர் பாயும் ஐந்து ஏக்கர் தென்னந்தோப்பின் நடுவில் அவன் வீடு. காங்கிரீட் கட்டுமானம்.

முப்பதில் விதவையான அம்மா. இப்போது நாற்பத்தி ஐந்து. நெற்றி விபூதியிலும் நீண்ட இமைகளிலும் உதடு மடிப்பிலும் ஒரு துயரம்.

கருணை கசியும் சோகம்.

மைத்ரேயி மொபெட்டிலிருந்து இறங்கியதுமே அவள் வேகமாக நடந்து வந்தாள்.

மைத்ரேயியைப் பார்த்துச் சிரித்தாள்.

அடுத்து அவள் தோள் மீது கை வைத்தாள். வலது கையால் மைத்ரேயியின் கையை ஆதுரமாகப் பற்றினாள்.

ஒரு பெண் மற்றொரு பெண்ணுக்கு உணர்த்துகிற அற்புதமான பரிவு அந்தக் கையிலிருந்து வெளிப்பட்டது. மைத்ரேயி புரிந்து கொண்டாள்.

'விளக்கு ஏற்றி வைத்த மாதிரி இருக்கிறது' என்று அம்மா சொன்னதை மதுசூதனிடம் மறுநாள் ஸ்டேஷன் சந்திப்பில் மைத்ரேயி தெரிவித்தாள்.

"அப்புறம் என்ன சொன்னாங்க?"

"நெறைய... நெறைய."

"இதெல்லாம் எப்போ நடந்தது? எப்போ பேசினீங்க?"

"நீங்க இளநீர் வெட்டி வர ஒரு தரம். மோட்டார் பம்ப்பை ஆன் பண்ண ஒரு தரம்னு போய்ட்டீங்க இல்லே?"

"என்னென்ன சொன்னாங்கன்னு ஒண்ணு விடாமே சொல்லு."

மைத்ரேயி மௌன மொழியில் பதில் தந்தாள். சொல்ல முடிவது கொஞ்சம். முடியாதது நிறைய.

"ஒங்க ஒடம்புலேயே ஒரு பத்து ஹார்ஸ் பவர் கூடியிருக்காமே. நீங்க இப்ப விவசாயத்தைப் பிரமாதமா கவனிக்கிறீங்களாம். வாழைத்தாருக்கும் தேங்காய்க்கும் நல்ல வெலை படிய வச்சீங்களாம். பொழைப்பு மேலேயே இப்பத்தான் ஒரு கருத்து வந்திருக்குன்னாங்க."

அவன் சிரித்தான்.

ஆழமாக அவளைப் பார்த்தான்.

'உன் ரகசியங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். நீ மதுவருந்தியவன். சீட்டாடியவன். தத்தாரியாகத் தறிகெட்டுத் திரிந்தவன்.'

'உனக்கு நான் நங்கூரம் பாய்ச்சியிருக்கிறேன். நான் நினைக்கவில்லை. அப்படி அம்மா நினைக்கிறாள்.'

'உனக்குள் தீபம் ஏற்றி வைத்திருக்கிறேனாம். நான்தான் ஒன்னைக் கரை சேர்க்கணுமாம். நடக்குமா இதெல்லாம். எனக்கு நம்பிக்கையில்லை.'

அவன் நெடுநேரம் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அதைக் கவனிக்கவில்லை. அம்மா என்னென்ன சொல்லி இருப்பாள் என்று ஊகிக்க முயன்றான்.

இரண்டு மாதங்கள் இடைவிடாது மதுசூதன் மொபெட்டில் வாணியம்பாடி வந்தான்.


காதர்பேட்டையிலிருந்து ஒவ்வொரு இரவின் உதயத்தின் போது வரும் ரயிலுக்காக வண்டியைத் தள்ளிக் கொண்டே வழியெல்லாம் பேசி, மீதியை ரயில்வே ஸ்டேஷனில் பேசி, மறுநாளைக்கும் மிச்சம் வைத்தான்.

எந்தத் தரப்பிலும் பிரச்னையில்லை.

முடிவு சுபமாக, மங்களமாக இருக்குமென்று மனசு நம்பியது பரிபூரணமாக.

ஒருமாதிரி அவளைப் புரிந்து புரிய வைத்து விட்ட தெம்பு கூடியது.

அவன் பஞ்சாங்கத்தில் முகூர்த்தத் தேதிகளை எல்லாம் தேடத் தொடங்கினான்.



''தலைவர் ஏன் கோபமா இருக்கார்?''

''யாரோ 'ஹேப்பி ஜெயில் இயர்'னு புத்தாண்டு வாழ்த்து அனுப்பியிருக்காங்களாம்!''

— என். பாஸ்கர்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

ஆனால் அவளிடம் வாய் திறந்து கேட்கவில்லை.

ஒரு சனிக்கிழமை மைத்ரேயி அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தாள்.

''நீங்க என்னைப் பத்தி என்ன நெனைக்கிறீங்கன்னு தெரியும். வெரி சாரி மது!''

அவன் பேச்சின்றி நிசப்தமானான்.

''சாரதான்னு எனக்கு ஒரு பள்ளித் தோழி. ப்ளஸ் டூ வரையிலே கூட வந்தா. இதே ரயில். இதே பயணம். இதே ஊர். இங்கே இங்கே'' என்று அவள் கைநீட்டி பிளாட்பாரம் கடந்த தண்டவாளப் பின்னலைக் காட்டினாள்.

''சட்டுனு கால் தவறி கீழே விழுந்தா! என் கண் முன்னாடி. அவ ஒடம்பு சின்னாபின்னமாச்சு. எல்லாம் கண் முன்னாடி.''

இருவரையும் மௌனமாக்கி ஒரு நீண்ட கூட்ஸ் வண்டி கடந்து சென்றது.

அது போன பிறகும் அவள் மௌனமாகவே இருந்தாள். அவன் காத்திருந்தான்.

''உயிருக்குயிரா நேசிக்கறது எப்படீன்னு சாரதாதான் எனக்குக் கத்துக் கொடுத்தா. ஜஸ்ட் இதுக்குதான் இதுக்காக மட்டும்தான் அவ பொறந்தான்னு நான் அடிக்கடி நெனச்சுப்பேன்.''

மைத்ரேயி கண்கலங்குகிறாளா என்று திரும்பிப் பார்த்தான். அதைப் புரிந்து கொண்டு அவள் மெலிதாகச் சிரித்தாள்.

''எந்தத் துக்கத்தையும் சமாளிக்கக் கூட அவகிட்டே இருந்து நான் கத்துக்கிட்டேன்.''

அந்தச் சமயம் அவனுக்கு வெகு அருகில் நெருங்கி மைத்ரேயியின் கழுத்தை அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட ஓர் உந்துதல் எழுந்தது.

தவிர்த்தான்.

''மரணம் என்றால் என்னன்னு கூட அவதான் சொல்லிக் கொடுத்தா. மறக்க முடியலே மது. வாழ்நாள் முழுதும் முடியாது.''

''சில விஷயங்களை மறந்துதான் தீரணும்'' என்று குறுக்கிட்டான் மதுசூதன்.

''முடிஞ்சாத்தானே?''

அதற்கு பதிலளிக்க முடியவில்லை.

''அவ்வளவு ஆழமா ஒங்களை நேசிக்க எனக்குப் பயமா இருக்கு! அதுக்கு என்ன ஆகுமோ? அது மிதித்துத் துவைக்கப்படுமோ. அர்த்தமில்லாமே போயிடுமோன்னு கவலை வருது. ஸோ, குட்பை.''

கனமான ஒரு சம்மட்டியடி எங்கோ அவனுள் விழுந்தது.

''மைத்ரேயி'' என்றான்.

''குட்பை மது குட்பை.''

இனி எதுவும் மிச்சமில்லை என்று அவள் பார்வை அவனுக்கு உணர்த்தியது.

''இவ்வளவு ஏன் பழகினே?''

''ஒங்களைப் பிடிச்சது. இன்னமும் பிடிக்குது. நீங்க ஒரு சந்தர்ப்பத்திலே கூட எங்கிட்டே தப்பா நடந்துக்கலே. அதுக்கு இம்மியளவு கூட முயற்சி பண்ணலே. அதான்... அதான்.''

மைத்ரேயி மீண்டும் சிரித்தாள்.

மதுசூதன் ஊர் திரும்பும்போது பௌர்ணமி நிலவு வழியெல்லாம் பால் பொழிந்தது.

கோபம், ஏமாற்றம், வருத்தம் என்று எல்லா நுரைகளும் பொங்கி அடங்கி மனசு சாந்தமாயிற்று.

அம்மாவிடம் போய்ச் சொன்னால் அவளுக்குத் தாங்காது. சாதி சனம், அந்தஸ்து அன்னியம் என்று பல சங்கிலிகளை அறுத்து விட்டு அவளும் மைத்ரேயியை விரும்பினாள்.

விளக்கு ஏத்தி வச்ச மாதிரி இருக்கு என்று சொன்னவள் அல்லவா?

அவன் மொபட்டில் ஊர்ந்தவாறே யோசித்தான்.

தீபம் அணையக் கூடாது.

சாரதாவின் மரணம் மைத்ரேயிக்குள் எதையும் அணைத்து விடவில்லை.

மைத்ரேயி மீது கொண்ட காதல்?

அதற்குப் பின் அவன் வாணியம்பாடி வந்தான். வெவ்வேறு வேலையாய். காதர்பேட்டைக்கும் போனான். எக்ஸ்போர்ட் யூனிட்டைப் பார்ப்பதில்லை. சில நெறிமுறைகளை மௌனமாகத் தன் பாணியில் மைத்ரேயி கற்றுக் கொடுத்திருந்தாள்.

ராமநாய்க்கன்பேட்டையில் பள்ளியில் எப்போதாவது கொடியேற்றுகிற சமயம் மதுசூதன் கடக்க நேர்ந்தால் கொடி உயரும் வரை நிற்பான்.

அது மைத்ரேயி தைத்துக் கொடுத்த கொடி. அது அலை வீசிப் பறக்கிறதைப் பார்ப்பதில் ஒரு பெருமிதம் தெரியும்.

மதுசூதன் அதை விரும்பினான். மகிழ்ச்சியடைந்தான்.

ஸ்ரீராமஜெயம்
ஸ்ரீ காமாக்ஷி துணை

ஜயஜய சங்கர — ஹரஹர சங்கர

ஸ்ரீ அதிருத்ர மஹாயக்ஞ மஹோத்ஸவம்
பூஜ்யஸ்ரீ பரமாசார்யாள் அவர்களின்
3-வது வருட ஆராதனை
29.12.96 முதல் 06.01.97 வரை

உலக மக்களின் சுபிக்ஷத்திற்காகவும், ராஜ்யாதிகாரிகளின் நற்சிந்தனைக்கும், இயற்கை இன்னல் உபாதைகள் குறையவும் காலாகாலங்களில் மழை வர்ஷிக்கவும் பூஜ்யஸ்ரீபரமாசார்யாளின் பரிபூரண அனுகிரஹ பலத்தாலும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் பூரண ஆசியுடனும் பரமேஸ்வர கிருபையாலும், நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீதாத்ரு வருடம் மார்கழி மாதம் 15 (29.12.96) முதல் 22 (06.01.97) முடிய தஞ்சாவூர் வடக்கு வீதி ஸ்ரீஜெயேந்திர ஸரஸ்வதி நர்ஸரி பள்ளியில் ஸ்ரீ அதிருத்ர மஹாயக்ஞமும் ஸ்ரீ பரமாசார்யாளின் 3வது வருட ஆராதனையும் விமரிசையாக நடைபெறும்.

பக்தகோடிகள் திரளாக வந்து மேற்படி வைபவத்தை சிறப்பித்து பரமேஸ்வர அருளையும் ஸ்ரீ ஆசாரியாளின் அருளையும் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உத்ஸவ நாட்களில் வேத இதிஹாஸ சண்டி திருமுறை தேவார பாராயணங்கள் நடைபெறும். நிதி, பூஜைக்கு, அன்னதானத்திற்கு வேண்டிய பொருட்களை உதவி செய்ய வேண்டிய முகவரி :

ஸ்ரீ சங்கர பக்தஸபா,

364, மேல வீதி, தஞ்சாவூர் – 613 009.



இலக்கியத்தின் உஷ்ண மூச்சுகள்...

நல்ல சிறுகதை வண்ணத்துப் பூச்சி போன்றது. அடித்துப் பிடித்து கசக்கி விடாமல் அதன் போக்கிலேயே விட்டு, வண்ணம் உதிராமல் பிடிக்கத் தெரிந்த மிக சொற்பமான தமிழ் எழுத்தாளர்களுள் மேலாண்மை பொன்னுச்சாமி முக்கியமானவர்.

அவருடைய சமீபத்திய சிறுகதைத் தொகுப்பு அவருடைய வெகுஜன வெற்றிக்கு இன்னொரு சான்று. ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு வண்ணத்துப் பூச்சி.

நம் மீது உட்கார்ந்து பறந்த பின்பும் அது உதிர்த்து விட்டுப் போகிற வர்ணத் துகள் நம் மீது ஒட்டிக் கொண்டிருப்பதை உணர முடிகிறது.

பொதுவாகவே மேலாண்மைக்காரரின் பார்வையில் உயிரற்ற பொருட்களுக்குக் கூட மூச்சு வந்து விடுகிறது. 'பசு' கதையில், அம்மா தந்த சீதனப் பாத்திரங்கள் ஜப்தி செய்யப்படும் போது,

"இவளுக்குள் உயிர் கொதித்தது... 'கணங், கணங், கணங்'கென்ற சப்த சிணுங்கல்களோடு சிதறிய வெங்கலப் பாத்திரங்கள். அம்மாவின் எலும்புகள். சதைத் துண்டுகள். கண்கள். கனவுகள். அம்மாவின் உயிர்த்துளிகள்."

வெண்கலப் பாத்திரங்களையே உயிரோடு பார்க்கத் தெரிந்தவருக்கு பச்சை மரங்களும், இயற்கையின் பசுமையும் காயப்படுத்தப்படும் போது தாங்க முடியுமா? வாழ்க்கைப்பட்டுப் போன தங்கச்சியும், பிரசவத்திற்கு அம்மா வீட்டிற்குப் போயிருக்கும் பெண்டாட்டியும் மாரித்தாயாக கும்பிட்டு வந்த வேப்பமரத்தை, வீடு கட்டுவதற்காக வீழ்த்த முடிவாகும் போது பழநிச்சாமி பதைக்கிறான்.

'உயிர்க் காற்றில்' ஒலிக்கும் இதே இயற்கை சுவாசம் 'மாயமாகும் மயில் உலக'த்திலும் தொடர்கிறது. "லேசாகக் காற்று வந்து கிச்சலம் காட்டினால் கூட மரம் முழுக்க சின்னப் பிள்ளைகள் சிரிப்பாக கலகலக்கும்."

பொன்னுச்சாமியின் பார்வை மானுடங்களின் மீது பாயும்போது, இன்றைய சமூகத்தில் மனிதநேயம் உலர்ந்து போன காட்சிகளே அவரை அடிக்கடி தாக்குகின்றன. வறுமைக்கோட்டைக் கீழிருந்து முட்டும் வியர்த்த உழைப்பாளிகளின் முற்றங்களில் அவர் கதைகள் அதிகம் உலவுகின்றன.

கடுகாட்டுக்குப் 'போகிற' பயணங்களையே பார்த்துப் பழகிய நம் கண்களுக்கு கடுகாட்டு வேலிக்கு உட்புறம் நின்று, 'வருகிற' பயணமாய் சங்காண்டியின் பார்வையை அவிழ்த்து அரளச் செய்கிறார். கதையின் முடிவில் நம் உடம்பில் ரத்த விளாறுகள்.

லோன் கிடைக்குமென்று சொல்லி கரும்பு விதைக்கத் தூண்டி, பின் கைவிடும் சர்க்கரை மில்லுக்காரர், பொய்த்துப் போன ராமசுப்புவின் உழைப்பை குறைந்த ரேட்டில் சாதகமாக்கிக் கொள்வதை நமக்கு வலிக்கும்படி நடத்திக் காட்டுகிறார்.

உழைப்பாளியின் நம்பிக்கையை 'பிரிவு' கதையில் நரம்பு பிடித்துப் பார்க்கிறார். கசக்கப்படும் நேரத்திலும் உழைப்பாளி நிமிர்ந்து நியாயம் கேட்பதைப் பொறுக்க முடியாத 'மேல்' சமூகத்தை 'பூமிக்குப் பொறுக்காது'விலும், 'ஒருநாள்' கதையிலும் நிழலாக்கிக் காட்டுகிறார்.

'சபிக்கப்பட்ட ஆன்மாக்க'ளில் கைவைத்தியம் செய்யும் கிராம மக்களின் தோள்களோடு உரசிக் கொண்டு அந்த சிறுவனின் உயிர் பிழைக்க நாமும் பதறுகிறோம். வர மறுக்கும் டாக்டரை 'செவுட்டுல' அறைஞ்சு இழுத்து வரத் துடிக்கிறோம்.

வறுமை மிக்க அம்மாவுக்கும், வினையாட்டு மாறாத பாலகனுக்கும் இடையில் உள்ள உறவை அவருடைய பல கதைகள் சீண்டிப் பார்க்கின்றன. அடுத்தடுத்த கதைகளாக இடம்பெற்றிருக்கும் 'கூமுட்டை'யும், 'கலர்க் கலராய் ஆசை'யும் இந்த உறவின் ஒரே நாதத்தின் இரண்டு ரீங்காரங்களாய்த்தான் தெரிகின்றன.

வர்க்கப் போராட்டங்களின் கசப்பையும்,

படித்ததில் பிடித்தது:

மனித அகங்காரத்தின் அநாவசியத்தால் அடிபட்டுப் போகிற தோழமையையும் 'தாய்மை' கதையில் முள் குத்தாமல் பூவெடுக்கிற சாமர்த்தியத்தோடு கையாள்கிறார். ஒரு கிராமத்துப் பெண்ணின் பக்குவமற்ற 'பார்வை'யை, பஸ்ஸின் அடைத்த ஜனங்களுக்கு மத்தியில் மூச்சுத் திணற வைத்து நமக்கு உணர்த்துகிறார்.

'நான் வாழ்ந்து உணர்ந்த தனத்தையும், மனிதர்களையுமே இலக்கியமாகப் பிரதிபலிக்க வேண்டும்' என்ற பொன்னுச்சாமியின் கூற்று தொகுப்பின் அத்தனை கதைகளிலும் எதிரொலிக்கிறது.

'எல்லா இலை நுனிகளிலும் முத்துப் புல்லாக்கு தொங்குவது போல மழை நீர்த்துளி..'

'கழுவித் துடைத்தவுடன் உடம்பே புடைத்தெடுத்த தான்யம் மாதிரி பளிச்சென்றிருந்தது...' போன்ற பிரயோகங்கள் ஓடுகிற ஓட்டத்தில் நம்மை மிதித்து நிறுத்துகின்றன.

தொகுப்பில இடம்பெற்றிருக்கும் பதின்மூன்று சிறுகதைகளும் ஒரு வருட அவகாசத்திற்குள் வெளிவந்தவை என்பது மட்டும் ஒரு சின்ன உறுத்தல். வெவ்வேறு காலத்தில் வெளியான கதைகளைத் தொகுக்கையில் தான் ஒரு படைப்பாளியின் முழுவீச்சைப் பார்க்க முடியும். ஒரு வருடம் என்பது ஒரு சாவித் துவாரம் மாதிரி.

ஆனாலும், பகல் பூராவும் வெளிச்சம் காட்டும் சூரியனை விட, இருட்டு வானத்தைக் கிழித்துக் காட்டும் சிறு மின்னல்களுக்குத்தானே கவர்ச்சி அதிகம்? பலம் அதிகம்? பொன்னுச்சாமியின் சிறுகதைகள், அதனால்தான், இலக்கியத்தின் உஷ்ண மூச்சுகளாக விழுகின்றன.

— சுரேஷ்-பாலா

உயிர்க்காற்று/ மேலாண்மை பொன்னுச்சாமி, குமரி பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 1, விலை ரூ. 38/-

பார்வைக்கு வந்தவை

- ***இது இருபதாம் நூற்றாண்டின் கதை/முக்தா சீனிவாசன்/கங்கை புத்தக நிலையம், சென்னை - 17./ரூ. 30.***

ஒரு சினிமாக்காரரின் சினிமாத்தனம் அதிகம் இல்லாத சிறுகதைகளின் தொகுப்பு.

- ***இனிய தமிழில் இலக்கணப் பிழையின்றி எழுதும் முறைகள்/கோ. பெரியண்ணன்/வனிதா பதிப்பகம், 9ஏ, மேக்மில்லன் காலனி, நங்கநல்லூர், சென்னை - 61/ரூ. 40***

பொது இலக்கண வகைகளிலிருந்து பாட்டெழுதுவது வரைக்குமான இலக்கண முறைகள். உபயோகமான நூல்.

- ***இன்றும் நாளையும் இளைஞர்கள் கையில்/ஜோதிர்லதா கிரிஜா/வானதி பதிப்பகம், சென்னை - 17/ரூ. 45.***

நல்ல விஷயங்கள். போதனைப் பாணியைத் தவிர்த்திருக்கலாம்.

- ***தடுமாற்றங்கள் பதினஞ்சு/ஏ.ஏ.எச்.கே. கோரி/D-109, முதல் மெயின் ரோடு, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை - 102./ரூ. 24.***

சில நல்ல சிறுகதைகள் உள்ளன.

- ***அன்னமாச்சார்யா/அடபாராமகிருஷ்ணராவ்/சாகித்ய அகதமி வெளியீடு, இரவீந்திர பவன், 35, பெரோஸ் ஷா சாலை, புதுதில்லி - 1/ரூ. 15.***

காலத்தால் அழியாத பல அற்புத பக்தி கீதங்கள் படைத்த அன்னமாச்சார்யாவின் வாழ்வும் பணியும். பல கீர்த்தனைகளை மொழியாக்கம் செய்திருப்பது பாராட்ட வேண்டிய விஷயம்.

- ***என் வீட்டுக்கு எதிரே ஓர் எருக்கஞ்செடி/தமிழன்பன்/பாப்லோ பாரதி பதிப்பகம், ஜி-1. லாயிட்ஸ் குடியிருப்பு, சென்னை - 14./ரூ. 30.***

அருமையான புதுக்கவிதைத் தொகுப்பு. ஆசிரியர், மொழியைக் கையாளுகிற லாகவம் மிக நேர்த்தி.

- ***சிந்தனை செய்வோம்/நெல்லை க. முத்து/வானதி பதிப்பகம், சென்னை. - 17/ரூ. 22.***

குப்பையைத் தூக்கி எறிபவர்களிடம், நூறு கிராம் குப்பைக்கு ஒரு ரூபாய் அபராதம் வசூலிக்கலாமே என்று கேட்கிறார் ஆசிரியர். இது மாதிரி நிறைய விஷயங்கள். (எத்தனை குப்பையை யார் எறிகிறார்கள் என்று யார் தராசும் கையுமாக உட்கார்ந்து எடைபார்ப்பது?)

- ***பகவத்கீதை/அரிமதி தென்னகன்/இலக்குமி நிலையம், 53, கௌடியாமடம் சாலை, சென்னை - 14/ரூ. 30.***

பகவத்கீதைக்கு 'எளியநடை, எழுச்சி உரை' தந்திருப்பதாக ஆசிரியர் சொல்கிறார். முதல் பகுதி மட்டுமே சரி.

- ***மேலிடங்கள்/கப்ர.பாலன்/கங்கை புத்தக நிலையம், சென்னை - 17/ரூ. 24.***

நல்ல சிறுகதைத் தொகுதி. 'பூந்தொட்டி' என்கிற சிறுகதை, தொகுப்பின் சிகரம்.

- ***விட்டு விடுதலையாகி, (ரூ. 27), பூக்களை மிதிப்பவர்கள் (ரூ. 35)/பிரபஞ்சன்/கவிதா பப்ளிகேஷன், 8, முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டிபஜார், சென்னை - 17.***

அசலான மனிதர்கள். அசலான சம்பவங்கள். மிகைப்படுத்தப்படாத வருணனைகள். பிரபஞ்சனின் இந்தச் சிறுகதைகள், திரும்பத் திரும்பப் படித்து மகிழ வேண்டியவை.

சந்தேகம்...

● முன்கதையில் –
'அரங்கு நிறைந்த' காட்சிகளைப்
பார்த்தபோதும்
அவரது நடிப்புத்திறமையில்
சந்தேகம் இருந்தது!

பின்கதையில்–
'வீடு நிறைந்த' காட்சிகளைப்
பார்த்த பிறகு
எங்கள் சந்தேகம்
இப்போது தீர்ந்தது!

● தோட்டைக் கழற்றிக்
கோழியை விரட்டிய
'சங்ககாலம்தான்
விளைச்சல் மிகுந்ததோ?'
சந்தேகம் இருந்தது!

நூறு ரூபாய் நோட்டுக்கட்டு
சாலையில் கிடக்க,
ஐநூறு ரூபாய் நோட்டுக்கற்றை
ஆற்றில் மிதக்க,
'விளைச்சல் மிகுந்த காலம்
எது' எனும் சந்தேகம்
இப்போது தீர்ந்தது!

● தனிநபர் வருமானம்
குறைந்து போனதாய்
சிந்தனாவாதிகள்
சொல்லிய போதும்
சந்தேகம் இருந்தது!

மந்திரி மைந்தர்
எட்டுவயதுப் பையர்
வருமான வரி செலுத்தவும்
எங்கள் சந்தேகம்
இப்போது தீர்ந்தது!

– நா. முத்துநிலவன்

இன்டர்நெட்டில் பிடித்தவை:

"**ப**திமூணு ஏக்கர் பரப்புலே கட்டடம்... பாளம் பாளமா கல்லு எழுச்சுக் கட்டினது... உள்ளே எண்ணி மாளாத அறைகள்... அதிலே எல்லாம் பண்ட பாத்திரம்... உடுப்பு... துடுப்பு... செருப்பு..."

கம்ப்யூட்டரிலிருந்து தலையை உயர்த்தி அச்வின் கள்ளச்சிரிப்புச் சிரித்தான்.

"இன்டர்நெட்லேயும் வந்தாச்சா?" ஆவலாகக் கேட்டபடி பக்கத்தில் போனேன்.

"அரசாங்கமே போட்டு வச்சு, வந்து பாத்துட்டுப் போங்கன்னு கூப்பிடறாங்க... எகிப்து அரசாங்கம்..."

கம்ப்யூட்டர் திரைமுகப்பில் 'http://www.idsc.gov.eg' என்று அவன் போயிருந்த விலாசம். எகிப்து அரசாங்கத்தின் சுற்றுலாத் துறையின் தகவல் பக்கங்கள்!

அச்வின் சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தது, தலைநகர் கெய்ரோவுக்குப் பத்து கிலோமீட்டர் தூரத்தில் வானளாவ நிற்கும் கிஸா பிரமிட்டின் படம். நீலவானப் பின்னணியில் உயர்ந்து தெரியும் பிரமிடின் முன்னால் யாரோ ஒட்டகத்தில் ஊர்ந்து கொண்டிருக்க, பின்னால் எல்லையே இல்லாமல் மணல் விரிக்கும் பாலைவனம்.

கிட்டத்தட்ட நாலாயிரத்து ஐநூறு ஆண்டுகள் முன்னால் எகிப்தை ஆண்டவர்களுக்காகக் கட்டப்பட்டது. சுற்றமும் நட்பும் சூழ, இகலோக இன்பம் அனுபவிக்க இல்லை, மூச்சு விட மறந்த பிறகு உடலைப் பத்திரமாகக் கிடத்தி வைக்க! உள்ளே வைத்த எதுவும் ஆயிரம் ஆயிரம் வருடம் கெடாமல் பாதுகாத்து வைப்பது பிரமிடின் கட்டட அமைப்பு ரகசியம். இங்கே, தைலம் தேய்த்துப் போர்வை எல்லாம் போர்த்தி மூடி, பேக் செய்து வைத்த இந்த ராஜ சவங்களை மம்மி என்று அழைக்கிறார்கள். ("செத்ததுக்கு அப்புறம் அழைச்சா எப்படி கேக்கும்?")

"146 மீட்டர் உயரம் வர மாதிரி கட்டின அரசினர் மாளிகை... இப்ப அளந்தா, 137 மீட்டர்தான் இருக்காம்..."

"இவ்வளவு லேட்டாகவா விசாரணை நடத்திக் கண்டு பிடிச்சாங்க? யார் காலத்துலே நடந்த ஊழலாம்?"

"இது வேறே மாதிரி சுரண்டல்... வரண்ட பாலைவனக் காற்று பட்டுப் பட்டு அரிச்சு எடுத்துடுத்தாம்..."

அச்வின் 'எலிக்குட்டி'· நகர்த்தி, "இந்த அறையில் இருப்பதைப் பார்த்தீர்களா நேயர்

வீரமணி கவனிக்க வேண்டிய பெரியார் பக்கம்!



கனே..." என்று கேபின் டீ.வியின் உணர்ச்சி வசப்பட்ட வர்ணனைக் குரலில் சொல்லிக் கொண்டு நுழைந்த பிரமிடின் உள்ளறை ஒன்றில் எட்டுக்கால் பூச்சி போல தரையில் ஏதோ ஒரு பொருள்.

செடார் மரத்தில் செய்த படகின் புகைப் படம் அது. படகு எதற்கு? அரசர், சாவு ஆற் றைக் கடந்து சொர்க்கக் கரை சேரத்தான். துடுப்புப் போட? நோ ப்ராப்ளம். ஒரு பத்து அடிமைகளை உயிரோடு புதைத்து விட்டால் தீர்ந்தது. தீர்த்திருக்கிறார்கள்!

பிரமிடிலிருந்து வெளியே வந்து ஆஸ்வான் நதி தீரத்தில் சூரிய பகவானுக்கு இரண்டாம் ராம்சே மன்னன் கட்டிய கோயிலில் நுழைந் தோம். இதுவும் நாலாயிரத்துச் சில்லறை வருடம் புராதனமானதுதான்!

மகா புனிதமானதாகக் கருதப்பட்ட இந்தக் கோயில் கர்ப்பக்ருகத்தில் சூரிய வெளிச்சம் ஆண்டுக்கு இரண்டு தடவை -பிப்ரவரி 21, அக்டோபர் 22 மட்டும்தான் விழுமாம். இந்த இரண்டு நாளும் என்ன விசேஷம்? முதலாவது ராம்சே மன்னன் பிறந்த நாள்... அடுத்தது அவன் முடி சூடிக் கொண்டது!

சூரியன் கோவிலுக்குப் பக்கத்திலேயே இன்னொரு பிரம்மாண்டமான கட்டடம். ராம்சே கோயில்! வாசலிலேயே ராம்சே, அவன் மனைவி பேரழகி நெபத்தரி, மன்னன் மகன், மகள் - பேமிலி போட்டோ போல, பேமிலி சிற்பம்.

"இயந்திரமும் தொழில் நுட்பமும் இல்லாத அந்தக் காலத்திலேயே இப்படி அசுர சாதனை செய்தது எப்படி?" என்று ஆச்சரியப்பட்டேன்.

"அசுர சாதனையாவது, வெங்காயமாவது– எத்தனை அடிமைகளோட ரத்த வியர் வையோ எல்லாம்..."

வெங்காயம் குரலில் வர, விரல்கள் கொடுத்த விலாசம்- "http://www.cabot.nf/ca/Periyar." தந்தை பெரியார் தகவல் பக்கம்!

வெண்தாடி வேந்தரின் புகைப்படத் துக்குக் கீழ் போட்டு வைத்த தகவல்படி, தந்தை பெரியார் என்ற பட்டம் 1938ல் சென்னையில் நடந்த பெண்ணுரிமை மாநாட்டில் வழங்கப் பட்டதாம். பெரியார் சுயமரியாதை பிரசார நிறுவனம் 1952ல் தொடங்கப்பட்டது.

"பெரியாரைப் பற்றி இன்னும் நிறையச் சொல்லலாம்... கொஞ்சமாத்தான் போட்டு வைச்சிருக்காங்க" என்றான் அச்வின்.

பெரியார் சிடி-ராம் வெளியிடும் போது வீரமணி நிச்சயமாக இதையும் நினைவு கொள்வாரா?

— இரா.முருகன்

(இன்டர்நெட் கம்ப்யூட்டர் உதவி: SAP Computers(P)Ltd, Chennai-17)



கோபாலா கோபாலா

'சிரிக்க வைப்பது; அதுவும் ஒரு நொடி இடைவெளி விடாமல்' என்று முடிவு செய்து கொண்டு, நீண்ட நாட்களுக்குப்பின் சொந்த டைரக்ஷனில் இறங்கியிருக்கிறார் பாண்டிய ராஜன்.

முயற்சியில் முழு வெற்றி என்பதை முதலிலேயே சொல்லிவிட வேண்டும். அந்த அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிக்குப் பாண்டிய ராஜன் அடுப்பு, கரண்டி சகிதம் புதிதாகக் குடி வருகிறபோதே களை கட்டி விடுகிறது.

ஸ்டார் ஓட்டல் சமையல்காரர். அவரிடம் வலிந்து வந்து புதிய சமையல் ஐட்டங்கள் கற்றுக் கொள்ளும் ஃபிளாட் பெண்கள். பொறாமைப் பார்வை வீசும் அவர்தம் கணவன்மார்கள்.

திருட்டு முழி ஆசாமியை பேக்-அப் பண்ண அவர்கள் எடுக்கிற முயற்சிகளெல்லாம் பணாலாக, கோபாலனாக வரும் பாண்டியராஜனைச் சுற்றி எப்போதும் கோபியர் குவிந்தே இருக்கிறார்கள். அவர்களுக்குச் சமையல் சொல்லித் தருவதோடு மட்டுமின்றி அவரவர் குடும்பப் பிரச்னைகளுக்கும் தீர்வு சொல்கிறார்.

அடுத்தவர் பிரச்னைகளைத் தீர்க்கிறவருக்கு சொந்தமாக ஒரு பிரச்னை பூதம் வந்தால்?

கேள்விக்குறியோடு இடைவேளை. பிறகு குஷ்பு.

தாலி கட்டி முடித்த பின், பாண்டியராஜன் ஏற்கெனவே திருமணமானவர் என்பது தெரிய வர, இனி படம் சீரியஸ் டிராக்குக்கு மாறிவிடும் என்று எதிர்பார்த்தால், வெகு புத்திசாலித்தனமாகக் காட்சிகளை நகைச்சுவையில் தோய்த்தே நகர்த்திப் போயிருக்கிறார் பா.ராஜன்.

அவரது டைரக்ஷன் சாமர்த்தியத்துக்கு அந்த லிஃப்டில் வெஜிடபிள் பிரியாணி செய்கிற அந்த ஒரு காட்சி போதும்.

ஒரு ப்ரீஃப்கேஸுக்குள் எத்தனை எத்தனை சமாசாரங்கள்? அவர் வந்து இரண்டடி லிஃப்டில் ஒரு விருந்து தயார் செய்கிற சமயம் மலைப்பது குஷ்பு மட்டுமல்ல; நாமும்தான்!

இத்தனை சாமர்த்தியத்தை இத்தனை நாள் எங்கே ஒளித்து வைத்திருந்தார்?

குஷ்பு மிக மிக குண்டாகி விட்டார். பாண்டியராஜனுக்கு ஜோடியாக நினைத்துப் பார்க்கவே மலைப்பாக இருக்கிறது. அவர் பக்கத்தில் பா.ரா வரும்போதெல்லாம் டீச்சர் முன் ஸ்டூடன்ட் போல! டான்ஸெல்லாம் வேறு ஆடும்போது மிக பயமாக இருக்கிறது. பொதுவாக ஹீரோக்கள்தான் ஹீரோயின்களை அடிக்கடி அலேக்காகத் தூக்குவார்கள். இதில் வைஸ் வர்ஸா.

ஓரிடம்கூட அலுப்பூட்டாத திரைக்கதை மட்டும் இருந்துவிட்டால் எத்தனை பழைய கதையையும் சகிக்கச் செய்துவிட முடியும் என்பதற்கு இந்தப் படம் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.


வசனங்கள் நிறைய இடங்களில் வெட்டு வாங்கி, வெறுமனே வாயசைக்கிறார்கள். அதையும் மீறி சில இரட்டை அர்த்தங்கள் கேட்கின்றன. அவை இல்லாமலேயேகூட இந்தப் படம் சிரிக்க வைத்திருக்கும்.

— ஆர்.பி.ஆர்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

உயிர் வாழ உதவுங்களேன்....





என் இனிய நண்பர்களே,

ஒரு ஆயிரம் பேர், யார் யாரோ, யார் அறிவார், சொந்தமில்லை, சாதி, மத பேதமில்லை, உள்ளவர் இல்லாதவர் என்ற வேறுபாடில்லை, வந்தவர்களெல்லாம் சொந்தமாய், பந்தமாய் யாருடைய பெற்றோருக்கோ மகனாய், மகளாய் யாருடைய சகோதரருக்கோ சகோதரராய், யார் பெற்ற பிள்ளைகளுக்கோ தகப்பனாய், தாயாய் வாழ்ந்து, உதவி, உதவும்கரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பார்த்தீர்களா நாங்கள் வாழ்ந்த இல்லங்களை இயற்கையின் சீற்றத்தால் உருவான மழையாலும், வெள்ளத்தாலும், எல்லாமே பறிபோனது.

- எங்கள் உயிரைத்தவிர
இன்று மீண்டும் தவிக்கிறோம்.

உயிர் காக்க உதவுங்கள்
உயிர் வாழ உதவுங்கள்
உங்கள் **வித்யாகர்**

நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

உதவும் கரங்கள் 460, என். எஸ். கே. நகர், சென்னை–600106.

M.O. / D.D. மூலமாக நன்கொடைகள் அனுப்பலாம். / நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

